# அருகன் துதிமாலை

(முதல் தொகுதி)

தொகுப்பு :
புலவர்மணி மு. சண்முகம் பிள்ளை

ஆசாரியர் குந்த குந்தர் தத்துவப் பரப்பு மையம்,
குந்த குந்தர் நகர்,
வடவணக்கம்பாடி அஞ்சல் - 604 502.

முதல் பதிப்பு : 1987

படிகள் : 500

விலை : ரூ. 8—00

அச்சிட்டோர் :

ஆசாரியர் குந்த குந்தர் அச்சுப் பயிற்சி நிலையம்,
குந்த குந்தர் நகர் - 604 502.

# அருகன் துதிமாலை

தொகுப்பும் குறிப்புரையும்

சென்னை

பதிப்புச்செம்மல்
**புலவர்மணி மு. சண்முகம் பிள்ளை,**
சிறப்புநிலைப் பேராசிரியர்,
சுவடிப்புலம்–ஓலைச்சுவடித்துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

**தத்துவப் பரப்பு மையம்**
குந்த குந்தர் நகர்–604 502

# பதிப்புரை

நம் பாரத நாட்டில் பிறந்த சமயங்களுள் அருக சமயமும் ஒன்று; இது மிகவும் பழமையானது. நம் தமிழ்நாட்டில் கிறிஸ்து பிறப்பதற்கு முன்பே இச்சமயம் வேரூன்றியிருந்த செய்தி வரலாற்றுச் சான்றுகளால் தெளிவாகிறது. சமய போதனைகளுடன் தமிழ் மொழிக்கு இச்சமயத்தார் படைத்துள்ள இலக்கியம், இலக்கணம், நிகண்டு முதலிய நூற் செல்வங்கள் பலவாம். சங்க இலக்கியம் தொட்டே இலக்கியங்கள் முதலியவற்றில் அருகக் கடவுளைப் பற்றிய செய்திகள் பலவாகக் காணப்படுகின்றன. திருக்குறள், நாலடியார் முதலிய அறநூல்களும், பெருங்கதை, சீவகசிந்தாமணி, சூளாமணி முதலிய பெருங்காவியங்களும், யசோதரகாவியம், நாககுமார காவியம் முதலிய சிறு காவியங்களும், நேமிநாதம், நன்னூல் முதலிய இலக்கணங்களும், திவாகரம், சூடாமணி முதலிய நிகண்டுகளும் சமணசமயச் சான்றோர்களால் தமிழுக்குத் தரப்பட்டன.

மேலே சுட்டிய நூல்களில் எல்லாம் அங்கங்கே அருகன் துதி மலர்கள் காணப்படுகின்றன. பின்னாளில் பல சிற்றிலக்கியங்களும் அருகன் புகழைப் பேசுகின்றன. திருநூற்றந்தாதி, திருக்கலம்பகம், திருப்பாமாலை, ஜிநேந்திர ஞானத் திருப்புகழ் முதலியவை தோத்திர நூல்களாகும். அப்பாண்டைநாதர் உலா, அடிமதிக்குடி ஐயனார் பிள்ளைத் தமிழ், மேருமந்திரமாலை, ஜீவேந்திர சரிதம், பார்சுவநாதர் அம்மானை போன்ற சிற்றிலக்கியங்களிலும் துதிப் பகுதிகள் உள. திருநறுங்கொண்டைப் பத்துப் பதிகம், தீபங்குடிப்பதிகம் போன்ற பதிகப் பாமாலைகளும் உள; யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை முதலிய நூல்களின் உரைகளிலே உரையாசிரியர் எடுத்துக் காட்டாகத் தந்துள்ள பாடல்கள் பலவும் அருகன் துதிகளே.

இவ்வாறாகத் தமிழ் நூற்பரப்பில் மிளிரும் அருகன் துதிகளை எல்லாம் ஒருங்கு திரட்டின் காலந்தோறும் வந்த துதிப்பாடல்களின் போக்கினை நாம் நன்கு உணர்தல் கூடும். நாள்தோறும் பாராயணம் செய்யவும் உறுதுணையாயிருக்கும். இம் முயற்சியின் முதல் தொடக்கமே இந்தத் துதிமாலை. இதில் சீவக சிந்தாமணிப் பெருங்காவியத்தில் திருத்தக்க தேவர் தந்துள்ள துதிப்பாக்கள் திரட்டித் தரப்பட்டுள்ளன. இவை பொருள் அடிப்படையிலும் பாமுறை ஒப்புமையிலும் பாகுபடுத்தி அமைக்கப்பட்டுள்ளன. இப் பாடல்களின் பொருளை விளங்கிக் கொள்வதற்குத் துணையாகக் குறிப்புரையும் சேர்க்கப்பட்டிருக்கிறது. இதனைத் தொடர்ந்து ஏனைய நூல்களில் காணும் துதிமாலைகளும் தொடர்ந்து வெளியிடப்பெறும்.

மு. சண்முகம் பிள்ளை.

# அருகன் துதிமாலை

## திருத்தக்கதேவர் தரும் துதிமாலை

### சித்த சரணம்

**1 மூவா முதலா உலகம் ஒருமூன்றும் ஏத்த,**
**தாவாத இன்பம் தலையாயது, தன்னின் எய்தி,**
**ஓவாது நின்ற குணத்து ஒள்நிதிச் செல்வன் என்ப-**
**தேவாதி தேவன்; அவன்சேவடி சேர்தும் அன்றே.**

---

### குறிப்புரை

1 *சீவகசிந்தாமணி, 1* சித்தசரணம் - சித்தனை வணங்கும் வணக்கம். சித்தன் ஆவான் காதி, அகாதி என்னும் இருவகைக் கருமங்களையும் வென்று பரிநிர்வாணம் பெற்று மூவுலகத்து உச்சியில் இருப்பவன். மூவா முதலா உலகம் - அந்தமும் ஆதியும் இல்லாத உலகம்; உலகம் மூன்று-மேலுலகம், நடு உலகம், கீழுலகம்; உலகம் ஆக்கப்படாதது என்பது சைன மத சித்தாந்தம்; தாவாத-கெடாத; தலையாயது - ஒப்பற்றது, சிறந்தது; தன்னின் எய்தல் - தன்னால் பெறுகை. 'தன்னில் எய்தி' என்றும் பாடம் உண்டு; அதற்கு மணியினது ஒளியும் மலரினது நாற்றமும் போலத் தன்னுள்ளே பெறுதல் என்பது பொருள். ஓவாது-விட்டு நீங்காது; ஒள் நிதிச் செல்வன்-வீடாகிய விளங்கிய நிதியையுடைய செல்வன்; தேவாதிதேவன்-தேவர்களுக்கு முதல்வனாகிய கடவுள்; சேவடி சேர்தும் - திருவடிகளை வணங்குவோம்.

## அருகன் சரணம்

2 செம்பொன் வரைமேல் பசும்பொன்எழுத்து
[இட்டதேபோல்,
அம்பொன் பிதிர்வின் மறுஆயிரத் தெட்டுஅணிந்து,
வெம்பும் சுடரின் சுடரும்திரு மூர்த்தி, விண்ணோர்
அம்பொன் முடிமேல், அடித்தாமரை சென்னி வைப்பாம்.

## தன்ம சரணம், சாது சரணம்

3 பல்மாண் குணங்கட்கு இடனாய்,பகை நண்பொடு
[இல்லான்,
தொல்மாண்பு அமைந்த புனைநல்அறம், துன்னி நின்ற
சொல்மாண்பு அமைந்த குழுவின்,சரண் சென்று தொக்க
நல்மாண்பு பெற்றேன், இதுநாட்டுதல் மாண்பு
[பெற்றேன்.

---

2 சீவக. 2 அருகசரணம்-அருகக் கடவுளை வணங்கும் வணக்கம். செம்பொன் வரை-மேருமலை; பிதிர்வின்-பொடிபோல; மறு ஆயிரத்தெட்டு-ஆயிரத்தெட்டு மறு; பத்மம்,சங்கம், மத்ஸ்யம், ஸ்ரீவத்ஸ்யம் முதலிய இரேகைகள் நூற்றெட்டும் மஸூரிகை முதலிய அடையாளங்கள் தொள்ளாயிரமும் ஆக மறுக்கள் ஆயிரத்தெட்டு; ஸ்வஸ்திகம், நந்தியாவர்த்தம் முதலிய இரேகைகள் நூற்றெட்டும் மஸூரிகை முதலிய அடையாளங்கள் தொள்ளாயிரமும் ஆக மறுக்கள் ஆயிரத்தெட்டு என்றும் உரைப்பர். வெம்பும் சுடர்-எல்லாரும் விரும்பும் சுடர்; என்றது இளஞாயிற்றினை. மூர்த்தியுடைய அடி, தேவர்கள் முடிமேல் வைத்த அடி எனக் கூட்டுக. சென்னி-தலை; சென்னிவைப்பாம்-தலையால் வணங்குவோம் என்றபடி.

3 சீவக. 3 தன்மசரணம்-தருமத்தை வணங்கும் வணக்கம்; சாதுசரணம்-சாதுக்களை வணங்கும் வணக்கம். பல்மாண் குணம்-பலவகையான மாட்சிமை பொருந்திய நற்குணம்; இதனை எண்பத்து நான்கு இலக்கம் குணவிரதம், நூறு கோடி மகாவிரதம், ஆயிரத்

## முக்குடையான் தாள் போற்றி

4 முகடு மணிஅழுத்தி, முள்வைரம் உள்வேய்ந்து,
முத்தம் வாய்ச்சூழ்ந்து,
அகடு பசுமணிஆர்ந்து, அங்காந்து இருள்பருகி,
அடுபால் விம்மி,
பகடு படஅடுக்கிப் பண்ணவனார் தம்ஒளிமேல்
நின்றாற் போலும்
தகடு படுசெம்பொன் முக்குடையான் தாள்இணைஎன்
தலைவைத் தேனே.

---

தெண்ணூறு சீலாசாரம் என்ப. நண்பு-உறவு; தொல்-பழமை; மாண்-மாட்சிமை; அறம்-ஜிநதருமம்; பகை நண்பொடு இல்லான்-உறவும் பகையும் இல்லாதவன், அருகன்; சொல்-புகழ்; குழு-ஆசிரிய உபாத்தியாய சாதுக்கள்; இவர் பஞ்ச பரமேட்டிகளைச் சார்ந்தவர். நல் மாண்பு பெற்றேன் - நல்வினையுடையேன். நல்லறத்தையும் குழுவினையும் சரணாகச் சென்று சேர்ந்தேன் என்பதாம். இது என்றது *சீவகசாமி* சரிதையை.

4 *சீவக.* 3142 முகடு-உச்சி; மணி-மாணிக்கம், சிவப்புக்கல்; முள்வைரம்-கூர்மையான வைரமணி; உள் வேய்ந்து - உள்ளே அழுத்தி; வாய்-விளிம்பு; முத்தம்-முத்தமாலை; அகடு-நடு, பசுமணி-நீலமணி; ஆர்ந்து-நிறைந்து; அங்காந்து-வாய் திறந்து; அடுபால்-காயும் பால்; பால் போன்ற ஒளியைச் சொரிந்து; பகடு-பெருமை; பல அடுக்கி-மூன்றாக அடுக்கி; பண்ணவனார் தம் ஒளி-அருகனுடைய தெய்விக ஒளி; செம்பொன்-செந்நிறப்பொன்னின் ஒளி படைத்த; முக்குடையான்-அருகன்; தாள் இணை-இரண்டு திருவடிகள்; தலை வைத்தேன்-தலைமேலே வைத்தேன், வணங்கினேன்.

## அருகன் சரணம்

5 செய்வினை என்னும் முந்நீர்த்
திரையிடை, முளைத்துத் தேம்கொள்
மைவினை மறு இலாத
மதி எனும் திங்கள் மாதோ-
மொய்வினை இருள்கண் போழும்
முக்குடை மூர்த்தி பாதம்
கைவினை செய்த சொற்பூக்
கைதொழுது ஏத்தி னேனே.

6 கொங்கு விம்மு குளிர்பிண்டிக்
குழவி ஞாயிற்று எழில்ஏய்ப்பச்
சிங்கம் சுமந்த மணிஅணைமேல்
தேவர் ஏத்திச் சிறப்பு அயர,
எங்கும் உலகம் இருள்நீங்க,
இருந்த எந்தை பெருமானார்
தங்கு செந்தா மரைஅடிஎன்
தலைய வேஎன் தலையவே.

---

5 சீவக. 3145 செய்வினை-நல்வினை; முந்நீர்-கடல்; தேம்-இனிமை; மை வினை மறு-தீவினையாகிய மறு; மதி எனும் திங்கள்-நல்லறிவு என்னும் திங்கள்; மொய்வினை இருள்-செறிந்த வினையாகிய இருள்;கைவினை செய்த-ஆராய்ந்த; சொற்பூ-சொற்களாலாகிய பூ, பாமலர்; மூர்த்தி-அருகதேவன்; ஏத்தினேன்-புகழ்ந்தேன்; துதித்தேன்.

6 சீவக. 2812 கொங்கு - வாசனை; விம்முதல் - நிறைதல்; பிண்டி-அசோகு; குழவி ஞாயிற்று எழில்-பால சூரியனது அழகு; சிங்கம்சுமந்தமணிஅணை-அழகிய சிங்காதனம்;சிறப்பு அயர-சிறப்புச் செய்ய; எங்கும் இருள் நீங்க-உலகம் எங்கும் இருள் அகல; எந்தை-எம் தந்தை; பெருமானார்-பெருமானாகிய அருகதேவன்; தலையவே-தலையிடத்தவே.

## நம்மை உடையார்

7 இலங்கு செம்பொன் எயில் மூன்றும்,
எரிபொன் முத்தக் குடைமூன்றும்,
வலங்கொண்டு அலர்தூஉய் அடிஏத்தும்
வையம் மூன்றும், படைமூன்றும்,
கலங்காது உயர்ந்த அதிசயங்கள்
மூன்றும், காமர் நூல்மூன்றும்,
நலம்கொள் தீம்பால் குணக்கடலும்
உடையார் நம்மை உடையாரே.

## சீவகன் பாடிய பாணிக்கீதம், முன்னிலைப் பரவல்

8 ஆதி வேதம் பயந்தோய் நீ!
அலர்பெய்ம் மாரி அமைந்தோய் நீ!
நீதி நெறியை உணர்ந்தோய் நீ!
நிகர்இல் காட்சிக்கு இறையோய் நீ!
நாதன் என்னப் படுவோய் நீ!
நவைசெய் பிறவிக் கடலகத்துஉன்
பாத கமலம் தொழுவேங்கள்
பசையாப்பு அவிழப் பணியாயே!

---

7 சீவக. 2813 இலங்குதல்-ஒளிவிடுதல்; எயில்-மதில்; எயில் மூன்று-உதயதரம், பிரீதிதரம்; கல்யாணதரம். எரிபொன்-விளங்கும் பொன்;குடைமூன்று-சந்திராதித்தம். நித்தியவினோதம், சகலபாசனம் அலர் தூஉய்-மலரைத் தூவி; வையம்-உலகம்; உலகம் மூன்றாவன-கீழ் உலகம்;நடு உலகம்;மேல் உலகம்; படை மூன்று-இரத்தினத்திரயம்; அவையாவன: நற்காட்சி, நல்ஞானம், நல்லொழுக்கம். அதிசயங்கள் மூன்று-சகசாதிசயம். கர்மக்ஷயாதிசயம், தெய்விகாதிசயம். நூல் மூன்று-அங்காகமம். பூர்வாகமம், பகுசுருதியாகமம், குணக்கடல் அனந்த ஞானாதி குணங்கள்.

8 சீவக 1242 பாணிக்கீதம்-பாட்டைத்தாளத்தோடுபாடுகை. ஆதி வேதம்-கொலைமுதலிய நவிலாதவேதம்,சைனவேதம்;அலர்தல் -விரிதல்;மாரி-மழை;நீதிநெறி-சன்மார்க்கம்;நிகர்-ஒப்பு;காட்சி -அறிவு, நற்காட்சி முதலியன. நாதன்-தலைவன். நவை-குற்றம்;பிறவிக்கடல்-பிறவியாகி பெருங்கடல்; பாதகமலம்-திருவடித்தாமரை; பசையாப்பு -ஆசையாகிய தொடர்பு; அவிழ-நீங்கும்படி; பணியாய்-திருவுள்ளம் பற்றுவாயாக.

9 இன்னாப் பிறவி இகந்தோய் நீ!
இணைஇல் இன்பம் உடையோய் நீ!
மன்னா உலகம் மறுத்தோய் நீ!
வரம்புஇல் காட்சிக்கு இறையோய் நீ!
பொன்ஆர் இஞ்சிப் புகழ் வேந்தே!
பொறியின் வேட்கைக் கடல் அழுந்தி,
ஒன்னா வினையின் உழல்வேங்கள்
உயப்போம் வண்ணம் உரையாயே!

10 உலகம் மூன்றும் உடையோய் நீ!
ஒண்பொன் இஞ்சி எயிலோய் நீ!
திலகம் ஆய திறலோய் நீ!
தேவர் ஏத்தப் படுவோய் நீ!
அலகை இல்லாக் குணக்கடலே!
யாரும் அறியப் படாயாதி!
கொலைஇல் ஆழி வலன் உயர்த்த
குளிர்முக் குடையின் நிழலோய் நீ!

---

9 *சீவக.* 1243 இன்னாப் பிறவி-துன்பத்தைத் தருவதாகிய பிறவிப்பிணி; இகந்தோய்-நீங்கியவனே; இணைஇல்-ஒப்பு இல்லாத; வரம்புஇல் காட்சி-எல்லை காண முடியாத அறிவு; பொன் ஆர் இஞ்சி-பொன்னால் இயற்றிய மதில்; பொறியின்-ஐம்பொறிகளாலே; ஒன்னா வினை-நன்மை பொருந்தாத எட்டு கர்மமாகிய தீவினை;உழல்வேம்-வருந்துவேம்;உயப்போம் வண்ணம் பிழைத்துப் போம் விதத்தை.

10 *சீவக* 1244 ஒண்பொன் இஞ்சி எயில்-பொன்னெயில் வட்டம், திலகம்-முதன்மை; அலகை-அளவு; திறல்-அனந்தவீரியம் குணக்கடல்-அநந்த ஞானாதி குணங்கள்; அறியப்படாயாதி-அறியப் படுவாயாக; செய்யாய் என்னும் சொல் செய்யென்னும் கிளவியாய் நின்றது.கொலைஇல் ஆழி-கொலைத் தொழில் இல்லாததருமசக்கரம்; வலன்-வலப்பக்கம்; வலன் உயர்த்த குணக்கடலே என இயையும்.

## கேமசரியின் கடவுட் பாடல்

படர்க்கைப்பரவல்-தேவபாணிக்கொச்சகம்

11 வீங்குஓத வண்ணன் விரைததும்பு பூம்பிண்டித்
தேங்குஓதம், முக்குடைக்கீழ்த் தேவர் பெருமானைத்-
தேவர் பெருமானைத் தேன் ஆர் மலர்சிந்தி,
நாவின் நவிற்றாதார் வீட்டுலகம் நண்ணாரே.

12 அடல்வண்ண ஐம்பொறியும் அட்டுஉயர்ந்தார் கோமான்
கடல்வண்ணன் முக்குடைக்கீழ்க் காசு இன்று [உணர்ந்தான்-
காசு இன்று உணர்ந்தான் கமல மலர் அடியை
மாசு இன்றி பாடாதார் வான் உலகம் நண்ணாரே.

13 **பூத்து ஒழியாப் பிண்டிக்கீழ்ப் பொங்குஓத வண்ணனை
நாத்தழும்ப ஏத்தாதார் வீட்டுஉலகம் நண்ணாரே;-
வீட்டுஉலகம் நண்ணார் வினைக்கள்வர் ஆறு அலைப்ப,
ஓட்டிடுப எண்குணனும் கோட்பட்டு உயிராவே.**

---

11. *சீவக* 1467. வீங்கல்-பெருகுதல், பொங்குதல்: ஓத வண்ணன்-கடல் நிறத்தவனாகிய நேமி சுவாமிகள்: விரை -தேன்; ததும்பும்-துளிக்கும்; பூ - அழகு ; தேங்கு ஓதம் - தேங்கிய கடல் நீர் ; தேங்கு ஓதம் போலவிரை ததும்பும் பூம்பிண்டியிடத்து முக்குடைக்கீழ்த் தேவர் பெருமான் என இயையும். மலர் சிந்தி - மலர் தூவி ; நாவின் நவிற்றாதார் - நாவினால் துதியாதார்.

12. சீவக. 1468. அடல் வண்ண ஐம்பொறியும் அட்டு உயர்ந்தோர்-உயிரை வருத்துகின்ற ஐந்து இந்திரியங்களையும் வென்று உயர்ந்த முனிவர்; காசு இன்று உணர்ந்தான்-குற்றமில்லாமல் மெய்ப்பொருளை உணர்ந்தவன்; மாசு இன்றி-மனத்தில் குற்றம் இல்லாமல்; வான் உலகம்-மோட்ச உலகம்; நண்ணார்-சேரார். கோமானும் கடல் வண்ணனுமாய் உயர்ந்தவன் அருகன்.

13. சீவக. 1469. பூத்து ஒழியா-பூக்களைப் பூத்து நீங்காத; பொங்கு ஓத வண்ணன்-கடல்வண்ணன்; நாத்தழும்ப-நாத்தழும் பேறும்படி, இடைவிடாது என்றபடி. வினைக்கள்வர்-தீவினையாகிய ஆறலை கள்வர்; ஆறலைத்தல்-வழிபறித்தல்; ஓட்டிடுப-ஓடிடுவர்; கோட்பட்டு-கள்வரால் அவர் கொள்ளப்பட்டு; உயிரா-பெருமூச்செறிந்து.

## சீவகனின் இருபுற வாழ்த்து

தேவபாணித் தாழிசைக் கொச்சக ஒருபோகு

14 செய்தான் இருவினையின்
பயத்தைச் சேரும் சென்று என்றி;
எய்தான் அதன் பயத்தைப்
பிறனே நுய்த்தல் இயல்பு என்றி:-
கொய்தாமம் தாழ்ந்து ஒசிந்த
குளிர்பூம் பிண்டிக் கோமானே!
இஃதே நின்சொல் இயல்பு என்றால்,
அடியேன் நின்னைத் தொழுதேனே!

15 உண்டே தனது இயல்பின்
உணரும் காலை உயிர்என்றி;
உண்டாய அவ்உயிரே
பிறிதின் இல்லை எனஉரைத்தி;-
வண்டுஆர்த்து நாற்காதம்
வண்ண மாலை சுமந்துஒசிந்து,
கொண்டுஏந்து பூம்பிண்டிக்
கோமான்! — நின்னைத் தொழுதேனே!

---

14. சீவக. 1418. இருபுற வாழ்த்து-இறைவனின் வார்த்தை இரண்டுபட்டிருத்தலைச் சுட்டி வாழ்த்துகின்றமையின் இஃது இருபுற வாழ்த்தாயிற்று; செய்தான்-இருவினையையும் செய்தான் ஒருவன்; இருவினை-நல்வினை தீவினை என்னும் இரண்டும். பயம் பயன்; சேரும்-போய் அனுபவிப்பான்; என்றி-என்று கூறினாய். எய்தான்-ஒரு பிறப்பிலே வினையைச்செய்து அப்பிறப்பிலேயே பயனை அடையாதவன். அதன் பயத்தை-முற் பிறப்பிற் செய்த வினையின் பயனை; பிறனே-மறுபிறப்பில் பிறனாய்ப் பிறந்தவனே கொய் தாமம்-கத்தரித்துச் செய்த மாலை; தாழ்ந்து-தங்கி; ஒசிந்த-துவளுகின்ற; பிண்டிக்கோமான்-அருகன்; நின்னைத்தொழுதேனே-நின்வார்த்தை இரண்டுபட்டிருத்தலின் நினக்கு அஞ்சித் தொழுதேன் என்றான் என்க.

16 காதலால் எவ்வினையும்
கழிப என்றி; அக்காதல்
ஆதலால் எவ்வினையும்
கழியா என்றும் அறைதியால்;-
போதுஉலாய்த் தேன்துவித்துப்
பொழிந்து வண்டு திவண்டு உலாம்
கோதை தாழ் பூம்பிண்டிக்
கோமான்!-நின்னைத் தொழுதேனே!

## சீவகன் சாரணரைத் துதித்தல்

தேவபாணிக் கொச்சக ஒரு போகு-இடை மடக்கு

17 அடி உலகம் ஏந்தி, அலர்மாரி தூவ,
முடி உலக மூர்த்தி உறநிமிர்ந்தோன் யாரே ?-
முடி உலக மூர்த்தி உறநிமிர்ந்தோன் மூன்று
கடி மதிலும் கட்டழித்த காவலன் நீ அன்றே!

---

15. சீவக. 1419. உணரும் காலை உயிர் தனது இயல்பின் உண்டே என்று மாறிக் கூட்டுக. உண்டு-ஒருவகையாக உண்டு; பிறதின் இல்லை-வேறொன்றினது இயல்பாகவே உண்டாதல் இல்லை; இல்லை-ஒருவகையாக இல்லை, ஆர்த்து-ஒலிப்ப; நாற்காதம் ............பிண்டி-நாற்காத அளவு பரந்த மாலையையுடைய பிண்டி.

16. சீவக. 1420. காதலால்-கடவுள் மீது வைத்த அன்பினாலே; எண்வினை - ஞானாவரணீயம், தரிசனாவரணீயம், வேதநீயம் மோகநீயம், ஆயுஷ்யம், நாமம், கோத்திரம், அந்தராயம். கழிப-நீங்குவன அக்காதல் ஆதலால்-அந்த அன்பை வேறொரு பாவ காரியத்தில் வைத்தலால்; அறைதியால்-கூறுகின்றாய்; போது உலாய்-பூக்கள் சூழ்ந்து; திவண்டு உலாம்- அசைந்து உலாவுகின்ற; கோதை தாழ்-பூமாலை தங்கிய.

17. சீவக. 1245. அலர்மாரி-பூமழை; முடி உலக மூர்த்தி-முடிந்த உலகத்தின் மூர்த்தி; உற-பொருந்தும்படி; நிமிர்ந்தோன்-முத்தியடைந்தவன்; யாரே-யார்தான்; வினா அறியான் வினாதல்; அன்றியும் வியப்பின்கண் வந்தது. கடி-காவல்; மூன்று மதில்-காமம் வெகுளி, மயக்கம் என்னும் முக்குற்றங்களாகிய மதில்; கட்டு-காவல்; கட்டழித்த-காவலை அழித்த, முற்றும் அழித்த.

18 முரண் அழிய வென்று உலகம் மூன்றினையும், மூன்றின்
தரணிமேல் தந்து அளித்த தத்துவன்தான் யாரே?-
தரணிமேல் தந்து அளித்தான், தண்மதிபோல் நேமி
அரண் உலகிற்கு ஆய அறிவரன்நீ அன்றே;

19 தீரா வினைதீர்த்துத் தீர்த்தம் தெரிந்துய்த்து,
வாராக் கதி உரைத்த வாமன்தான் யாரே?-
வாராக் கதி உரைத்த வாமன், மலர்ததைந்த
காரார் பூம்பிண்டிக் கடவுள்நீ அன்றே!

## சீவகன் துதி

### தாழிசை

20 கடிமலர் பிண்டிக் கடவுள் கமலத்து
அடிமலர் சூடி யவர்உலகில் யாரே?-
அடிமலர் சூடி யவர், உலகம் ஏத்த,
வடிமலர் தூவ வருகின்றார் அன்றே!

---

18. சீவக. 1246. முரண் அழிய-மாறுபாடு கெட; வென்று-மூன்று மதிலையும் அழித்து; மூன்றின்-மூன்று ஆகமத்தால்; ஆகமம் மூன்றாவன: அங்காகமம், பூர்வாகமம், பகுசுருதியாகமம். தரணி-உலகம்; தத்துவன்-உண்மைப் பொருளானவன்; தண்மதிபோல் நேமி-குளிர்ந்த சந்திரன் போன்ற தரும சக்கரம்; அரண்- பாதுகாப்பு; அறிவரன்-அறிவுக்கு வரனாயுள்ளவன்.

19. சீவக. 1247. தீரா வினை-விடாத தீவினை; தீர்த்தம் என்றது ஆகமத்தை; தெரிந்துய்த்து-அருளிச்செய்து; வாராக்கதி-திரும்பி வருதல் இல்லாத மோட்சம்; வாமன்-அருகன்; ததைந்த-நெருங்கிய; கார்-மேகம்; பிண்டிக்கடவுள்-அருகன்.

20. சீவக. 2739. கடிமலர்-விளக்கமான ஒளியுள்ளமலர், அடி மலர் சூடியவர்-முற்பிறப்பில் கடவுளுடைய திருவடியைச் சூடியவர்; உலகம் ஏத்த-உலகத்தார் புகழும்படி. வடிமலர்-தெளித்து எடுத்த மலர்.

21 முத்து அணிந்த முக்குடைக்கீழ் மூர்த்தி திருவடியைப்
பத்திமையால் நாளும் பணிகின்றார் யாரே?-
பத்திமையால் நாளும் பணிவார் , பகட்டு எருத்தின்
நித்தில வெண்குடைக்கீழ் நீங்காதார் அன்றே !

22 கருமக் கடல்கடந்த கைவலச் செல்வன்
எரிமலர்ச் சேவடியை ஏத்துவார் யாரே -?
எரிமலர்ச் சேவடியை ஏத்துவார் , வான்தோய்
திருமுத்து அவிர் ஆழிச் செல்வரே அன்றே !

சீவகன் முனைவனைத் துதித்தல்

தேவபாணிக் கொச்சக ஒருபோகு–இடைமடக்கு

23 முனிமை முகடு ஆய மூவா முதல்வன்
தனிமைத் தலைமை தனது தான் என்ப—
தனிமைத் தலைமை தனது தான் என்றால்,
பனிமலர் தூய்நின்று பழிச்சாவாறு என்னே!

---

21. சீவக. 2740. முத்து அணிந்த-முத்துமாலை சூழப்பெற்ற; பத்திமை-பக்தியுடைமை; பணிவார் - பணிந்து போவார்; பகட்டு எருத்தின்-யானையின் கழுத்தின் மேலே; நித்தில வெண்குடை-முத்துகள் தொங்கும் வெண்கொற்றக்குடை.

22. சீவக. 2741. கருமக் கடல்-இருவினையாகிய கடல்; கைவலச் செல்வன் -முத்தியாகிய செல்வத்தையுடையவன்; எரிமலர்-தாமரை; ஏத்துவார்-துதிப்பார்; திரு முத்து அவிர் ஆழி-அழகிய முத்து விளங்குகின்ற கொற்றக்குடை; ஆழி--வட்டம்; ஆகு பெயரால் இங்குக் குடையைக் குறித்தது.

23. சீவக. 1609. முனிமை-முனிவருடைய தன்மை; முகடு ஆய மேலான; மூவா முதல்வன்-அருகன்; தனிமை-ஒப்பில்லாமை; தூய்-தூவி; பனிமலர்-குளிர்ந்தபூ; பழிச்சாவாறு-துதியாத விதம், என்னே-அறியாமை அன்றோ?.

24 மலர் ஏந்து சேவடிய மால் என்ப-மாலால்
அலர் ஏந்தி அஞ்சலிசெய்து அஞ்சப் படுவான்-
அலர்ஏந்தி அஞ்சலி செய்து அஞ்சப்படுமேல்,
இலரே மலர்எனினும் ஏத்தாவாறு என்னே!

25 களிசேர் கணையுடைய காமனையும் காய்ந்த
அளிசேர் அறவாழி அண்ணல்இவன் என்பர்-
அளிசேர் அறவாழி அண்ணல் இவனேல்,
விளியாக் குணத்துதிநாம் வித்தாவாறு என்னே!

## புண்ணிய முதல்வன் துதி

26 திருமறு மார்பினை! திலகமுக் குடையினை!
அருமறை தாங்கிய அந்தணர் தாதையை! –
அருமறை தாங்கிய அந்தணர் தாதை! நின்
எரிபுரை மரைமலர் இணைஅடி தொழுதும்.

---

24. சீவக. 1610. மலர் ஏந்து சேவடிய-தாமரை மலர் தான் தாங்கிய திருவடி; பூமேல் நடந்தான்; மால்-அருகன்; மாலால் – இந்திரனால்; அஞ்சலிசெய்து-வணங்கி; அஞ்சப்படுவான்-மதிக்கப் படுவான். இலரே மலர் எனினும்-மலர் இலர் எனினும் என்க. ஏத்தாவாறு-நாவினாற் புகழாத விதம்.

25. சீவக. 1611. களிசேர்-மயக்கம் சேர்தற்குக் காரணமான; கணை-மலர் அம்புகள்; அளிசேர்-கருணை பொருந்திய; அறவாழி-தருமசக்கரம்; விளியா-அழியாத; வித்தாவாறு-பரப்பாமை.

26. சீவக. 2561. திருமறுமார்பினை-திருமகளாகிய மறுவை யுடைய மார்பினையுடையாய்; திலகம்-மேலான; திலகமுக்குடையினை – மேலான முக்குடையினையுடையாய்; அந்தணர் தாதை- அந்தணர்க்குத் தந்தையாக உள்ளாய்; எரிபுரை – நெருப்பின்; நிறத்தை ஒத்த; மரையலர்-தாமரைமலர்.

27 உலகுஉணர் கடவுளை! உருகெழு திறலினை!
நிலவிரி கதிர்அணி நிகர் அறுநெறி யினை!-
நிலவிரி கதிர்அணி நிகர் அறு நெறியை! நின்
அலர்கெழு மரைமலர் அடிஇணை தொழுதும்.

28 மறுஅற உணர்ந்தனை! மலம் அறு திகிரியை!
பொறிவரம்பு ஆகிய புண்ணிய முதல்வனை!
பொறிவரம்பு ஆகிய புண்ணிய முதல்வ! நின்
நறைவிரி மரைமலர் நகும்அடி தொழுதும்.

வலம்கொண்டார் பெறும் பேறு

29 காய்களிற்றின் இடைமருப்பில் கவளம் போன்று ஏமாராக்
கதியுள் தோன்றி,
ஆய்களிய வெவ்வினையின் அல்லாப்புற்று அஞ்சினேன்-
அறிந்தார் கோவே!--
வேய்களிய வண்டு அறைய விரிந்துஅலர்ந்த தாமரையின்
விரைசேர் போதின்
வாய்ஒளியே பெறநடந்த மலர்அடியை வலம் கொண்டார்
வருந்தார் போலும்!

---

27. சீவக. 2562. உலகு — உலகத்தவர்; கடவுளே — கடவுள் தன்மையுடையாய்; உருகெழுதிறல்-அச்சம் தரும் பெரும் வீரிய முடையாய்; நிலவிரிகதிர் அணி— நிலவு பரந்த ஒளியை ஒத்த; நெறி- சுக்கிலத்தியானமாகிய நெறி; அலர் கெழு--விரிதல் பொருந்திய.

28சீவக. 2563. மறு - குற்றம்; மலம் அறு திகிரியை – மலத்தை அறுக்கின்ற தருமச்சக்கரத்தையுடையாய்; திகிரி-தருமசக்கரம்; பொறி- இந்திரியங்கள்; நறை-தேன்; நகும்-இகழும்.

29. சீவக. 3017. காய்தல்-கோபித்தல்; கவளம்-சோற்றுருண்டை; ஏமாரா-கெடுகின்ற; கதி-நாற்கதி; நரகதி. விலங்கு கதி, மக்கட் கதி; தேவ கதி. ஆய்களிய–ஆராய்ந்த உவப்பினையுடைய; அல்லாப்புற்று- வருத்தமுற்று; அறிந்தார் கோவே - அறிந்தாருடைய தலைவனே;

### வணங்காதார் படும்துயர்

30 சேடுஆர் செம்பொன் வயிரத்
தோத்தளிர்ந்து உலகுஓம்பும்
வாடா மாலை வார்தளிர்ப் பிண்டி
வாமா! நின் குணம்நாளும்
பாடா தாரைப் பாடாது உலகம்;
பண்ணவர் நின் அடிப்பூச்
சூடா தார்தாள் சூடார், மாலைச்
சுடர்மணி நெடுமுடியே.

31 வையம் மூன்றும் உடன்ஏத்த
வளரும் திங்கள் வாள்எயிற்று
ஐய அரிமான் மணிஅணைமேல்
அமர்ந்தோய்: நின்னை அமராதார்;—
வெய்ய வெந்நோய் வினைஉதைப்ப
வீழ்ந்து, துன்பக் கடல்அழுந்தி,
நிரம்பா நின்று,– சுழல்வாரே.

---

வேய்-மொய்க்கின்ற; களியவண்டு-களிப்பையுடைய வண்டு; அறைய-ஒலிக்க; அலர்ந்த-மலர்ந்த; விரை-மணம்; போதின்வாய்-தாமரையின் போதிடத்தே; ஒளியேபெற - அத்தாமரைதான் ஒளிபெறுமாறு; வலம் கொண்டார்-வலமாக வந்து வழிபட்டார்.

30. சீவக. 3018. சேடு ஆர்-பெருமை நிறைந்த; வைரத்தொத்து வைரத்தாலாகிய பூங்கொத்து; ஓம்பும்-காக்கும்; வார்தளிர்-நீண்ட தளிர்; வாம-அருகனே; நாளும்-எந்நாளும்; பாடாது - புகழாது பண்ணவர்-தேவர்; சுடர்மணி நெடுமுடி-தேவர்தம்ஒளிமணிகளையுடைய நீண்ட முடிகளில்.

31. சீவக. 3019. வையம்-உலகம் திங்கள் வாள் எயிறு – பிறைச் சந்திரனைப்போலும் ஒளிபடைத்தபல்; ஐய – வியப்புடைய;

## வணங்குவார் பெறும் பேறு

32 தொழுதிப் பல்மீன் குழாம்சூழத்
துளும்பாது இருந்த திங்கள் போல்
முழுதும் வையம் உடன்ஏத்த
முதுவாய் வலவை யாய்இருந்து,
அழுது வினைகள் அல்லாப்ப,
அறைந்தோய் நின்சொல் அறைந்தார்கள்,
பழுது இல் நறுநெய்க் கடற்சுடர்போல்.
பல்லாண்டு எல்லாம் பரியாரே.

33 செழும்பொன் வேய்ந்து மணிஅழுத்தித்
திருஆர் வைரம் நிரைத்துஅதனுள்
கொழுந்தும் மலரும் கொளக்குயிற்றிக்
குலாய சிங்கா தனத்தின்மேல்,
எழுந்த பரிதி இருந்தாற் போல்
இருந்த எந்தை பெருமானே!—
அழுந்தேன் வந்தேன் அடிஅமைந்தேன்,
அருவாய்ப் போதல் அழகிதோ!

---

அரிமான் - சிங்கம்; அமராதார் - விரும்பிநின்னைப் பொருந்தாதார் வெய்ய வெந்நோய் வினை—கொடிய துன்பம் தரும் வினை; உசைப்ப—தள்ள: நெய்யும் நுண் நூல் நாழிகையின்—நெய்தல் தொழிலுக்குரிய நூல்சுற்றப்பெற்ற தார் கிடக்கும் நாடாப்போல; சுழல்வார்-மறுகுவார்.

32. சீவக. 3020. தொழுதி-கூட்டம்; மீன்—நட்சத்திரம்; துளும்பாது—அசையாது; முழுதும் வையம்—வையம் முழுதும், உலகம் எல்லாம்; உடன் ஏத்த—ஒருகாலத்தே துதிக்க; முதுவாய்—முதிய உண்மையாய்; வலவையாய் இருந்து—வெற்றியுடையையாய் இருந்து; அல்லாப்ப—வருந்த; அறைந்தோய்—அறத்தைச் சாற்றியவனே; நின் சொல்—நீ உரைத்த அறம்; அறைந்தவர்கள் - சாற்றினவர்கள்;

வாழ்த்து

34 திங்கள்மும் மாரி பெய்க!
திருவறம் வளர்க! செங்கோல்
நன்றுஇனிது அரசன் ஆள்க!
நாடெலாம் விளங்க! மற்றும்
எங்குஉள அறத்தி னோரும்
இனிதுஊழி வாழ்க! எங்கள்
புங்கவன் பயந்த நன்னூல்
புகழொடும் பொலிக மிக்கே!

---

பழுது-குற்றம்; நெய்க்கடற்சுடர் — நெய்க்கடலிலே இட்ட விளக்கு பல்லாண்டு—பலகாலம்; பரியார்—கெடார்.

33. சீவக. 3021. மணி அழுத்தி-மணிகள் பதித்து; திரு ஆர் வைரம்—அழகு நிறைந்த வைரமணிகள்; நிரைத்து— வரிசையாக வைத்து; கொழுந்தும் மலரும் கொளக் குயிற்றி — கொழுந்தும் மலரும் வடிவு கொள்ளும்படி எழுதி; குலாய - பண்ணின; எழுந்த பரிதி-இளஞாயிறு; அழுந்தேன்—பிறவிக் கடலில் அழுந்தேன்; அடைந்தேன்—சேர்ந்தேன்; அருவாய்ப் போதல்—பிறப்பு அற்றுப் போதல்; அழகிது—நன்று.

34 சீவக. காவியத்தின் இறுதி வாழ்த்து. திருவறம்-சைன தருமம்; புங்கவன்—அருகதேவன்; நன்னூல்—ஆகமம்.

முற்றும் உணர்ந்தான் திருந்...

# அருகன் துதிமாலை

## 2 தோலாமொழித் தேவர் கண்ட துதிமாலை

### அருக சரணம்

1 வென்றான், வினையின் தொகையாய-விரிந்து தன்கண்
ஒன்றாய்ப் பரந்த உணர்வின் ஒழியாது முற்றும்
சென்றான்-திகழும் சுடர்சூழ் ஒளிமூர்த்தி ஆகி
நின்றான்,-அடிக்கீழ்ப் பணிந்தார் வினை நீங்கி நின்றார்.

## 2. சூளாமணி

### குறிப்புரை

1. சூளா. 1. வினையின் தொகை- ஞானவரணீயம், தரிசனவரணீயம், வேதநீயம், மோகநீயம், ஆயுஷ்யம், நாமம், கோத்திரம், அந்தராயம் என்னும் எண் வகையான கர்மங்களின் கூட்டம். இவை எட்டும் காதி, அகாதி என இருவகைப்பட்டு நூற்றெட்டாக விரியும் என்பர். அருகன் வினை வென்றமையால் சினேந்திரன் என்னும் பெயர் பெற்றான். ஒழியாது — நீங்காது; சுடர்சூழ் ஒளிமூர்த்தி-சூரிய சந்திரர் போலே ஒளி மயமாகத் திகழும் கடவுள்; வினை-நல்வினை, தீவினைகள்.

## வரிப்பாட்டு

2 அணியாது ஒளிதிகழும் ஆர்அணங்கு திருமூர்த்தி!
கணியாது முழுதுணர்ந்த கடவுள் என்று அறையுமே;
கணியாது முழுதுணர்ந்த கடவுள் என்று அறைந்தாலும்,
அணிஞாலம் உடையாயை அறிவாரோ அரியரே.

3 பகைநாறும் அயிற்படைகள் பயிலாத திருமூர்த்தி!
இகல் மாற வென்றுஉயர்ந்த இறைவன்என்று அறையுமே
இகல்மாற வென்றுஉயர்ந்த இறைவன் என்று அறைந்தாலும்
அகல்ஞாலம் உடையாயை அறிவாரோ அரியரே.

4 திருமறுவு வலன்அணிந்து திகழ்கின்ற திருமூர்த்தி
ஒருமறுவும் இலைஎன்பது ஒழியாமல் உணர்ந்துமே;
ஒருமறுவும் இலைஎன்பது ஒழியாமல் உணர்ந்துகினும்,
அருமறையை விரித்தாயை அறிவாரோ அரியரே

---

2. சூளா . 182. அணியாது - எவ்வகையான ஆபரணத்தையும் அணியாமல்; ஆர் அணங்கு திருமூர்த்தி-அழகுநிறைந்த வடிவுடையவனே; கணியாது-கணக்கிட்டு அறியாது, அதாவது இயல்பாகவே என்றபடி; முழுதுஉணர்ந்தகடவுள்-எல்லாப்பொருள்களையும் அறிந்த முழுமுதற் கடவுள்; அறையும்-சொல்லும்; ஞாலம்-பூமி; அறிவார் அரியர்-உள்ளவாறு அறிந்தவர் அரியராவர், மிகச் சிலரே என்றபடி.

3. சூளா. 183 பகை நாறும்-பகைமைக் குணம் தோன்றும்; அயிற்படைகள்-கூரிய ஆயுதங்கள்: இகல்-பகை; காமம், வெகுளி, மயக்கம் என்னும் முப்பகை;மாற-கெட; அகல் ஞாலம்-பரந்த உலகம்.

4. சூளா. 184. திரு மறுவு-அழகிய மறுக்கள் ஆயிரத்தெட்டு; வலன் அணிந்த-மேன்மையாகப் பெற்ற; ஒருமறு-சிறு குற்றமும்; மறை-அங்காகமம் 12, பூர்வாகமம் 14, பகுசுருதியாகமம் 16 ஆக 42 பரம ஆகமங்களை விரித்துரைத்தவன்,

5 விரைமணந்த தாமரைமேல் விண்வணங்கச் சென்றாய்!
உரை அணிந்து யாம்பரவ, உள்மகிழ்வாய் அல்லை;
உள்மகிழ்வாய் அல்லை எனினும், உலகுஎலாம்
கண்மகிழ நின்றாய்கண் காதல் ஒழியோமே.

6 முருகுஅணங்கு தாமரையின் மொய்ம்மலர்மேல் சென்றாய்
அருகுஅணங்கி ஏத்த அது மகிழ்வாய் அல்லை;
அதுமகிழ்வாய் அல்லை எனினும், பெயராக்
கதிமகிழ நின்றாய்கண் காதல் ஒழியோமே.

7 மணம்மயங்கு தாமரைமேல் வான்வணங்கச் சென்றாய்!
குணம்மயங்கி யாம்பரவ, கொண்டுஉவப்பாய் அல்லை;
கொண்டுஉவப்பாய் அல்லை எனினும், குளிர்ந்துஉலகம்
கண்டுஉவப்ப நின்றாய்கண் காதல் ஒழியோமே!

---

5. சூளா. 187. விரை-தேன்; மணந்த-தங்கிய, சேர்ந்த; விண்-விண்ணோர்; உரைஅணிந்து-புகழைப் போற்றி; பரவ-துதிக்க; உள-உள்ளம், மனம்; உலகு - உலகத்தவர்; கண் மகிழ-கண்களால் தரிசித்ததனால் மகிழ்வுற; நின்றாய்கண் – நின்றஉன்னிடத்திலே; காதல்-அன்பு, பக்தி.

6. சூளா. 188. முருகு அணங்கு தாமரை-மணமும் தெய்வத்தன்மையுமுடைய தாமரை; மொய்ம்மலர்-இதழ்கள் நெருங்கிய தாமரை மலர்; அருகு அணங்கி-உன் பக்கலிலே நெருங்கி; ஏத்த-துதிக்க; பெயராக் கதி-வீட்டுலகம்.

7. சூளா. 189. மயங்குதல்-கலத்தல்; வான்-தேவர்; குணம்-இறைவனின் அனந்த குணங்கள்; மயங்கி- ஈடுபட்டு, எடுத்தோதி; உவப்பாய்-மகிழ்வாய்.

8 ஆதியங் கடவுளை! அருமறை பயந்தனை!
போதியங் கிழவனை! பூமிசை ஒதுங்கினை!—
போதியங் கிழவனை! பூமிசை ஒதுங்கினை!—
சேதியஞ் செல்வ! நின் திருவடி வணங்கினம்.

9 காமனைக் கடிந்தனை! காலனைக் காய்ந்தனை!
தேமலர் மாரியை! திருமறு மார்பனை!—
தேமலர் மாரியை! திருமறு மார்பனை!
மாமலர் வண்ணநின் மலரடி வணங்கினம்.

10 ஆர்அருள் பயந்தனை! ஆழ்துயர் அவித்தனை
ஓர்அருள் ஆழியை! உலகுடை ஒருவனை!—
ஓர்அருள் ஆழியை! உலகுடை ஒருவனை!
சீர்அருள் மொழியநின் திருவடி தொழுதனம்.

---

8. சூளா. 214. ஆதியங் கடவுளை-முதற்பெருங்கடவுளாக உள்ளாய் ஐ-முன்னிலை. போதியங் கிழவனை-அறிவிற்கு உரியவனாக உள்ளாய்; பூமிசை ஒதுங்கினை-பூமேல் நடந்தாய்; சேதியம்-ஜிநாலயம்.

9. சூளா. 215. காமனைக் காய்ந்தனை-காமன் ஆற்றலைவென்று போக்கியவன்; காலனைக் கடிந்தனை-காலனைச் சினந்தாய்; அழிவு இல்லான் என்றபடி. தேமலர்மாரி-தேனையுடைய மலர் மழை.

10. சூளா. 216 ஆர் அருள்-நிறைந்த கருணை; ஆழ்துயர்-அழுந்திய மிகுதுன்பம்; அவிந்தனை-அழித்தாய், போக்கினாய்; ஓர்-ஒப்பற்ற; அருள் ஆழியை - தரும சக்கரமுடையாய்; உலகுடை ஒருவனை-மூவுலகங்களுக்கும் அதிபதியாகிய ஒப்பற்றவன், தனிப் பெருங்கடவுள்.

படர்க்கைப் பரவல்

11 மணம்கமழும் தாமரை. இன் மதுத்திவலை
கொப்புளித்து மதர்த்து, வாமன்
அணங்கு இவர்சே வடியின் அழகு எழில்ஏர்ஓர்
ஒளிபருகி. அலரும் போலும்!—
அணங்குஇவர்சே வடியின் அழகு எழில்ஏர்ஓர்
ஒளிபருகி, அலருமாயின்,
வணங்கினவர் ஒளிவிரிந்து களிசிறந்து
மதிமகிழல் மருளோ அன்றே!

12 அரும்பிவரும் அரவிந்தம் அறிவரனது
அடிநிழலது அடைந்தோம் என்று,
சுரும்புஇவரிஇசைபாட, செம்மாந்து
சுடர்உமிழ்ந்து துளும்பும் போலும்!-
சுரும்புஇவரி, இசைபாட செம்மாந்து
சுடர்உமிழ்ந்து துளும்பு மாயின்
விரும்பினராய்த் தொழுதுஎழுவார் மெய்மறப்பும்
உள்மகிழ்வும் வியப்போ அன்றே!

---

11. சூளா. 1037 இன் மதுத்திவலை - இனிய தேன் துளிகள் கொப்புளித்தல்-வெளிப்படுத்துதல்; மதரித்து-பூரித்து; வாமன்—அருக தேவன்; அணங்கு இவர் சேவடி—தெய்வத்தன்மை பொருந்திய சிவந்த திருவடிகள்; அழகு எழில் ஆர் ஏர் ஒளி—அழகு வெளிப்பட்டுத் தோன்றும் ஒப்பற்ற தெய்விக ஒளி; எழில்-வெளிப்பட்டுத் தோன்றல்; ஏர்—எழுச்சி; ஓர்-ஒப்பற்ற; பருகி-உட்கொண்டு; அலர்தல்-மலர்தல்; விரித்து-பரந்து; களிசிறந்து-மகிழ்ச்சிமிக்கு; மதி-அறிவு; மருள்-மயக்கம்.

12. சூளா. 1038. அரும்பிவரும்-போதாக மலர்வதற்கு எழுந்து வரும்; அரவிந்தம்-தாமரைமலர்; அறிவரன்-சிநதேவன்; சுரும்பு—வண்டு; இவரி-ஏறி; செம்மாந்து-வீறுபெற்று; சுடர் உமிழ்தல்—

13 அழல் அணங்குதாமரை ஆர் அருள்ஆழி
உடையகோன் அடிக்கீழ்ச் சேர்ந்து.
நிழல்அணங்கி, முருகுஉயிர்த்து, நிரந்து அலர்ந்து,
தோடுஏந்தி நிழற்றும் போலும்! —
நிழல்அணங்கி, முருகுஉயிர்த்து, நிரந்து அலர்ந்து
தோடுஏந்தி நிழற்று மாயின்,
தொழில் அணங்கு மனமுடையார் சூழ்ஒளியும்
வீழ்களிப்பும் சொல்லோ அன்றே!

வினையை வென்றான்மேல் பதிகம்

14 மூவடிவினால்இரண்டு சூழ்சுடரும் நாண
முழுதுஉலகம் மூடி ,எழில் முளைவயிரம் நாற்றி,
தூவடிவினால் இலங்கு வெண்குடையின் நிழல்[உண்டால்:
சுடரோய்! உன் அடிபோற்றிச் சொல்லுவது ஒஎறு

---

ஒளியைவெளிப்படுத்துதல்; துளும்புதல்-அசைதல்; தொழுது எழுவார் வணங்கிப்போற்றுவார்; மெய் மறப்பு-உடலின் உபாதை மறந்த தோர்தனிநிலை; உள்மகிழ்வு-மன மகிழ்ச்சி.

13 சூளா. 1039. அழல் அணங்கு தாமரை-தமது வண்ண மிகுதியால் தீயை வருத்துகின்ற தாமரை; ஆர்-பொருந்திய; அருள் ஆழி-தரும சக்கரம்; அருள் ஆழி உடைய கோன்-அருகதேவன்; நிழற்றும்-ஒளி பரப்பும்; நிழல் அணங்கு-தன் ஒளியால் பிற ஒளிகளைக் கீழ்ப்படச் செய்கின்ற; முருகு உயிர்த்து-மணத்தை வெளிப்படுத்தி, நிரந்து அலர்ந்து-வரிசையாக மலர்ந்து; தோடு ஏந்தி-இதழ்களைப் பெற்று; தொழில் அணங்கு மண முடையார்-இறைவன் தொண்டினை யன்றிப் பிறவற்றை வெறுக்கும் உள்ளம் படைத்தவர்; வீழ்களிப்பு-விரும்பும் மகிழ்ச்சி; சொல்லோ அன்று-சொல்லும் தரமன்று.
14. சூளா. 1904. மூவடிவு-மூவகையான வேறுபட்ட வடிவுடைய குடை; இரண்டு சூழ்சுடர்-சூரியசந்திரர்; முழுதுஉலகம்-உலகம் எல்லாம்; மூடி-கவிந்து; எழில் முளை வயிரம்-அழகு துளும்பும் வயிரமாலை; நாற்றி-தொங்கவிட்டு தூ - தூய்மை, பரிசுத்தம்;

சேவடிகள் தாமரையின் சேயிதழ்கள் தீண்டச்
சிவந்தனவோ! சேவடியின் செங்கதிர்கள் பாயப்
பூவடிவு கொண்டனவோ ! பொங்குஒளிகள் சூழ்ந்து.
புலங்கொளா வால்,எமக்குஎம்புண்ணியர்தம் கோவே

15 கருமாலை வெவ்வினைகள் கால்தளர நூறி,
கடையிலா ஒண் ஞானக் கதிர்விரித்தாய் என்றும்,
அருமாலை நன்னெறியை முன்பயந்தாய் என்றும்,
அடியேம், உன் அடிபரவு மாறு அறிவது அல்லால்,-
திருமாலே! தேன் ஆரும் அரவிந்தம் ஏந்தும்
திருவணங்கு சேவடியாய்! தேவாதி தேவ!
பெருமானே —நின்பெருமை நன்கு உணரமாட்டார்
பிணங்குவார் தம்மைவினைப் பிணக்குஒழிக்க லாமே?

---

வெண் குடை-மூவடிவினால்விளங்கும் வெண்குடை என்க,நிழல்-நிழல்,முதல் நீண்டது; சுடரோய் - ஒளிமயமான அருகதேவனே; போற்றி-வணங்கி, துதித்து; சேயிதழ் - சிவந்த இதழ்; தீண்ட-பொருந்த; சேவடியின் செங்கதிர்கள் - சிவந்த திருவடியிலிருந்து எழும் செந்நிற ஒளிக்கதிர்கள்; பாய-வீச; பூ வடிவு-பூக்களின் செந்நிறவடிவை; பொங்குஒளிகள்-கிளர்ந்து எழும் மிகு சோதி; புலம் கொளா-எம் அறிவிற்கு புலப்படா; புண்ணியர்தம் கோ-அருகன்.

15. சூளா. 1905. கருமாலை வெவ் வினைகள்-கரிய இயல்பினைக் கொண்ட கொடிய வினைகள்; கால் தளர -அடிநிலை அற்றுப்போக; நூறி-அழித்து; கடை இலா ஒண் ஞானக்கதிர்-கடை இலா ஞானமாகிய ஒளி; அருமாலை நன்னெறி-அரிய தன்மையுடைய நல்வழி; சிந மார்கம்; பயந்தாய்-தோற்றுவித்தாய்; அடியேம்-உன் அடியவராகிய நாங்கள்; பரவுமாறு-துதிக்கும் வகை; திருமாலே என்றது அருகக் கடவுளை; ஏந்தும்-தாங்கும்; திரு-முத்தித்திரு; பிணங்குவார்-மாறுபடு வார்; வினைப்பிணக்கு-தீவினையின் மாறுபாடு, தீவினைத்திரள்.

16 ஒளி ஆகி, உலகு ஆகி நீவிரிந்தாய் என்கோ?
உலகுஎலாம் நின்ஒளியின்உள் அடங்கிற்று என்கோ?
அளி ஆர உலகம் நீ ஆள்கின்றாய் என்கோ?
அமருலகு தான்நின்னது அடிஅடைந்தது என்கோ?
விளியாத மெய்ப்பொருளை நீவிரித்தாய் என்கோ?
நீவிரித்த வாறேமெய்ப் பொருள் விரிந்தது என்கோ?
தெளியாமல் இல்லை, நின் திருவடிகள்; மெய்ம்மை
தெளிந்தாலும் செவ்வனே தெரிந்து உரைக்கல்
[ஆமே!

17 களியானை நாற்கோட்டது ஒன்று உடைய செல்வன்
கண்ஓர் ஆயிரம்உடையான் கண்விளக்கம் எய்தும்
ஒளியானை, ஊழிமுதல் ஆனானை ஓங்கி [செய்யா
உலகு அளவும் ஆகி, உயிர் தமக்கு உறுகண்
அளியானை, ஆர்அழல்அம் சோதிவாய் சூழ்ந்த
அருள்ஆழி யானை, இணை அடிபரவு வார்கட்கு
எளியானை, எந்தைபெரு மானையே அல்லால்,
இறையாக ஈங்கு ஒருவர் எண்ணுமாறு என்னோ?

---

16. சூளா 1906. என்கோ-என்று சொல்வேனோ; அளி ஆர - அருளை உயிர்கள் பெறுமாறு; அமருலகு - தேவர் உலகம்; விளியாத- அழியாத; மெய்ப்பொருள்-உண்மைப் பொருள்; தெளியாமல் இல்லை-தெளிவு பிறக்காமல் இல்லை; மெய்ம்மை-உண்மைப்பொருள்; செவ்வனே-நன்றாக.

17. சூளா. 1907. களியானை-மதக்களிப்பு யானை மிக்க; வெள்ளை யானை; நாற்கோட்டது-நான்கு கொம்புகளையுடையது; நாற்கோட்டு யானையுடைய செல்வன்-இந்திரன்; கண் ஓர் ஆயிரமுடையான்- ஆயிரம் கண்ணுடையனாகிய இந்திரன்; கண்விளக்கம் - அறிவுத் தெளிவு; ஊழிமுதல் ஆனான்-ஊழிக்காலத்தும் அழியாத முதல்வன்

18 தெருளாமை யால், வினவற் பாலதுஒன்று உண்டு:
திருவடிகள் செப்போன் ஆர் அரவிந்தம் ஏந்த,
இருள்ஆழி ஏழ்உலகும் சூழ்ஒளியின் மூழ்க,
இமையாத செங்கண்ணின் இமையோர்வந்து ஏத்த
உருள்ஆழி யானும்ஒளி மணி மேல் கைவைத்து
ஒருபாலில் வர, உலகம் நின்னுழையது ஆக,
அருள்ஆழி முன் செல்ல, பின் செல்வது என்னோ?
அடிப்படா தாய் நின்ற அகல்ஞாலம்உண்டோ?

19 வானோர்தம் உலகுடைய பால்நீல வண்ணன் [வைகா
மகிழ்ந்துஇறைஞ்சும் மாலைஅணிமணிமுடிமேல்
ஊன்ஆரும் மறவாழி ஓடைமால் யானை
உடையான்தன்ஒளிமுடியின் மேல்உரையா நிற்க,

---

ஆனான்; ஓங்கி-நிமிர்ந்து; உலகு அளவுஆகி-உலகம் எல்லாம் பரந்து; உறுகண்-துன்பம்; அளியான்- கருணையாளன்; பரவுவார்-துதிப்பார்; எந்தை-எம் தந்தை; இறையாக-கடவுளாக.

18. சூளா: 1908. தெளியாமையால்-தெளிவுபெறாமையால்; வினவற் பாலது-கேட்கக்கூடியது; செப்போன் ஆர்-சிவந்த பொன்னிறம் வாய்ந்த; இருள்ஆழி-இருள் நிறமுடைய கடல;கருங்கடல்; சூழ் ஒளி-சுற்றிலும் பரவும் சோதி வட்டம்; இமையாத- இமைகொட்டாத; இமையோர்-தேவர்; உருள் ஆழியான்-உருளும் ஒற்றைச் சக்கரம் உடைய சூரியன்; ஒருபால்-ஒருபக்கம்; அருள்ஆழி -தரும சக்கரம்; அடிப்படாதாய் நின்ற-அடிதோயாது இருக்கின்ற;அகல்ஞாலம்-பரந்த உலகம். உலகம் எல்லாம் அருகனது திருவடி பரவியுள்ளது என்ற வாறு.

19. சூளா. 1909. மால் நீல வண்ணன்-நீல வண்ணனாகிய திருமால்;

தேன் ஆரும் அரவிந்தம் சென்றுஏந்தும் போழ்து
திருவடிகள் செந்தோடு தீண்டாவே யாகில்,
ஆனாஇம் மூவுலகும் ஆளுடைய பெம்மான்
அடிஉறுவார் இன்மைதாம் அறிவுண்டது அன்றே

20 தேன் அருளி, மந்தாரச் செந்தாமம் தாழ்ந்து,
திரள்அரைய செம்பவளம் வம்புஆக ஊன்றி
வான் அருளி மாணிக்கச் செங்கதிர்கள் வீசி,
மதிமருட்டும் வெண்குடை ஓர் மூன்றுடைய வாமன்,
யான்அருள வேண்டிஅடி இணைபணியும் போழ்தும்,
இமையவர்கோன் ஆயிரச் செங்கணான் வந்து
தான் அருளு மாறு என்று தாள் பணியும் போழ்தும்,
தகை ஒன்ற தேல்இறைமை தக்கதே அன்றே,

---

'மாலை அணி-மாலை வரிசை; வைகா-தங்கி; மறம்-வீரம்; ஆழிஓடை-வட்ட வடிவமான நெற்றிப் பட்டம்; மால் யானையுடையான்-பெரிய வெள்ளையானையையுடையவன்; இந்திரன்; ஏந்தும் பொழுது-தாங்கும் பொழுது; செந்தோடு-சிவந்த இதழ்கள்; தீண்டாவே-பொருந்தா ஆகில்-ஆயினால்; ஆளுடைய-அடிமையாகவுடைய; பெம்மான்-பெருமான்; அருகதேவன்.அடி உறுவர்-திருவடிகளைச் சேருவர்.

20. சூளா. 1910. மந்தாரச் செந்தாமம்-மந்தார மலர்களாகிய சிவந்த மாலை; மந்தாரம்-தேவலோகத்துள்ள மரங்களுள் ஒன்று; தாழ்ந்து-தொங்கவிட்டு; திரள் அரைய-திரண்ட பக்கங்களைக் கொண்ட; வம்பாக ஊன்றி-புதிதாகப் பதித்து; மாணிக்கம்-செம்மணி; மதிமருட்டும்-அறிவை மயங்கச் செய்யும்; வாமன்-அருகன்; இமையவர்கோன்-தேவர்கள் தலைவன்; ஆயிரச்செங்கணான்-ஆயிரங்கண்களையுடைய இந்திரன்; தகை-தகையை; இறைமை- தன்மை.

21 விண்தாங்கு வெவ்வினை வெரூஉ உதிர நூறி,
விரிகின்ற மெய்ஞ்ஞானச்சுடர்விளக்கு மாட்டி,
கண்டார்கள் நின்நிலைமை கண்டு ஒழுக, யான்நின்
கதிர்விளங்கு சோதியால் கண் விளக்கப்பட்டுத்,
தண்தாஅ மரைமலரின் மேல் நடந்தாய் என்றும்
தமனியப்பொன் அணையின் மேல்அமர்ந்தாய் என்றும்
வண்டுஆர் அசோகின் நிழல் வாய் அமர்ந்தாய் என்றும்
வாழ்த்தினால் வாராயோ—வானவர்தம் கோவே

22 கருஆர்ந்த பொருள் நிகழ்வும், காலங்கள் மூன்றும்,
கடையிலா நல்ஞானக் கதிர் அகத்த ஆகி,
ஒருவாது இங்கு அவ்ஒளியின் நின் உள்ளம் ஆகி.
உலகெல்லாம் நின்உள்ளத்தே ஒளிக்கவேண்டா;

---

21. சூளா. 1911. விண்தாங்கு வெவ்வினை-ஆகாயம் அளவாக மிகுந்த தீவினைகள்; வெரூஉ-அஞ்சி; உதிர நூறி-பொடிப்பொடியாய் உதிர்ந்து போமாறு அழித்து; சுடர் விளக்கு - ஒளிபடைத்த விளக்கு கண் விளக்கப்பட்டு-அறிவுத் தெளிவுபெற்ற; தமனியப்பொன் அணை-மாற்றுயர்ந்த பொன்னாசனம்; நிழல்வாய்-நிழலிடத்தே.

22. சூளா. 1912. கரு ஆர்ந்த பொருள் - பெருமை நிறைந்த பொருள்; ஞானக்கதிர்-ஞானமாகிய ஒளி; ஒருவாது-நீங்காது;

திருஆர்ந்த தண்மார்ப: தேவாதி தேவ!
திரள் அரைய செந்தளிர் அசோகு அமர்ந்தசெல்வ!
வருவாரும் வையகமும் நீயும் வேறு ஆகி
மணிமேனி மாலே! மயக்குவது இங்கு என்னோ!

23 செங்கண் நெடுமாலே: செறிந்துஇலங்கு சோதித்
திருமுயங்கு மூர்த்தியாய். செய்யதாமரையின்
அங்கண்அடி வைத்தருளும் ஆதியாய்: ஆழி
அறவரசே! என்று நின் அடிபணிவது அல்லால்,
எங்கண் இடர் அகலுமாறு இந்நிலைமை எய்தி,
இருளுலகம் நீக்கும் அருள்தருக நீ என்று
வெங்கண் இரு வினையை அற வென்றாய்முன் நின்று
விண்ணப்பம் செய்யும் விழுத்தகைமை உண்டோ?

---

திருஆர்ந்ததண்மார்ப-கேவலஞானமாகிய திருமகள் தங்கியமார்பனே திரள் அரைய-திரண்ட அடிமரத்தைக்கொண்ட;மணிமேனி-நீல நிறத் திருமேனி.

23. சூளா, 1913 செறிந்து-நெருங்கி; திருமுயங்கு-கேவல ஞான மாகிய திருமகள் சேரும்; ஆழி அறவரச-அறவாழி அரசே என்க எம்கண்-எம்மிடத்தே; இருள் உலகம் - நரகலோகம்; வெங்கண்-கொடுமை; விண்ணப்பம் செய்தல்-குறை கூறி வேண்டுதல்; விழுத் தகைமை-சிறந்த குணம்.

முற்றும் உணர்ந்தான் திருத்தாள் போற்றி

# அருகன் துதிமாலை

## 3. நீலகேசி

### பஞ்ச பரமேட்டிகள் வாழ்த்து

(முதல் இரண்டு செய்யுளும் குளகம்)

**1 நல்லார் வணங்கப் படுவான் பிறப் பாதி நான்கும்**
**இல்லான் உயிர்கட்கு இடர்தீர்த்துஉயர் இன்பம் ஆக்கும்**
**சொல்லான் தருமச் சுடரான்எனும் தொன்மை யினான்**
**எல்லாம் உணர்ந்தான் அவனேஇறை யாக ஏத்தி**

---

## 3. நீலகேசி

### குறிப்புரை

**1. நீல. 1. நல்லார்-முனிவர், தேவர், மக்கள் முதலியோர்; வணங்கப்படுவான்-உலகிற்கு ஒரு பெரும் தெய்வம் என்று போற்றப் படுவான்; பிறப்பு ஆதி நான்கும்-பிறப்பு, மூப்பு, மரணம், நோய், ஆன்மாவின் இயல்பான குணங்களை மறைக்கும் காதி கர்மங்கள்; இன்பம் ஆக்கும்-சுகத்தைக் கொடுக்கும். சொல்லான்-திருமொழியை யுடையவன்; தருமச் சுடரான்-தரும சூரியன் ஆனவன்; தொன்மை யினான்- ஆதியும் அந்தமும் இன்றி நித்தியன் ஆனவன்; எல்லாம் உணர்ந்தான்-பொருள் குணம் தோற்றங்களைக் கண்கூடாக உணர்ந்த கடையிலா அறிவுடையான்; அதனோடு கடையிலாக் காட்சி; கடையிலா வீரியம், கடையிலா இன்பம் ஆகியவற்றையும் உடையான்; இறை-சுவாமி; ஏத்தி-துதித்து.**

2 அன்னான் பயந்த அறஆர்அமிர்து உண்டு நின்றார்
இன்னார் இனையர் எனவேண்டுவது இல்லை யார்க்கும்
பன்னாம் துணையும் பணிந்தாகிய புத்தி யினான்
என்னால் உரைக்கப் படுகின்றதொன்று ஈங்கு உளதே.

## நீலகேசி முனிவரைப் போற்றுதல்

3 வெள்ள மாரி தரித்தோய் நீ
வினையின் வாயில் அடைத்தோய் நீ
உள்ள மாட்சி உடையோய் நீ
உயப்போம் வண்ணம் உரைத்தோய் நீ
நள்ளென் யாமத் தியான் செய்த
நவைகள் எல்லாம் நனிகண்டு
எள்ளல் இல்லாப் பெரியோய் நின்
இணையில் பாதம் அணைவல்யான்.

---

2. நீல. 2. அன்னான்-அத்தகு சிறப்புடையனான அருகதேவன், அறஆரமிர்து-தருமம் ஆகிய அமுதம்; நின்றார்-நின்றவர்; சித்தர், ஆசாரியர், உபாத்தியாயர், சாதுக்கள்; இன்னார் இனையர் என வேண்டுவது இல்லை-இன்ன ஜாதி, இன்ன ஆசிரமம் என்பன வேண்டா; பன்னாம் துணை-சொல்லியது அத்துணையளவு; ஈங்கு-இத்தமிழ் நாட்டுள்.

3. நீல. 136. வெள்ளமாரி-அறவெள்ளமாகிய மழை; தரித்தோய்-பூண்டோய்; வினையின் வாயில்-வினை தோன்றும் வழி; ஐம்புலன்கள்; உள்ளம் மாட்சி-திருவுள்ளச் சிறப்பு; உயப்போம் வண்ணம்-பிழைத்துப் போகும் வகை நள்ளென் யாமம்-இருள் மிகுந்த நடு இரவு; நவை; குற்றம்; எள்ளல்-இகழ்தல்: இணை-ஒப்பு; அணைவல்-சேருவன், சரணடைவன்.

4 மூட மூன்றும் உரைத்தோய் நீ
முரண்செய் தோற்றம் முனிந்தோய் நீ
வீடும் கட்டும் விரித்தோய் நீ
வினையின் இன்பம் வெறுத்தோய் நீ
காடு கிளர்ந்து காட்டியான்
கலக்க ஒன்றுங் கலங்காத
பாடற்கு அரிய பெரியோய்நின்
பழிப்பில் பாதம் பணிவல்யான்.

5 அல்லல் பிறவி அகன்றோய் நீ
ஆசை வெவ்வேர் அறுத்தோய் நீ
வெல்லற்கு அரிய அனங்கனை மெய்
வெண்ணீ றாக வெகுண்டோய் நீ
கொல்லக் கருதி வந்தேனைக்
குணங்க ளாலே வணங்குவித்த
சொல்லற்கு அரிய பெரியோய் நின்
தோமில் பாதம் தொழுவல் யான்.

---

4. நீல. 137. மூடம் மூன்று-லோக மூடம், பாஷண்ட மூடம், தேவதாமூடம்; முரண்செய் தோற்றம்-மாறுபட்ட பேய் வடிவு; முனிந் தோய்-போக்கினோய்; வீடும் கட்டும்-மோட்சமும் பற்றும்; வினையின் இன்பம்-நல்வினைகளால் வருகிற சுகம்; காடு கிளர்ந்து-காட்டைக் கலக்கி; பாடற்கு அரிய-புகழ்ந்து பேசுவதற்கு இயலாத, பழிப்பு-குற்றம்.

5. நீல. 138. அல்லல்-துன்பம்; வெவ்வேர்-கொடிய வேர்; அனங் கன்-மன்மதன்; வெண்நீறாக-வெந்து வெண்நிறச் சாம்பலாம் வண்ணம்; வெகுண்டோய்-கோபித்தோய்; தோம் இல் பாதம்-குற்றமற்ற திருவடிகள்

6 உடம்பின் மெய்மை உணர்ந்தோய் நீ
உறங்கல் ஆர்வம் மறுத்தோய் நீ
இடங்கொள் இன்னா வினைஎல்லாம்
எரிக்கும் வாயில் விரித்தோய் நீ
அடங்கல் இல்லேற்கு அருளினால்
அறங்கூர் மாரி பொழிந்தோய் நின்
தடங்கொள் செந்தா மரையடி என்
தலைய வேஎன் தலையவே!

சித்த நன்னெறி பயந்தான்

திருவடிக்கு அருச்சனை

7 கன்று காலனைக் கடந்தாய்
காதற் காமனைக் கடிந்தாய்!
தொன்று மூத்தலைத் துறந்தாய்!
தோற்ற மாக்கடல் இறந்தாய்!
ஒன்ற நோய்பகை ஒருங்கே
உடைந்து வெங்கவந்து உதிர
வென்று இருந்தனை நீயே!—
வீரர்தம் வீரர்க்கும் வீரா!

---

6. நீல. 139. மெய்ம்மை-உண்மைநிலை; உறங்கல் ஆர்வம்-தணியாத விருப்பம்; அறுத்தோய்-போக்கினோய்;இன்னாவினை-தீவினை; வாயில்-வழி; அடங்கலில்லேற்கு-அடங்காது மதம் கொண்டு திரிந்தவளாகிய எனக்கு; அறங்கூர்மாரி-தருமப் பெருமழை; தலையவே-தலையால் ஏற்திப் போற்றுகிறேன்.

7. நீல. 154. கன்றுதல்-சினத்தல்; காலன்-யமன்; கடந்தாய்-வென்றாய்; காதற் காமன்-இன்பவுணர்வினை எழுப்பும் மன்மதன்; கடிந்தாய்-போக்கினாய்; தொன்று-பழமை; மூத்தல்-மூப்படைதல்; தோற்றமாக்கடல்-பிறவிப் பெருங்கடல்; இறந்தாய்-கடந்தாய்; ஒருங்கே-ஒருசேர; உடைந்து-பிறந்து; உதிர-சிதற; வீரன்-வெற்றி பெற்றவன், ஜிநன்.

8 சாதல் நோய்சரை பிறவி
தாய்செய் தீவினைக் கடலுள்
மாதுயர் உழந்து உறுநோய்
மறுகும் மன்உயிர்க்கு எல்லாம்
தீதுஇல் நன்னெறி பயந்து,
திரைசெய் நீள்கரை ஒருவிப்
போத அரும்புணை படைத்தாய்!—
புலவர்தம் புலவர்க்கும் புலவா!

9 அரிய வாயின செய்திட்டு
அமரர் துந்துபி அறைந்து,
புரிய பூமழை பொழிய,
பொன்னெயில் மண்டிலம் புதைந்த
விரிகொள் தண்தளிர்ப் பிண்டி
மரநிழல் இருந்து இருவினையும்
பிரியும் பெற்றியை உரைத்தாய்!
பெரியவர்ப் பெரியவர்ப் பெரியாய்!

10 பொங்கு சாமரை ஏந்திப்
புடைபுடை இயக்கர்நின்று இரட்ட,
சிங்க வாசனத்து இருந்து,
தெளிந்துஒளி மண்டிலம் நிழற்ற,

---

8. நீல. 155. சாதல்-இறப்பு; சரை-மூப்பு; பிறவி-பிறப்பு; உறு நோய்-மிக்க துன்பம்; மறுகு மன்னுயிர்-சுழலும் உயிர்கள்; நன்னெறி-தருமநெறி; நீள்கரை—நீண்ட பிறவிக் கடலாகிய கரை; ஒருவி—நீக்கி; போதரும் புனை-மீண்டு வருவதற்குரிய தெப்பம்; புலவன்-அறிஞன்;

9. நீல. 156. அமரர்-தேவர்; துந்துபி-பேரிகை என்னும் பெரும் பறை; புரிய பூமழை-விருப்பமான மலர்மாரி; பொன்னெயில் மண்டிலம்-சமவசரணம்; விரிகொள்-பரந்த, பிண்டிமரம்-அசோக மரம்; இருவினை-நல்வினை, தீவினை.

10. நீல. 157. பொங்கு சாமரை-விரிந்த வெண்சாமரை; புடை புடை—இருபக்கங்களிலும்; இரட்ட—வீச; ஒளி மண்டலம்-சோதிவட்

திங்கள் முக்குடை கவிப்ப,
தேவர்தம் திருந்துஅவை தெருள,
அங்க பூவமது அறைந்தாய்!—
அறிவர்தம் அறிவர்க்கும் அறிவா!

11 ஊறு யாவதும் உணராய்;
உறல்வகை இதுஎன உரைத்தி!
கூறு வேன்எனக் கூறாய்,
குரல்முரசு அனையதோர் குணத்தை,
சேறல் உள்ளமும் இல்லையாய்!
திருமலர் மிசைஅடி இடுதி!
தேறு மாறு என்னை நின்னை?—
தேவர்தம் தேவர்க்கும் தேவா!

12 கண்ணி னால்ஒன்றும் காணாய்,
காணவும் உளபொருள் ஒருங்கே;
பெண்ணும் அல்லவும் சாராய்;
பிரிதல்இல் பேரின்பம் உடையை;

---

டம்; நிழற்ற-ஒளிவீச; திங்கள் முக்குடை-சந்திரன் போன்று வட்ட வடிவுடைய வெண்குடை மூன்று; கவிப்ப-மேலேமூட; தெருள-தெளிவடைய; அங்கபூவம்-அங்காகமமும், பூர்வாகமும்; அறைந்தாய்-சொன்னாய்; அறிவா-பேரறிவாளனே, முற்றறிவாளனே.

11. நீல. 158. ஊறு-இடையூறு, துன்பம்; யாவதும்-சிறிதும். உறல்வகை-பெறவேண்டும் நெறி; உரைத்தி-உரைக்கின்றாய்; குரல் முரசு-முரசுக்குரல், முரசு முழக்கம்; குணத்தை-குண நலன்களை: சேறல்-செல்லுதல்; திருமலர்-தாமரைமலர்; தேறுமாறு-தெளியும் வகை.

12. நீல. 159. காணவும் உளபொருள்-காண்பதற்குரியதான ஞானப்பொருள்; ஒருங்கே-ஒருசேர, முழுதும்; சாராய்-சேராய்; பிரிதல் இல்-அழிவு இல்லாத; யாவதும்-எதுவும்; ஒளிதிகழ் உருவம்-சோதி வடிவம்; எண்ணில்-ஆராய்ந்தால்.

உண்ணல் யாவதும் இலையாய்;
ஒளிதிகழ் உருவமஃது உளதால்
எண்ணில் யார்நினை உணர்வார்? -
இறைவர்தம் இறைவர்க்கும் இறைவா!

13 சொற்றி; யாவதும் கேளாய்;
சுதநயம் துணிவும் அங்குஉரைத்தி;
கற்று யாவதும் இலையாய்;
கடைஇல் பல் பொருள் உணர்வு உடையை;
பற்று யாவதும் இலையாய்;
பரந்தஎண் செல்வமும் உடையை;
முற்ற யார்நினை உணர்வார்? -
முனைவர்தம் முனைவர்க்கும் முனைவா!

14 அன்மை யாரவர் தாம்தாம்
அறிந்தன உரைத்த பொய் ஆக்கி,
நின்மெய் ஆகிய ஞான
நிகழ்ச்சி நீவிரித்து உரைத்த
சொன்மை யாரிடை தெரிந்தார்
தொடர்வினை முழுவதும் சுடும்நின்
தன்மை யார்பிறர் அறிவார்? -
தலைவர்தம் தலைவர்க்கும் தலைவா!

---

13. நீல. 160 சொற்றி-சொல்கின்றாய்; சுதநயம்-ஆகம விளக்கம்; துணிவு-முற்ற முடிந்த முடிவு; கற்றியாவதுமிலை-கற்றுப் பெறும் பொருள் ஒன்றும் இல்லை. கடையில் பல் பொருள்-அளவில்லாத பல உண்மைகள்; எண்செல்வம்-காட்சிச் செல்வமும் ஞானச் செல்வமும் முதலாயின; முற்ற-முழுமையாய்; முனைவா-முனைவனே, ஆதிமூர்த்தி.

14. நீல. 161. அன்மையார்-அல்லாதவர்; பிற சமயக் கோட்பாடுடையவர்; நின்மெய் ஆகிய ஞானம்-நீ எடுத்துரைத்த ஆகமமாகிய அறிவு; சொன்மை-சொல்லின் உண்மைப் பொருள்; தொடர்வினை-பிறவி தோறும் தொடர்ந்து வருகிற கர்மங்கள். தலைவன்-தேவாதிதேவன், இறைவன்.

## முக்குடையான் அடி மூன்றினும் வந்தித்தல்

15 அங்கம் பயந்தான் அறைந்த சுதக்கடலுள்
பங்கங்கள் சாராப் பரசமையர் சொல் உளவோ?
பங்கங்கள் சாராப் பரசமையச் சொல்லேபோல்,
புங்கவன்தன் சேவடியைச் சேராத பூ உளவோ?

16 பூர்ப்பம் பயந்தான்புகன்ற சுதக்கடலுள்
சார்த்திப் பிறவாத் தவநெறிகள் தாம்உளவே?
சார்த்திப் பிறவாத் தவநெறிகள் தம்மேபோல்,
தீர்த்தன் திருநாமம் கொள்ளாத தேஉளவோ?

17 புலவன் உரைத்த புறக்கேள்வி சாராது
உலகம் நவின்றுஉரைக்கும் ஒத்து எங்குளதோ?
உலகம் நவின்று உரைக்கும் ஒத்தேயும் அன்றிப்
பலவும் பகர்வாப் பயந்தனவே அன்றோ?

18 அலரோடு சாந்தம் அணிந்துஎம் இறைவர்
மலரடியை அல்லதியாம் மற்று அறிவது இல்லை;
மற்றுஅறிவது இல்லாத எம்மை மலரடிகள்
முற்றவே செய்து முடிவிக்கும் அன்றே.

---

15. நீல. 660. அங்கம்-அங்காகமம்; சுதம்-சுருதம்; ஆகமம்; பங்கம்-ஸ்ப்தபங்கம்; பரசமையர்-வேற்றுமதத்தவர்; புங்கவன்-உயர்ந்தோன், அருகன்.

16. நீல. 661. பூர்ப்பம்-பூர்வாகமம்; தீர்த்தன்-தூயோன், அருகன் தே-தெய்வம்.

17. நீல. 662. புறக்கேள்வி - பகுசுருதியாகமம்; நவின்றுரைக்கும்-புகழ்ந்து பேசும்; ஒத்து - வேதம்.

18. நீல. 663. அலர்-மலர்; சாந்தம்-சந்தனம்; மற்று அறிவது-வேறொன்றைத் தெரிவது; முற்றவேசேய்தல்-முழுஞானம் பெறுமாறு அருள்தல்; முடிவிக்கும் - பிறவியை இல்லாது செய்யும்.

19 புனைஉலகிற்கு ஆதிய புங்கவ னார்தம்
இணைஅடியை அல்லதுயாம் இன்புறுவது இல்லை;
இன்புறுவது இல்லாத எம்மை இணைஅடிகள்
துன்புறவுஇல் அக்கதியுள் தோற்றுவிக்கும் அன்றே.

20 இரவிடை நன் மணிபோலும் எண்ணாது உணர்ந்தான்
திருவடியே அல்லதுஎன் சிந்தனையில் இல்லை;
சிந்தனை ஒன்று இல்லாத எம்மைத் திருவடிகள்
அந்திணையில் பேராற்றல் ஆக்குவிக்கும் அன்றே.

---

19. நீல. 664. ஆதிய-முதல்வனாகிய; துன்புறவு இல் அக்கதியுள் துன்பம் இல்லாத மோட்ச கதி; பேரின்பப்பேறு.

20. நீல. 665. நன்மணி-சிறந்த மாணிக்கம்; எண்ணாது உணர்ந்தான்-எண்ணியறியாது இயல்பாகவே முழுதும் உணர்ந்தான்; சிந்தனை-நினைவு; அந்திணை-அழகிய உலகம்.

முற்றும் உணர்ந்தான் திருத்தாள் போற்றி

# அருகன் துதிமாலை

## 4. யசோதர காவியம்

### அனந்த குணக்கடல்

1 உலகம் மூன்றும் ஒருங்குஉணர் கேவலத்து
அலகு இலாத அனந்த குணக்கடல்-
விலகி வெவ்வினை. விடு விளைப்பதற்கு-
இலகு மாமலர்ச் சேவடி ஏத்துவாம்.

---

## 4. யசோதர காவியம்

### குறிப்புரை

1. யசோ. காப்பு. கேவலத்து - கேவல ஞானத்தைக் கொண்டுள்ள அலகு-அளவு; அனந்த குணக்கடல் - கடையிலா ஞானம் முதலாகச் சொல்லப்படும் குணங்கள் நிரம்பிய கடலாகிய அருகபர மேட்டி; விலகி வெவ்வினை என்பதனை வெவ்வினை விலகி என மாறிக்கூட்டுக; இலகுதல் - விளங்குதல்; ஏத்துவாம் - வாழ்த்தி வணங்குவோம்.

உயிரை எண்ணுதல்

2 அறிவோடு ஆலோகம் உள்ளிட்டு
அனந்தமாம் இயல்பிற்று ஆகி,
அறிதலுக்கு அரியது ஆகி,
அருவமாய், அமலம் ஆகி,
குறுகிய தடற்றுஒள் வாள்போல்
கொண்டுஇயல் உடம்பின் வேறாய்,
இறுகிய வினையும் அல்லது
எமதுஇயல்பு என்று நின்றார்.

மும்மணியை எண்ணுதல்

3 உறுதியைப் பெரிதும் ஆக்கி,
உலகினுக்கு இறைமை நல்கி,
பிறவி செற்று, அரிய வீட்டின்
பெருமையைத் தருதல் ஆனும்
அறிவினில் தெளிந்த மாட்சி
அரதனத் திரயம் என்னும்
பெறுதலுக்கு அரிய செல்வம்
பெற்றனம் பெரிதும் என்றார்.

---

2. யசோ. 50. அறிவு-ஞானம்; ஆலோகம்-அலோகம், உலகம்; அல்லாத பகுதி; அனந்தமாம் இயல்பு-அளவில்லாத குணங்கள்; அருவம் - உருவம் இல்லாதது. அமலம் – அழுக்கற்றது, தூயது: தடறு - வாளுறை; இறுகிய வினை - சேர்ந்து பிணித்துள்ள வினைத் தொடர்பு. நின்றார் - நின்றவராகிய சினேந்திரர். நின்றார் எமக்குப் புகலிடமாவார் என்று வருவித்துக் கொள்க.

3. யசோ. 51. உறுதி - உயிர்களுக்கு நிலைபேறுதரும் நற்பொருள்கள்; இறைமை – இறைவனாம் தன்மை; பிறவிசெற்று - பிறப்புத் தோன்றாவகை கெடுத்து; அரதனத்திரயம்-இரத்தினத்திரயம் என்று சொல்லப்படும் மூன்று செல்வம்: நற்காட்சி, நன்ஞானம், நல்லொழுக்கம். என்றார்-என்று புகழ்ந்து தொழுதார் என்பதாம்.

## சித்தர் பரமேட்டி

4 ஈங்குநம் இடர்கள் தீர்க்கும்
இயல்பினார்-நினைந்து மேல் இவ்
ஓங்கிய உலகத்து உம்பர்
ஒளிசிகா மணியின் நின்றார்
வீங்கிய கருமக் கேட்டின்
விரிந்தஎண் குணத்தர் ஆகித்
தீங்குஎலாம் அகற்றி நின்ற
சித்தரே-செல்லல் தீர்ப்பார்.

## தீர்த்தகரர்

5 பெருமலை அனைய காதிப்
பெரும்பகை பெயர்த்து. பெற்ற
திருமலி கடையில் நான்மைத்
திருவோடு திளைப்ப ரேனும்
உரிமையின் உயிர்கட்கு எல்லாம்
ஒருதனி விளக்கம் ஆகி,
திருமொழி அருளும் தீர்த்த
கரர்களே துயர்கள் தீர்ப்பார்.

---

4. யசோ 52. தீர்க்கும் - போக்கும்; உம்பர் - மேலிடத்தே, உச்சியிலே; சிகாமணி-முடிமணி; எண்குணத்தர் - எட்டுவகை யான குணத்தினையுடையார். செல்லல் - துன்பம்.

5. யசோ. 53. காதிப்பெரும்பகை-காதி கன்மங்களாகிய பெரிய பகை; பெயர்த்து - நீக்கி; திருமலி-ஞான நலம் மிகுந்த; கடையில் நான்மைத் திரு-அனந்த சதுட்டயங்களான வரம்பில்லாத கேவல ஞானம் முதலான நான்கு திரு; அனந்த நான்மைகளாவன: கடையிலா அறிவு கடையிலாக் காட்சி, கடையிலா இன்பம், கடையிலா வீரியம். ஒரு தனி விளக்கம்-ஒப்பற்ற ஞானவிளக்கம்; திருமொழி-ஞான மொழி; திவ்விய தொனி; தீர்த்தகரர்-தீர்த்தங்கரர்கள்.

## ஆசிரியர்

6 ஐவகை ஒழுக்கம் என்னும்
அருங்கலம் ஒருங்கு அணித்தார்-
மெய்வகை விளக்கம் சொல்லி
நல்லறம் மிக அளிப்பார்-
பவ்வியர் தம்மைத் தம்போல்
பஞ்சநல் ஒழுக்கம் பாரித்து
அவ்வியம் அகற்றும் தொல்ஆ-
சிரியர்எம் அல்லல் தீர்ப்பார்.

## உபாத்தியாயர்

7 அங்கநூல் ஆதி யாவும்
அரில்தபத் தெரிந்து, தீமைப்
பங்கவிழ் பங்கம் ஆடி,
பரமன்நன் னெறி பயின்றிட்டு
அங்கபூ வாதி மெய்ந்நூல்
அமிழ்து அகப்படுத்து, அடைந்த
நங்களுக்கு அளிக்கும் நீரார்
நம்வினை கழுவும் நீரார்.

---

6. யசோ 54 ஐவகை ஒழுக்கம்-ஞானம் முதலிய ஐந்து; அருங்கலம் - அணிகலம்; ஒருங்கு-ஒருசேர; மெய்வகை - தத்துவக் கூறுபாடுகள்; நல்லறம்-வீடுபேற்றிற்கு ஏதுவான அறநெறிகள்; பவ்வியர் தம்மை - பக்குவமுற்றவர்களை; பஞ்சநல் ஒழுக்கம்-ஐவகைப்பட்ட நல்லொழுக்கம, பாரித்து-மேற்கொள்ளச் செய்து; அவ்வியம்-குற்றம்; அல்லல்-துன்பம்.

7. யசோ. 55. அங்கநூல் ஆதி-அங்காகமம் முதலிய ஆகமங்கள்; அரில்தப-குற்றம் கெட; தீமைப் பங்கவிழ்-தீமைகள் பிரிவு இல்லாத பரமன் நன்னெறி-அருகபரமேட்டி ஆதியில் காட்டி[illegible]ளிய அறநெறி; அங்கபூவாதி-அங்காகமம், பூர்வாகமம் முதலியன, [illegible]ந்-

### சாதுக்கள்

8 பேதுஉறு பிறவி போக்கும்
பெருந்திரு உருவுக்கு ஏற்ற
கோதுஅறு குணங்கள் பெய்த
கொள்கலம் அனைய ராகி,
சேதியின் எறியின் வேறு
சிறந்தது சிந்தை செய்யாச்
சாதுவர் அன்றி யாரே
சரண்நமக்கு உலகின் ஆவார்.

### இறைவனது அறம் தரு பயன்

9 அருள்புரி மனத்தர் ஆகி,
ஆருயிர்க்கு அபயம் நல்கி,
பொருள்கொலை களவு காமம்
பொய்இவை புறக்க ணித்திட்டு,
இருள்புரி வினைகள் சேராது
இறைவனது அறத்தை எய்தின்,
மருள்செய வருவது உண்டோ,
வானவர் இன்பம் அல்லால்?

---

நூல் அமிழ்தம்-பரமாகமத்து மெய்ப்பொருளாகிய அமுதம். அளிக்கும்-அருள் செய்யும்; நீரார் - தன்மையுடையார்; கழுவும்-போக்கும்.

8. யசோ. 56. பேது-பேதைமை; பெருந்திருஉரு- பெரிய அழகிய வடிவம்; கோது-குற்றம்; கொள்கலம்-ஏற்றுக்கொள்ளும் பாத்திரம், இருப்பிடம்; சேதியின் எறியின்-தம்மை உறுப்பு உறுப்பாக வாளால் பிளந்தாலும், சிறந்தது சிந்தை செய்யா-சிறந்ததாகிய அறம் ஒன்றைத் தவிர வேறு எதனையும் எண்ணாத; சாதுவர் - சாதுக்கள், சரண் புகலிடம் தருபவர்.

9. யசோ. 300 புரிதல் - நினைதல்; அபயம்-அடைக்கலம், ஆதரவு; பொருள் - பிறன் பொருள் வெளவல்; புறக்கணித்திடுதல் - சேராது நீக்கிவிடுதல்; இருள் - அறியாமை; இறைவனது அறம்-அருகபரமன் அருளிய திருவறம்; மருள் - மயக்கம்; வானவர் இன்பம் - தேவகுல இன்பம்.

10 ஆக்குவது ஏதுஎனில், அறத்தை ஆக்குக!
போக்குவது ஏதுஎனில், வெகுளி போக்குக!
நோக்குவது ஏதுஎனில், ஞானம் நோக்குக!
காக்குவது ஏதுஎனில், விரதம் காக்கவே!

---

10. போக்குவது - நீக்கத்தக்கது; வெகுளி - சினம்; நோக்குவது - ஆராயத்தக்கது: ஞானம் - ஞான நூல்கள்; விரதம் - பல்வகை விரதங்கள்.

## 5. நாககுமார காவியம்

### நேமீசர் வணக்கம்

1 மணியும்நற் கந்த முத்தும் மலிந்த முக்குடை இலங்க,
அணிமலர்ப் பிண்டி யின்கீழ் அமர்ந்த நேமீசர் பாதம்
பணியவே வாணி பாதம் பண்ணவர் தமக்கும் எந்தம்
இணைகரம் சிரசில் கூப்பி இயல்புறத் தொழுதும் அன்றே.

### சிரீவர்த்தமான தீர்த்தன் துதி

### முன்னிலைப்பரவல்

2 பொறியோடு வல்வினை வென்ற புனிதன் நீயே!
பூநான்கு மலர்ப்பிண்டிப் போதன் நீயே!
புறவிதழ்சேர் மரைமலர்மேல் விரல்நால் விட்டுப்
பொன்னெயிலுள் மன்னியபுங் கவனும் நீயே!
அறவிபணி பணவரங்கத்து அமர்ந்தாய் நீயே!
ஐங்கணைவில் மன்மதனை அகன்றாய் நீயே!
செறிபுகழ்சேர் சித்திநகர் தன்னை ஆளும்
சிரீவர்த்த மானன்எனும் தீர்த்தன் நீயே!

---

1. நாக. காப்பு-மணி-இரத்தினம்; கந்தம்-நறுமணப்பொருள்; வாணி - கலைமகள்; பண்ணவர் - முனிவர்; குரு; இணைகரம்-இரண்டுகைகள்; இயல்புற - முறைப்படி.

2. நாக. 16 பொறி - ஐம்பொறி; போதன்-ஞானி; மரைமலர் - தாமரை மலர்; பொன்னெயில் - சமவசரணம்; அறவி - அறத்தன்மை;

3 கஞ்சமலர்த் திருமார்பில் தரித்தாய் நீயே!
காலம் ஒரு மூன்று உணர்ந்த கடவுள் நீயே!
பஞ்சாத்தி தான்உரைத்த பரமன் நீயே!
பரமநிலை ஒன்றுளனவே பணித்தாய் நீயே!
துஞ்சாநல் உலகுதொழும் தூயன் நீயே!
தொல்வினைஎல் லாம்எரித்த துறவன் நீயே!
செஞ்சொற் பாவையை நாவில் சேர்த்தாய் நீயே!
சிரீவர்த்த மானன்எனும் தீர்த்தன் நீயே!

4 அறவன்நீ, அமலன்நீ, ஆதி நீயே:
ஆரியன்நீ, சீரியன்நீ, அனந்தன் நீயே:
திரிலோக லோகமொடு தேயன் நீயே!
தேவாதி தேவன் எனும் தீர்த்தன் நீயே!
எரிமணிநற் பிறப்புடைய ஈசன் நீயே!
இருநான்கு குணமுடைய இறைவன் நீயே!
திரிபுவனம் தொழுது இறைஞ்சும் செல்வன் நீயே!
சிரீவர்த்த மானன்எனும் தீர்த்தன் நீயே!

---

பண அரங்கம் - நாகபடத்தின் நிழலிடம்; ஐங்கணை - மன்மதனின் ஐந்து மலர் அம்புகள்; தீர்த்தன் - தூயோன்.

3. நாக. 17. கஞ்சமலர் - தாமரை மலர்; பஞ்சாத்தி - பஞ்சாத்தி காயம்; பரம நிலை - மேலான முத்திநிலை: துஞ்சா நல் உலகு-உறங்காது யோகநிலையில் இருக்கும் முனிவர்: செஞ்சொற்பாவை - கலைமகள்.

4. நாக. 18. அறவன் - தருமமே உருவானவன்: அமலன் - குற்றமற்றவன்: ஆரியன்-மேலானவன்: அனந்தன்-எல்லாமாயிருப்பவன்: திரிலோகம் - மூன்று உலகம்: எரிமணி - ஒளிவீசும் இரத்தினம்: இருநான்குணம் - எட்டுக்குணம்: திரி புவனம் - மூன்று உலகமும்.

5 முனிவர்தமக்கு இறையான மூர்த்தி நீயே!
மூவா முதல்வன்எனும் முத்தன் நீயே!
இனிமையா னந்தசுகத்து இருந்தாய் நீயே!
இயல்ஆறு பொருள்உரைத்த ஈசன் நீயே!
முனிவுமுதல் இல்லாத முனைவன் நீயே!
முக்குடையின் கீழ்அமர்ந்த முதல்வன் நீயே!
செனித்திறக்கும் மூப்புஇறப்பும் தீர்த்தாய் நீயே!
சிரீவர்த்த மானன்எனும் தீர்த்தன் நீயே!

6 நவபதம் நன்னயம்ஆறும் நவின்றாய் நீயே!
நன்முனிவர் மனத்துஇசைந்த நாதன் நீயே!
உவமைஇலா ஐம்பதமும் உரைத்தாய் நீயே!
உத்தமர்தம் இருதயத்துள் உகந்தாய் நீயே!
பவமயமாம் இருவினையைப் பகர்ந்தாய் நீயே!
பரமநிலை அமர்ந்த பரமன் நீயே!
சிவமயமாய் நின்றதிகழ் தேசன் நீயே!
சிரீவர்த்த மானன்எனும் தீர்த்தன் நீயே!

## நாககுமாரனின் வாழ்த்து

7 முத்திலங்கு முக்குடைக்கீழ் மூர்த்தி திருந்தடியை
வெற்றியுடன் பணிந்தவர்கள் விண்ணுலகம் ஆண்டுவந்து
இத்தலமும் முழுதாண்டு இருங்களிற்று எருத்தின்மிசை
நித்தில வெண்குடைக்கீழ் நீங்காது இருப்பவரே.

---

5. நாக. 19. இறை - தலைவன், மூவாமுதல்வன்-என்றும் மூப்பு இல்லாது ஒருதன்மையாயிருப்பவன். இயல் ஆறு பொருள்-உலகியல் நிலை பெறுவதற்கான ஆறு பொருள்கள்: முனிவு,-சினம்: முனைவன் - முன்னோன்: செனித்து - பிறந்து:

6. நாக. 20. நவபதம் - ஒன் பதங்கள். அதாவது நவபதார்த்தங்கள் நயம் ஆறு - ஆறு நயங்கள்: நாதன் - தலைவன்: ஐம்பதம்-ஐந்து பதவி: பவம் - பிறப்பு: பரமநிலை - மேலான நிலை, தேசன்-ஒளி படைத்தவன்.

8 கமலமலர் மீதுறையும் காட்சிக் கினியமூர்த்தி
அமலமலர்ப் பொற்சரணை அன்பாய்த் தொழுபவர்கள்
இமையவர்கள் உலகத்து இந்திரராய் போய்உதித்து
இமையவர்கள் வந்துதொழ இன்புற்று இருப்பாரே.

9 அரியா சனத்தின்மிசை அமர்ந்த திருமூர்த்தி
பரிவாக உன்னடியைப் பணிந்து பரவுவர்கள்
திரிலோ கமும்தொழவே தேவாதி தேவருமாய்
எரிபொன் உயிர்விளங்கி இனிய முத்தி சேர்பவரே.

அறவுரை

10 அறம்இன்றிப் பின்னை ஒன்றும்
உயிர்க்கு அரண் இல்லை என்றும்
மறமின்றி உயிர்க்கு இடர்செய்
மற்றொன்றும் இல்லை என்றும்
திறம்இது உணர்ந்து தேறித்
தீக்கதிப் பிறவிக் கஞ்சி
மறமிதை விட்டு அறத்தில்
வாழுமின் உலகத் தீரே.

---

7. நாக. 118. முத்துஇலங்கு-முத்துமாலைகளால் அலங்கரிக்கப்பட்ட இத்தலம் - இந்தப் பூ மண்டலம், களிற்று எருத்து - யானையின் பிடரி.

8. நாக. 119. கமல மலர் - தாமரை மலர்: அமலம் - களங்கமின்மை இமையவர் - தேவர்.

9. நாக. 120. அரியாசனம் - சிங்காசனம்; பரவுவர்கள் - தொழுது துதிப்பவர்கள்: திரிலோகம் - மூன்று உலகம்: எரிபொன் - சுடர் விட்டு ஒளிரும் பொன்.

10. நாக. 170. அரண் - புகலிடம்; மறம் - பாவம்; இடர் - துன்பம்; தேறி - தெளிந்து; அறத்தின் வாழுமின்-இல்லற துறவற நெறியைப் பின்பற்றி வாழுங்கள்.

## 6. உதயணகுமார காவியம்

### கடவுள் வாழ்த்து

மணியுடன் கனகம் முத்தம்
மலிந்தமுக் குடை இலங்க
அணிமலர்ப் பிண்டி யின்கீழ்
அமர்ந்த நேமிசர் பாதம்
பணிபுபின் வாணி பாதம்
பண்ணவர் தாள் களுக்குஎம்
இணைகரம் சிரத்தில் கூப்பி,
இயல்புறத் தொழுதும் அன்றே.

## 7. வளையாபதி

### அருகசரணம்

1 உலகம் மூன்றும் ஒருங்குடன் ஏத்துமாண்
திலகம் ஆய திறல்அறி வன்அடி
வழுவுஇல் நெஞ்சொடு வாலிதின் ஆற்றவும்
தொழுவல் தொல்வினை நீங்குக என்றுயான்.

---

கனகம் - பொன்; முத்தம் -முத்து; மலிந்த - மிக்குள்ள; பணிவு-பணிந்து-வாணி - கலைமகள்; பண்ணவர் - சாதுக்கள்; இணைகரம் இரண்டு கைகள்; சிரம் - தலை; இயல்புற - முறைப்படி.

1. ஒருங்குடன் - ஒரு சேர; திலகம் - நெற்றித்திலகம் போன்றப் அதாவது மேலான, திறல் அறிவன் - ஆற்றல் மிக்க முற்றறிவுடைய அருக தேவன்; வழு - குற்றம்; வாலிதின் ஆற்றவும் - தூய்மையாகச் செய்யவும், தொழுவல் - தொழுது வழிபடுவேன்.

2 துக்கம் துடைக்கும் துகள்அறு காட்சிய
நிக்கந்த வேடத்து இருடி கணங்களை
ஒக்க அடிவீழ்ந்து உலகியல் செய்தபின்,
அக்கதை யாழ்கொண்டு அமைவரைப் பண்ணி.

---

2. துக்கம் துடைக்கும் - பிறவிப் பெருந்துன்பத்தைமுற்றப் போக்கும் துகள் - குற்றம்: நிக்கந்த வேடத்து இருடி - திகம்பரராகிய சமண முனிவர்; உலகியல் செய்த பின்-உலகத்தே ஆன்றோர் போற்றும் கடவுளைத் தொழுதலின்; அமைவரப் பண்ணி-யாழின் சுருதி முறையைச் சரிசெய்து; அக்கதை ; அம்முனிவரின் புகழ்ச்சரிதங்கள்.

முற்றும் உணர்ந்தான் திருத்தாள் போற்றி

# அருகன் துதிமாலை

## வாமனமுனிவரின் வாழ்த்துமாலை

## மேருமந்தர புராணம்

### விமல தீர்த்தங்கரர் வாழ்த்து

1 குற்றங்கள் இல்லான், குணத்தால் நிறைந்தான், [குணத்தால்
மற்று இந்த வையம் அளந்தான் வையம் நின்ற பெற்றி
முற்றும் உரைந்தான், உரைஈ ரோன்பதாயது ஒன்றால்
செற்றங்கள் தீர்ப்பான் விமலன் சரண் சென்னிவைத்தேன்.

---

## 8. மேருமந்தர புராணம்

### குறிப்புரை

1 மே. பு. 1 குணம்-அனந்த ஞானாதி குணங்கள், அவை யாவன: அனந்த ஞானம், அனந்த தரிசனம், அனந்த சுகம், அனந்த வீரியம் என்பன; வையம்-உலகம்; அளத்தல்-அளவிட்டறிதல்; வையம் நின்ற பெற்றி-உலகத்தில் உயிர் உயிரல் பொருள்கள் நிலைபெற்றுள்ள தன்மை; முற்றும்-முழுமையும்; எஞ்சாமல் என்றபடி; உரை ஈரோன்பதாயது-பதினெட்டு வகையான மொழிகள்; ஒன்று-இங்கே இறைவனின் திவ்ய தொனி; செற்றம்-நெடுங்காலம் நிகழ்வதாகிய பகைமை; விமலன்-ஸ்ரீவிமல தீர்த்தங்கரர்; தீர்த்தங்கரர் இருபத்து

## நல்லோர்கள் போயவழி

2 நல்லோர்கள் போயவழி நாலடிப் போயினாலும்
பொல்லாங்கு நீங்கிப் புகழாய்ப்புண் ணியமும் ஆகும்;
சொல்லால் நிறைந்த சுதகேவலி சென்ற மார்க்கம்
சொல்வான் எழுந்தேற்கு ஒருதீமையுண் டாகவற்றே.

## சுயம்புநாம தீர்த்தங்கரர் துதி

3 பூமாலை முதலாய புனையாத திருமூர்த்தி;
காமாதி வென்றுயுர்ந்த கடவுள்ளன் றறையுமே;
காமாதி வென்றுயுர்ந்த கடவுள்ளன் றறைந்தாலும்,
கோமான்நின் திருவுருவம் கொண்டு உவப்பர் அரியரே.

4 விளக்ககத்துப் பளிங்கேபோல் விரிந்தொளிமூன் றுடை
[மேனி
அளப்பரிய ஒளியகத்துள் இருப்பதென் றறையுமே;
அளப்பரிய ஒளியகத்துள் இருப்பதென்றறைந்தாலும்,
துளக்கறவென் றுயர்ந்தோயைத் தொழுதெழுவார்
[அரியரே.

---

நால்வருள் பதின்மூன்றாம் தீர்த்தங்கரர்; சரண்-பாதம்; சென்னி-தலை; விமலன் திருப்பாதங்களில் தலை படிய வணங்குவேன் என்பதாம்.

2 மே. பு. 4. நல்லோர்கள்-நற்குணம் வாய்ந்த பெரியோர்; நாலடி-நான்கு அடிதூரம்; பொல்லாங்கு-கேடு; சுத கேவலி-சுருத கேவலி, சாத்திரங்களினால் பூரண ஞானம் பெற்றவர்கள்; மார்க்கம்-வழி; எழுதல்-தொடங்குதல்; உண்டாகவற்றோ?-உண்டாகுமோ?

3 மே. பு. 64. திருமூர்த்தி-அழகிய திருமேனியுடையவன்; காமாதி-ஆசை முதலிய குற்றங்கள்; அறைதல்-சொல்லுதல், தெரிவித்தல் உவத்தல்-மகிழ்தல்; அரியர்-மிகவும் அரியராயுள்ளார்; அதாவது அறிபவர் மிகமிகச் சிலரே என்றபடி.

4 மே. பு. 65. விளக்கு அகத்து-ஒளி விளக்கை உள்ளே கொண்டது; பளிங்கு-படிகம்; கண்ணாடி; ஒளி மூன்று-மனம், வாக்கு, காயங்களா

5 அமலமாய் அருள்சுரந்திட்டு அறிவறிய திருமூர்த்தி;
விமலமாய் விரிந்தநாற் குணத்தலைமை விரிக்குமே;
விமலமாய் விரிந்தநாற் குணத்தலைமை விரித்தாலும்,
கமலமீது உலவும் உனைக் காதலிப்பார் அரியரே.

அருகன் சரணமே அரண்

6 வெருவுறு துயரம் துய்த்து
விலங்கினுள் மயங்கும் போழ்தும்,
மருவியம் கருவின் மாக்கள்
யாக்கையின் வருந்தும் போழ்தும்,
எரியன நரகின் மூழ்கி
எழுந்துவிழ்ந் தலறும் போதும்,
அருகன சரணம் அல்லால்
அரண்பிறிது இல்லை கண்டாய்.

---

கிய மூன்று ஒளி; துளக்கு-அசைவு; அறுதல்-நீங்குதல்; தொழுதெழு வார்-வணங்கிச் செல்பவர்.

5 மே பு. 66. அமலம்-மாசின்மை; விமலம்-குற்றமின்மை; நற்குணம்-அனந்த ஞானம் முதலிய நற்குணங்கள்; கமலம்-செந்தாமரை மலர்; காதலிப்பார்-விரும்பித் தொழுவார்.

6 மே. பு. 111. வெருவுறுதல் – அஞ்சுதல்; துயரம்–துன்பம்; துய்த்தல்-அனுபவித்தல்; விலங்கு-விலங்குகதி; மருவி அம் கருவின்-அம் கருவின் மருவி என்க, அம்கரு-நீர்வடிவாகிய நுண்ணிய கர்ப்பம்; யாக்கை-உடம்பு; போழ்து-பொழுது; எரியன-நெருப்புக்குச் சமமான; அலறுதல் - அழுதுஅரற்றுதல்; அருகன–அருகனுடைய; அரண்-காப்பு; பிறிது-வேறு.

## தேவர்தம் துதிமாலை

7 உவத்தல் காய்தலால் உன்திரு வடித்தலத் தெழுந்
[தோர்க்கு
உவத்தல் காய்தல்உன் திருவுளத்து ஒன்றுநீ இலையேல்
சுவர்க்கம் மாநர கத்துஅவர் துன்னுவது உனது
தவத்தின் தன்மையோ தம்வினைத் தன்மையோ,
[அருளே.

8 இறந்த காதிகள் நான்மையும் அழிந்நவக் கணத்தே
நிறைந்த நான்மையும் வானவர் நிலையுடன் தளராப்
பறந்து வந்துநின் திருவடி பரவுவது இதுஉன்
சிறந்த தன்மையோ திருவறத்து இயற்கையோ
[அருளே.

9 குற்றம் ஒன்று இலையெனில், குற்றம்மூன்றுநீ
[உரைத்தாய்;
பற்று நீஇலை யென்னில், உலோகம்உன் பற்றுஆம்
சுற்றம் நீஇலாய் என்னில், எவ் உயிரும்உன் சுற்றம்;
அற்றம் நீஇல்லாய் முனிவர் கோன் ஆயதோர்
[மாயம்.

---

7 மே. பு. 128. உவத்தல்-மகிழ்தல்; காய்தல்-சினத்தல்; எழுந்தோர்-வந்தடைந்தவர்; துன்னுதல்-அடைதல்; அருள்வாய்-பொழிந்தருள்வாய்.

8 மே. பு. 129. இறத்தல்-கெடுதல்; காதிகள் நான்மை-நான்கு காதிகருமங்கள்; நிறைந்த நான்மை-அனந்த சதுஷ்டயம்; நிலை தளரா-இருக்கைகள அசைய; பறந்து வருதல்-விரைந்து வருதல்; திருவறம்-ஜிநதர்மம்.

9 மே. பு. 130. குற்றம் மூன்று-முக்குற்றம்: காமம், வெகுளி, மயக்கம்: உலோகம் மூன்று-மூன்று உலகம்: மேலுலகம், நடு லோகம், கீழ் உலகம்; பற்று-பிடிப்பு; சுற்றம்-உறவு; அற்றம்-இறுதி, சோர்வு; மாயம்-விந்தை.

110 அறிவு நீஇலை ஒன்றலது, எமக்கு அவை அநேகம்;
பிறவி நீஇலை; யாங்களோ பிறவியில் பெரியோம்;
செறிவது ஓர்கதி உனக்குஇலை; எமக்குநான்கு;
[இவற்றால்
வறியைநீ; எம்மை ஆட்கொண்ட வசியிது பெரிதே.

சஞ்சயந்த பட்டாரகர் துதி

111 விதிகள் நான்கையும் கடந்தனை, அடைந்தனை
விகலம்இல் ஒருநான்மை;
மதிகள் நான்கையும் கடந்தனை, அடைந்தனை
உலகெலாம் மதிஒன்றில்;
கதிகள் நான்கையும் கடந்தனை, அடைந்தனை
அகதியைக் கதியின்றித்
துதிகள் நான்கையும் கடந்ததோர் துறவுடைச்
சுகத எம் பெருமானே!

---

110 மே. பு. 131. அறிவு-ஞானம்; அநேகம்-பல; பெரியோம்-மிகுந்த வர்களாயிருக்கின்றோம்; செறிவது-வந்து பொருந்துவது; நான்கு-நான்கு கதி; தேவர், மக்கள், விலங்கு, நரகர்; வறியை-வறுமையை யுடையாய்; ஒன்று இல்லாதவனானாய்; ஆட்கொள்ளுதல்-அடிமை கொள்ளுதல்; வசி-வசியம்.

111 மே. பு. 173. விதிகள் நான்கு-காதிகள் நான்கு; காதிகளாவன முத்திக்குப் பாதகமாயுள்ள கன்மங்கள். அவையாவன: ஞானா வரணீயம், தரிசனாவரணீயம் மோகநீயம், அந்தராயம் என்பன்; மதிகள் நான்கு-மதி,சுருத, அவதி, மனப்பர்யயம் என்னும் நான்கு ஞானங்கள்; விகலம்-குற்றம்; மதி-கேவல ஞானம்; கதிகள் நான்கு-தேவ, மனித, விலங்கு; நரக கதிகள்; அகதி-அ கதி, அந்தமேற் கதியான மோட்ச கதி; துதிகள் நான்கு-அரஹந்த சித்த சாது தர்மம் என்கிற நான்கு துதிகள்; சுகத-இன்பமுடைய; பெருமான்-தலைவன்.

12. உலகம் மூன்றையும் ஏந்திடும் ஆற்றலை;
ஒரு கணத்து உலகத்தின்
அலகுஇல் நீளமும் அகலமும் உயரமும்
அணுவினால் அளக்கிற்கும்
இலகு தன்மையை; இயல்பில்எவ் வுயிர்களும்
இயற்றும் அத்தொழில் செய்து,
விலகி நின்றிடும் விசித்திரக் கிரியை; நல்
வீரிய விறல் வேந்தே.

13 மறைகள் மாய்ந்திட வான்பொறி ஐந்தையும்
மாற்றி, மற்று அவற்றால்ஆம்
முறையும் நீங்க, மூ வுலகினோடு அலோகின்முக்
காலத்தின் நிகழ்வு எல்லாம்
உறலும் ஓர்தலும் இன்றியே ஓர்கணத்து
ஒற்றுமை முதலாய
அறியும் நின்அறிவு அறிவதோர் அறிவுஎமக்கு
அருள்செய்எம் பெருமானே.

---

12 மே. பு. 174. ஏந்திடுதல்-தாங்குதல்; கணம்-கணப்பொழுது; அணு-பரமாணு; இலங்குதல்-விளங்குதல்; இயல்பு-இயற்கையான குணம்; விலகி நிற்றல்-பற்று இன்றி நீங்கி நிற்றல்; விசித்திரம்-வியப்பு, ஆச்சரியம்; விரல்-ஆற்றல், வேந்தன்-தலைவன்.

13 மே. பு. 175. மறைகள்-இயல்பான குணங்களை மறைக்கும் கர்மங்கள்; மாய்ந்திடுதல்-நீங்கிப் போதல்; வான்-பெருமை; பொறி ஐந்து-மெய், வாய், கண், மூக்கு செவி என்னும் ஐந்து அறி கருவிகள்; மாற்றுதல்-அவை சென்ற வழிச் செல்ல விடாது தடுத்தல்; அவற்றால்-அந்தப் பொறிகளால்; அவற்றால் ஆம் முறை-அப்பொறி களுக்கு இலக்காகும் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐம்புலன்கள்; மூவுலகும் - மேலுலகம், பூவுலகம், கீழ்லோகம்-அலோகம்-உலகம் இல்லாத பகுதி; முக்காலம் - சென்றகாலம் நிகழ்காலம், வருங்காலம்; நிகழ்வு-நிகழ்ச்சி உறல்-அடைதல்; ஓர்தல்; எண்ணுதல்; நின் அறிவு-உன்னுடைய இயல்பான ஞானம்.

14 பொறிகள் ஆறில்ஐம் புலத்தினால் கதியின்முக்
காலத்து இருபோகத்து
உறவி யாவையும் உற்ற இன்பத்தினோடு
உனதுஇன்பந் தனைஒப்பிந்து
அறியின் மற்றவை அணுவும் ஆகாயமும்
அனைய உன் பேரின்பத்து
உறைதி உன்னைநீ உன்னுளே அனுபவித்து
உலகவுந் தமன்நீயே.

ஆதி வேதத்து நாதனாகிய இறைவன் பாதத்தை
வணங்கி விநமியும் நமியும் துதித்தல்

15 மூன்றுலகம் ஏத்தவரும் முத்திக்கு இளவரசாய்
ஆன்ற அனுத்தரத்துள் அன்றுஅமர்ந்தாய் நீயே
ஆன்ற அனுத்தரத்துள் அன்றமர்ந்து வந்தாயை
மூன்றுலகம் ஏத்திய வாறுசொல்ல முடியாதே.

16 அந்தரம்ஒன்று இன்றிவரு முத்திக்கு இளவரசா
மந்தரத்தின் மாண்ட சிறப்பமர்ந்தாய் நீயே!
மந்தரத்தின் மாண்ட சிறப்பமர்ந்து, மண்ணுலகத்து
அந்தரத்தை நீக்கும் அரசளித்தாய் நீயே!

---

14 மே. பு. 176. பொறிகள் ஆறு-ஐம்பொறிகளோடு மனமும் சேர ஆறு பொறிகளாம்; இருபோகம்-போக உபபோகங்கள். அதாவது ஒருமுறை அனுபவிப்பனவும் மீண்டும் மீண்டும் அனுபவிப்பனவும், உறவி-உறவு; ஒப்பித்து-ஒரு சேர வைத்து; அனைய-ஒப்பன, உறை-தங்கியிருக்கின்றாய்; உத்தமன்-மேலானவன்.

15 மே. பு. 189. ஆன்ற-நிறைந்த, மேலான; அனுத்தரம்-பஞ்சானுத்தரம்என்னும் அகமிந்திர உலகம்; ஏத்தியவாறு-துதித்தவகை;

16 மே. பு. 190. அந்தரம்-இடையூறு, தீமை; மந்தரம்-மகாமேரு; மாண்ட-மாட்சிமைப்பட்ட; அரசு-இராச்சியம்.

17 ஆதியோடு அந்தம்இலா முத்திக்கு இளவரசாய்
மாதவனாய் மண்ணின் மிசையமர்ந்தாய் நீயே!
மாதவனாய் மண்ணின் மிசையமர்ந்தோய்,
வான்புகழே
ஓதிய மூவுலகும் ஏத்தாவா றுண்டோ?

## சிம்மசந்திர முனிவனை இராமத்தை வணங்கிப் போற்றுதல்

18 புடையவர் மெலியப் பொங்கும்
கடையவர் செல்வம் போல
இடையது மெலிய வீங்கி
எழுந்திணைந் திருந்த கொங்கை
கடையவர் இடரு றந்தம்
கீழ் அடி அடைவ தேபோல்
இடையடி அடையக் கண்டு
துறந்த எம்இறைவ போற்றி!

---

17 மே. பு. 191 ஆதி-தொடக்கம்; அந்தம்-முடிவு; மாதவன்-மிகப் பெருந் தவத்தையுடையவன்; வான்புகழ்-பெரும்புகழ்.

18 மே. பு. 438 புடையவர்-பக்கத்திலிருக்கும் பெரியோர்; பொங்குதல் மேலெழுதல்; கடையவர்-தாழ்ந்த குணமுடையவர்; இடை-இடுப்பு, அரை; எழுதல்-மேலோங்குதல்; இணைந்திருத்தல்-இரட்டையாகச் சேர்ந்திருத்தல்; கொங்கை-முலை; இடருற-கேடுஅடைய; அடி அடைதல் - பாதத்தில் வந்து தொழுதல்; இடையடி-இடையினது அடியில் அடைதல்; தளர்ந்து தொங்கிவிடும் நிலைமையைச் சுட்டிய வாறாம்; துறத்தல்-ஆசைகளிலிருந்து விடுபடுதல்; போற்றி-வணக்கத்தைத் தெரிவிக்கும் சொல்.

19 காம்பேனத் திரண்டு மைந்தர்
உள்ளத்தைக் கனற்றும் மென்தோள்
பாம்பினது உரியைப் போல
பசையற்றுத் திரையக் கண்டும்
தேம்பல்இல் மொழியி னார்தம்
திறத்துளி வெறுத்துப் போந்து
காம்புடை அடவி சேர்ந்த
காவல பாதம் போற்றி !

20 பெரியவர் பாதம் சேர்ந்த
பேதையர் சிந்தை போலக்
கரியமென் கூந்தல் காலத்
தால்கறுப் பொழியக் கண்டும்
புரவலர் செல்வம் பார்க்கின்
புற்புதம் போலும் என்றும்
மருவிய அரசு நீத்த
மாதவ! பாதம் போற்றி !

---

19 மே. பு. 439. காம்பு-மூங்கில்; கனற்றல்-ஆசையால் வெதும்பச் செய்தல்; உரி-சட்டை; திரைதல்-தோல் சுருங்கி அழகிழத்தல்; தேம்பல்-வாடுதல்; மொழியினார்-பெண்கள்; அடவி-காடு; காவலன்-இரட்சகன்.

20 மே. பு. 440. பெரியவர்-ஞானத்தால் பெரிய தூயவர்; பேதையர்-அறிவில்லாதவர்; சிந்தை போல-சிந்தை அஞ்ஞானமாகிய இருள் நீங்கி ஒளிபெறுவது போல; காலத்தால்-கால முதிர்ச்சியால்; புரவலர் நாடு காக்கும் அரசர்; புற்புதம்-நீர்க்குமிழி; அரசு-அரசச் செல்வம்; மாதவன் சிறந்த தவத்தையுடையவன்.

## ஸ்ரீதர தேவனின் துதி

21 நிழல்போல நின்றுன்னை வந்தடைந்தார் மாற்றாம்
அழற்போக்கி அந்தமிலா இன்பத்தை ஆக்கி
வழுந்தரா முத்தியின்கண் வைக்கும்நின் பொற்பாத
நிழற்சேரார் மாற்றாம் நெடுவழியைச் சேர்வார்.

22 காமனையும் காலனையும் வென்றுஉலகம் மூன்றினுக்கும்
சேம நெறியருளிச் செந்தாமரைபுல்லிப்
பூமுதிராப் பிண்டியின்கீழ்ப் பொன்னெயிலுள்
மண்ணியநின்
நாமம் நவிற்றாதார் வீட்டுலகம் நண்ணாரே.

## கிரணவேக மகாராசன் துதி

23 அறிவி னால்அறி யாத அறிவன்நீ
பொறியி னால்வரும் போகியும் அல்லன்நீ
மறுஇ லாத குணத்துனை வாழ்த்துமாறு
அறிகி லேன்அடி யேன்அற வேந்தனே !

---

21 மே. பு. 494. நிழல்போல-நிழல் நீங்காது உடன்வருதல் போல; மாற்றாம் அழல்-இல்லறமாகிய வெம்மை; அந்தம் இலா இன்பம்-முடிவில்லாத பேரின்பம்; வழுத்தராமை-நீங்குதலில்லாமை; பொற்பாதம்-அழகிய திருவடி; சேர்வார்–அடைவார்கள்.

22 மே. பு. 495, காமன்-மன்மதன்; காலன்–யமன்; சேமம்–இன்பம் செந்தாமரை-செந்தாமரைமலர்; புல்லுதல்-சேர்தல்; பிண்டி–அசோகமரம்; பொன்னெயில்–சமவசரணம்; நாமம்-திருப்பெயர்; நவிற்றாதார்-துதியாதவர்; நண்ணார்-அடைய மாட்டார்.

23 மே. பு. 630 அறிவு–மதி, ஸ்ருத, அவதி, மனப்பர்யங்கள் ஆகியவற்றிற்கு இலக்காகிய நான்கு ஞானங்கள்; அறிவன்–கேவலஞானத்தையுடையவன்; கேவல ஞானமாவது முக்காலத்தையும் அறியும் பெருஞானம்; பொறி-ஐம்பொறி; போகி – போகத்தையுடையவன்; மறு–களங்கம்; அறவேந்தன்–தருமத்திற்கு அரசாகிய சுவாமி; அடியேன்-தொண்டனாகிய நான்.

24 ஒன்று யாவையும் உண்மையி னால்என
ஒன்ற லாமையும் உண்மையும் ஓதினான்
ஒன்றி டாதன போலும்நின் வாய்மொழி
ஒன்றி டாவினை யோடுஉழல் வார்உளம்.

25 நித்த மாம்பொருள் நின்ற குணத்துளன
நித்த மும்அல நின்ற குணத்துளன
நித்தம் ஒன்றி நிலாதநின் வாய்மொழி
நித்த மும்நினை வார்வினை நீங்குமே;

26 அலகி லாஅறி வின்கண் அடங்கிவந்து
உலகெ லாம்உள் அடங்கிய உன்னைஎன்
மலம்இ லாத மனத்திடை வைத்தபின்
அலகி லாமையது என்கணது ஆயதே.

---

24 மே. பு. 631 யாவையும்-ஜீவாஜீவப் பொருள்களாலும்; உண்மை உண்மைத்தன்மை; ஒன்றலாமை-ஒன்றல்லாத பலவாய் இருக்கும் தன்மை; நின்வாய்மொழி-உன்வாயிலிருந்து பிறந்த பரமாகம மொழிகள்; ஒன்றிடாவினை-ஆத்ம குணத்திற்கு வேறாய்ப் பலவாகிய வினைகள்; உழல்வார்-சுழல்பவர்; உளம்-மனம்.

25 மே. பு. 632 நித்தம்-நித்தியம், என்றும் உளதாவது; நின்ற ஞானம்-கூடி நின்ற குணம்; வாய்மொழி-பரமாகமம்; நித்தமும்-நாள் தோறும்.

26 மே. பு. 633 அலகிலா-அளவில்லாத; உள் அடங்கிய-உனக்குள்ளே அடங்கப்பெற்ற; மலம்-களங்கம்; அலகிலாமையது-முடிவில்லாத உன் வடிவம்.

27 வேரி ஆர்மலர் மீதுசெல் போதுபூ
மாரி யாய்மூ வுலோகம் எடுக்கும்மா
வீரி யாஅடி யேன்வினை தீரநல்
ஆரி யாஅரு ளாய், அற வேந்தனே!

28 மாரி மொக்குளின் மாய்ந்துபிறந்து மாற்று
ஆர ணத்தில்என் ஆழ்துயர் போயது அன்
பார மாயஉன் பாதம் அடைந்தபின்
வாரி வீழ்ந்தவன் மால்கரை சேர்ந்தவாம்.

29 பொங்கு சாய்மரை, பூமழை, மண்டிலம்,
சிங்கம் ஏந்துஅணை, பிண்டி, செழுங்குடை,
அங்க பூவமது ஆம்மொழி, துந்துபி
எங்கள் தீவினை தீர விளங்குமே.

---

27 மே. பு. 634 வேரி-மணம்; செல்போது-செல்லுகின்ற காலத்தில்; பூமாரி-மலர்மழை; வீரியா-அனந்த வீரியத்தை யுடையவனே; சூரியன்-குணங்களால் உயர்ந்தோன்.

28 மே. பு. 635 மாரி-மழை; மொக்குள்-நீர்க்குமிழி; மாய்தல்-இறத்தல்; மாற்று ஆரணத்தில்-சம்சாரமாகிய காட்டில்; ஆரண்யத்தில் என்பது ஆரணத்தில் என எதுகைபற்றித் திரிந்தது; வாரி-கடல்; மால்கரை-பெரிய கரை.

29. மே. பு. 636 பொங்குதல்-மேலெழுதல்: சாய்மரை-சாமரை, வெண்சாமரம்; பூமழை-மலர்மாரி; மண்டிலம்-ஒளிவட்டம்; சிங்கம் ஏந்து அணை-சிங்காசனம்; பிண்டி-அசோகமரம்; குடை-முக்குடை; சந்திரா தித்யம், நித்ய விநோதம், சகல பாசனம் என்பன; அங்க பூவம்-அங்காகமம்; பூர்வாகமம்; துந்துபி-துந்துபி எனும் வாத்தியம்; தீவினை-பாவச்செயல்கள்.

## சக்கராயுத பட்டாரகர் துதி

30 காதி நான்மை கடந்தோய் நீ
கடையில் நான்மை அடைந்தோய் நீ
வேதம் நான்கும் விரித்தோய் நீ
விகல நான்மை இரித்தோய் நீ
கேதம் நான்மை கெடுத்தோய் நீ
கேடுஇல் இன்பக் கடலோய் நின்
பாத கமலம் பணிவாரே
உலகம் பணிய வருவாரே.

31 பதினெண் குற்றம் அரிந்தோய் நீ
பரம நான்மை அடைந்தோய் நீ
இதம்எவ் வுயிர்க்கும் அளிப்போய் நீ
இன்னாப் பிறவி எறிவோய் நீ
கதமும் மதமும் காமனையும்
கடந்து காலன் கடந்தோய்நின்
பதபங் கயங்கள் பணிவாரே
உலகம் பணிய வருவாரே.

---

30 மே. பு. 807 காதிநான்மை-நான்குகாதி வினைகள்; கடையில் நான்மை-அனந்ததரிசனம், அனந்தஞானம், அனந்தசுகம், அனந்த வீரியம்; வேதநான்மை-பிரதம அனுயோகம் முதலான நான்கு அனுயோகங்கள்; விகலநான்மை-மதி, சுருதி, அவதி, மனப்பரியய ஆகிய நான்கு ஞானங்கள்; கேதம்நன்மை-பிறவி துக்கங்கள் நான்கு.

31 மே. பு. 808 அரிந்தோய்-கெடுத்தோன்; பரமநான்மை-அனந்த தரிசனம் முதலான நான்கு; கதம்-வெகுளி; மதம்-செருக்கு; பதபங் கயம்-திருவடித்தாமரை.

32 சிந்திப் பரிய குணத்தோய் நீ
தேவர் ஏத்தும் திறலோய் நீ
பந்தம் பரியும் நெறியோய்நின்
பாத கமலம் பணிவாருக்கு
அந்தம் இல்லா இன்பத்தை
அளித்து முத்தி யகத்திருத்தும்
எந்தை பாதம் பணிவார் இவ்
உலகம் பணிய வருவாரே.

## சஞ்சயந்த பட்டாரகர் துதி

33 கலைஇலா அறிவன் நீ! கலன்இலா அழகு நீ!
மலைவுஇலா மதனும் நீ! மறுஇலா மதனும் நீ!
உலகினுள் ஆயும் நீ! உலகினுள் வாய்ஒரு
நிலைஇலா நிலையை நீ! ஆகிலும் இறைவன் நீ!

34 அமலன் நீ, அறிவன் நீ, அருகன் நீ, அசலன் நீ,
விமலன் நீ, வீரன் நீ, வேரம்இல் ஒருவன் நீ,
தூமிலன் நீ, துறவன் நீ, சுகதன், நீ சிவனும் நீ,
கமலன்நீ, கருணை நீ, கைவலச் செல்வன் நீ!

---

32 மே. பு. 809 சிந்திப்பரிய-நினைத்தற்கு அரிய; திறல்-வீரியம். பரியும்-நீக்கும்; எந்தை-எனதுசுவாமி; பணிய-வணங்கும்படியான; வருவார்-நிலையை அடைவர்.

33 மே. பு. 998 கலைஇலா-கூறுபடாத; கலன்-அணிகலன்; மலைவு-மாறுதல்; ஆயும்-ஆராயப்படும்; நிலைஇலா நிலை-தோற்றம் மறைவு இருத்தலோடு கூடிய நிலைபேற்றுத்தன்மை.

34 மே. பு. 999 அமலன்-மலமில்லாதவன்; அறிவன்-முற்று முணர்ந்தவன்; அருகன்-தகுதி படைத்தவன்; அசலன்-நடுக்கமில்லாதவன்; விமலன்-குற்றமற்றவன்; வேரம்-பகை; ஒருவன்-ஒப்பற்றவன்; தூமிலன்-ஒலிவடிவானவன்; சுகதன்-அனந்த சுகவடிவினன்; சிவன்-மங்களம் செய்பவன்; கமலன்-தாமரைமலர் இருக்கையுடையவன்; கைவலச் செல்வன்-கேவலத்திருவுடையவன்.

35 இறைவனீ, ஈசனீ, எண்குணத் தலைவனீ,
பொறிஇலா அறிவனீ, பூசனைக்கு இறைவனீ,
மறுஇலா ஒருவனீ, மாதவத் தலைவனீ ,
சிறியயான் நின்குணம் செப்புதற்கு அரியனீ!

## சினேந்திரர் துதி

36 காமாதி கடந்ததுவும் கைவலப்பெண்
அடைந்ததுவும் கமலப் போதில்
பூமாரி பொழியஎழுந் தருளியதும்
பொன்னெயில்மண் டலத்து அசோகம்
தேமாரி மலர்பொழிய சீயவணை
அமர்ந்ததுவும் தேவர் கோமான்
தாமாதி அணிந்துபணிந்து எழுந்ததுவும்
தத்துவம்என் தகவோ என்ன.

37 ஒருமொழியே பதினெட்டாய் உலகறிய
இயம்பியதும் ஒளிகொள் மூன்றில்
திருமறுவாய்த் திகழ்கின்ற திருமூர்த்தி
யதனழகும் தேவ நின்பால்

---

35 மே. பு. 1000 இறைவன்-எங்கும் உறைபவன்; ஈசன்-முதல்வன்; பொறி-ஐம்பொறி; பூசனை-பூசித்தல், வணங்குதல்; மறு-களங்கம்; மாதவத் தலைவன்-பெருந்தவத்தினர்க்கெல்லாம் தலைவன்; செப்புதல்-சொல்லுதல்.

36 மே. பு. 1191 காமதி-காமம், வெகுளி, மயக்கம் என்னும் முக்குற்றங்கள்; கடத்தல்-வெற்றிகொள்ளுதல்; கைவலப்பெண்-கேவலகுணம் என்னும் மோட்சத்திரு; பூமாரி-மலர்மழை; பொன்னெயில் மண்டலம்-பொன்னாலாகிய மதில் சூழ்ந்த சமவசரண வட்டம்; அசோகம்-அசோகமரம்; தேம்-நறுமணம்-சீயவணை-சிங்கம் ஏந்து இருக்கை தேவர் கோமான்-தேவர்களுக்கு அரசனாகியஇந்திரன்; தாமதி-தாமம் ஆதி-மலர்மாலை முதலியன; தத்துவம்-உண்மை; தகவு-தகுதி குணம்-

37 மே. பு. 1192 ஒருமொழி-திவ்யத்தொனி ஒன்றே; பதினெட்டாய்-பதினெட்டு மொழிகளாய்; இயம்புதல்-சொல்லுதல்;

மருவினர்க்கும் அல்லவர்க்கும் ஒத்திருந்தும்
அடைந்தவர்க்கு வார்த்தை நல்கும்
பெருமயமோ அதிசயமோ பிரான்நீயே
மூவுலகோர் பிரான்ஆகின்றாய்.

38 விலங்கரசன் வலிவிலக்கி வேர்ப்பொழிந்து
விமலமாய் வெளிதாய் உன்மேல்
இலங்குபொறி ஆயிரத்தெட்டு இருந்துஅழகு ஆர்ந்து
இளநாற்றம் இயல்பாய் இன்சொல்
புலந்தனக்கு அமுதுஆகி வச்சிரப்பூண்
செறிந்துஆணி அறைந்த யாப்பாய்
விலங்குவடிவுடையதிரு மூர்த்திஇயல்பு
அதிசயன்எம் இறைவ நீயே.

39 சாயைபசி இமைப்புஒழிந்து சதுமுகமாய்
மயிர்உகிர்தம் அளவிற்கு ஏற்றுக்
காயமிசை உலவிநல கலைக்கெல்லாம்
இறைவனுமாய்க் கருமக் கேட்டின்

---

திருமறு-திருமகள் முதலிய இலக்கணங்கள்; திருமூர்த்தியதனழகு-அழகிய திருவுடம்பின் பேரழகு; மருவினர்-அடைந்தவர்; அல்லவர்-வந்து சேராதவர்; ஒத்திருத்தல்-விருப்பு வெறுப்பின்றியிருத்தல்; வார்த்தை-அறிவுரை; பெருமயம்-பெரிதாப் இயற்கைத் தன்மை; அதிசயம்-வியப்பு; பிரான்-எப்பொருட்கும் இறைவன்.

38 மே. பு. 1193 விலங்கரசன்-மிருகசராசனாகிய சிங்கம்; வலிவிலக்குதல்-வலியில் மேம்பட்டுநிற்றல்; வேர்ப்பொழிதல்-ஆழப்பதிதல் இயங்குதல்-விளங்குதல்; பொறி-திருமறு; ஆயிரத்தெட்டுஇலட்சணம்; இளநாற்றம்-மேலானமணம்; புலன்-கட்புலன்; யாப்பு-சேர்க்கை; அதிசயன்-வியத்தகு செயல் புரிவோன்.

39 மே. பு. 1194 சாயைபசி-பசியின் சுவடு; இமைப்பு-கண் இமைத்தல்; சதுமுகம்-நான்கு முகம்; மயிர்-தலைமுடி; உகிர்-நகம்; காயமிசை-

ஓசனைநா ஞூறகத்தின் உயிர்க்கழிவு
பசிகள்உப சருக்கம் நீங்கத்
தேசினொடு திளைத்திருந்த திருமூர்த்தி
அதிசயன்எம் செல்வன் நீயே

40 திருமொழியின் வியத்தகவும் அனைத்துயிரின்
மைத்திரியும் திக்கா காயம்
நிருமலமாய் விளங்குதல்எவ் விருதுவும்வந்து
உடன்நிகழ்தல் நிலத்துப் பைங்கூழ்ப்
பெருமையொடும் மங்கலங்கள் அறவாழி
பூமாரி நறுங்காற்று அம்பொன்
மரைமலரின் நிரைமுதல்வா னவரில்வரும்
அதிசயன்எம் மன்னன் நீயே.

41 அழுந்துவினைப் பகைப்புறங்கண்டு அனைத்துலகும்
அலோகமுந்தன் அகத்தின் நுங்க
எழுந்தறிவின் முகத்தால்எப் பொருளும்உளது
அகத்தடக்கி இருந்தோய் வந்து

---

ஆகாயத்தின்மேல்; கேடு-அழிவு; தேசு-ஒளி; திளைத்திருத்தல்-கூடியிருத்தல்.

40 மே. பு. 1195 திருமொழி-அருள்வாக்கு; வியத்தகவு-பெருமை: மைத்திரி-அன்பு பாராட்டுகை; திக்கு-திசை; ஆகாயம்-வானம்; இருது-கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்னும் அறுவகைப் பருவம்; பைங்கூழ்-பயிர் வகைகள்; அட்டமங்கலம்-அவையாவன கிண்டி, தாளவட்டம், கலசம். கொடி, கும்பா, குடை, கண்ணாடி, சாமரம்; அறவாழி-தரும சக்கரம்; பூமாரி-மலர் மழை; நறுங்காற்று-நறுமணம் பரப்பும் தென்றற்காற்று; மரைமலர்-தாமரைமலர்; நிரை-வரிசை; வானவரின் வரும் அதிசயன்-தேவர்களாலாகிய தெய்வீகாதி- அதிசயமுடையவன்.

41 மே. பு. 1196 வினைப்பகை-காதி கர்மங்களாகிய பகை; புறங்காணுதல்-தோற்றோடச் செய்தல்; அனைத்து உலகு-உலகங்கள்

செழுங்குவடு செறிந்திருந்து முழங்கும்எழில்
முகில்போல விராகம் இன்றி
எழுந்தருளி வந்திருந்துஎப் பொருளும்அரு
ளிய எங்கள் இறைவன் நீயே.

42 செங்கமலந்து உலவும்உன்றன் திருந்தடியை
நினைந்திடவே சித்தி என்னும்
அங்கனைவந்து அவரையடைந் திட அதன்மேல்
கொடைஇன்றாய் அருளும் நீங்கி
வெங்கதங்கொண்டு உனைஅடையா தொழிந்தவர்கள்
நெடுந்துயரின் வீழக் காணா
அங்கவர்மேல் அருள்புரிவு முனிவும்அகன்று
இருந்தனை எம்இறைவன் நீயே.

43 பொதுவகையால் பொருள்எல்லாம் ஒன்றேஎன்று
அருள்செய்துஅப் பொதுவ லாத
விதிவகையால் பொருள்எல்லாம் வேறேஎன்று
அவ்விரண்டும் ஒன்றே என்றும்

---

எல்லாம்; அலோகம்-உலகம் அல்லாதது; நுங்குதல்-விழுங்குதல் அறிவின் முகத்தால்-கேவல ஞானம் என்னும் குணத்தால் செழுங்குவடு-செழுமையான மலை; முகில்-மேகம்; விராகம்-வெறுப்பு; இருந்து-சமவசரணத்தில் வீற்றிருந்து; இறைவன்-தலைவன்.

42 மே.பு. 1197 திருந்தடி -செவ்விதாகிய திருவடிகள்; சித்திஎன்னும் அங்கனை-மோட்சம் என்னும் இலக்குமி; வெங்கதம்- மிகுந்த குரோதங்கள்; ஒழிந்தவர்கள்-நீங்கிப் போனவர்கள்; காணா-செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம்; கண்டு என்பது பொருள்; முனிவு-சினம்.

43 மே. பு. 1198 பொதுவகையால் ஒன்றே-தத்தம் பொதுக் குணத்தினால் ஒன்றேயாகும்; பொது அலாதவிதி-சாமானிய குணமில்லாத சிறப்பு; பொது-பொதுவான சாமானியத் தன்மை; விரிவு-தனித் தன்மையான சிறப்பு நிலை; மதி-அறிவு.

பொதுவிரிவு பொருள்நிகழ்வால் வெவ்வேறாய்
ஒன்றுமாம் என்றால் உன்சொல்
மதிபெரிதும் இலாதார்க்கு மாறாகித்
தோன்றாதோ வானோர் கோவே.

44 ஆதியாய் ஆதியிலாய் அந்தமாய்
அந்தமிலாய் அடையாது எய்துநீ
போதியாய் போதியிலாய் புறத்தாய்எப்
பொருளினுக்கும் அகத்தாய் மூன்று
சோதியாய் சோதியிலாய் சுருங்காதாய்
பெருகாதாய் தோன்றா மாயா
நீதியாய் நீதியிலாய் நினைப்பரியாய்
வினைப்பகைஎம் இறைவன் நீயே.

45 காமருதுந் துமிகறங்கக் கடிமலர்மா
மழைபொழியக் கவரி பொங்கத்
தேமருபூம் பிண்டியின்கீழ் மண்டலம்போய்த்
திசைசூலவத் திங்கள் வட்டம்
தாம்ஒருமூன்று அனையமணி முக்குடைக்கீழ்
மிக்கவினை உடையச் செல்லும்
சேமமுடை நெறிஅருளிச் சீயவணை
அமர்ந்தனைஎம் செல்வன் நீயே.

---

44 மே. பு. 1199 ஆதி-முதல்; அந்தம்-முடிவு; அடையாது-இந்திரியங்களுக்கு இலக்காயில்லாமல்; போதி-முற்றறிவு; புறம்-வெளி, அகம்-உள்; மூன்றுசோதி-ஆத்ம குணமான சுத்தஞான சோதி; தர்சன சோதி, சாரித்திர சோதி என மூன்று; தோன்றா மாயா நீதி-பிறப்பு இறப்பு இல்லாத தன்மை; வினைப்பகை-வினைக்குப் பகையாக அவற்றை வென்றவன்.

45 மே. பு. 1200 காமருதல்-விரும்புதல்; துந்துபி-தேவ வாத்தியங்கள்; கறங்குதல்-ஒலித்தல்: கடிமலர்-மணமுள்ள பூ; கவரி-சாமரை தேமருதல்-நறுமணம் சேர்தல்; பிண்டி-அசோகமரம்; மண்டலம்-ஒளி வட்டம்; குலவுதல்-பொருந்துதல், பரத்தல்; திங்கள் வட்டம்-சந்திர மண்டலம்; மணி-அழகு; உடைதல்-கெடுதல்; சேமமுடைநெறி-பேரின்பம்தரும் முத்தி மார்க்கம்; சீயவணை-சிங்காசனம்.

## சினேந்திரர் துதி

46 அருகன் நீநல்ல பூசைக்கு அருகனாய்ப்
பெரியை யாயினை பெண்நசை இன்மையால்
ஒருவன் ஆயினை ஒப்பவர் இன்மையால்
துருவ மாயினை தோற்றமது இன்மையால்

47 எரியும் போல்வைநீ என்வினைக் காளிதம்
உருகச் சுட்டுயிர் தூப்பத்தைச் செய்தலால்
தருவும் நிழலும் போல்வைநீ சார்ந்தவர்
பெரிய துன்பப் பிறப்பினை நீத்தலால்.

48 அறிவன் நீஅறி யாப்பொருள் இன்மையால்
முறையும் நீயிலை முற்ற வுணர்ச்சியால்
கறுவு நீயிலை காய்வதொன்று இனிமையால்
இறைவன் நீஉலகு யாவும் இறைஞ்சலால்.

49 முழுதும் நீமுழு துக்கும் இறைவன்நீ
முழுது தன்வடி வின்முழு தாகிநீ
முழுதுங் கண்டுணர்ந் தாய்இன்பம் முற்றும்நீ
முழுதும் விரித்து நான்முகன் ஆகிநீ.

---

46 மே. பு. 1301 அருகன்-அருகன் என்னும் பெயர் பூண்டவன்; அருகனாய்-உரியவனாய்; நசை-விருப்பம்; பெரியையாயினை-பெண்ணாசையற்றவனாயினாய்; ஒருவன்-ஒப்பற்றவன்; துருவம்-அசையாநிலை.

47 மே. பு. 1302 எரி-நெருப்பு; காளிதம்-களிம்பு; தூப்பத்தைச் செய்தல்-தூய்மை செய்தல்; தருவும் நிழலும்-மரமும் நிழலும்.

48 மே. பு. 1303 அறிவன்-முற்றும் உணர்ந்தவன்; முறை-உலகியல் முறை ஒழுங்குகள்; கறுவு-கோபத்தன்மை; இறைஞ்சல்-வணங்குதல்.

49 மே. பு. 1304 வடிவு-திருவுருவம்; நான்முகன்-நான்கு முகங்களை யுடையவன்.

50 உண்மை தான்இன்மை உண்மை இன்மையாம்
திண்ணிய தன்னோடு அவாச்சியம் செப்பிடில்
பண்ணு பங்கங்கள் ஏழ்பொருட்டு இல்லையேல்
உண்மை தான்பொருட்கு இல்லைஎன்று ஓதினாய்.

51 சுற்றம் நீஎவர்க் கும்துன்பம் நீக்கலால்
பற்று நீஇலை பற்றவை தீர்த்தலால்
முற்றும் நீஉணர்ந் தாய்மூ வுலகத்தின்
பெற்றி தன்னைநீ யாவர்க்கும் பேசலால்.

52 அருவன் நீஅகதிக்கண் இருத்தலால்
உருவன் நீஉடம் போடுசெல் நாள்எலாம்
மருவி வானவர் வாழ்ந்தியிவ் வாற்றினால்
பொருவி லாப்புண்ணி யத்தொடும் போயினார்.

## மேருமந்த்ரர் திருவடிப் புகழ்ச்சி

53 வெருவுறு துயரொடு விழஎழு துயரும்
கருவுறு துயரொடு கடைவரு துயரும்
மருவிய உயிர்வினை மறுஅற அருளும்
பொருவரு திருவடி புகழ்தர அடைதும்.

---

50 மே. பு 1305 அவாச்சியம்-சொல்ல முடியாதது; பங்கங்கள் ஏழ்-ஸப்தபங்கி நியாயம்.

51 மே. பு. 1306 சுற்றம்-உறவு; தீர்த்தல்-நீக்குதல்; மூவுலகம்; விண்ணுலகு, மண்ணுலகு, பாதாளவுலகு; பெற்றி-தன்மை.

52 மே. பு. 1307 அகதி-மேலான மோட்சகதி; அருவன்-உருவமற்றவன்; உருவன்-வடிவுடையவன்; மருவுதல்-அடைதல்; பொரு-ஒப்பு.

53 மே. பு. 1392 வெருவு—அச்சம்; விழஎழுதுயர்-எழும்பித் தலைகீழாக விழுதலால் வரும் துன்பம், நரககதி துன்பம்; கடைவரு துயரம்-தேவர்களுக்குக் கடைநாளில்வரும் துயரம்; கரு-கருப்பம்; கடை-அந்தகாலம், மரணகாலம்;மருவுதல்-பொருந்துதல்; சேர்தல். மறு—களங்கம், குற்றம்; அறுதல்-நீங்குதல்; பொருவரு-ஒப்பில்லாத; புகழ்தர-புகழ் உண்டாக; அடைதும்-அடைகின்றோம்.

54 பருதியின் ஒளிவெல பகைபசி பிணிகெட
வருவன மலர்மிசை மதனனை நலிவன
உயிர்உறு தொடர்வுஅற எறிவன உலகினில்
அரியன பெரியநும் அடியிணை அடைதும்.

55 முறைபொறி மறைகெட முழுதும்ஓர் கணமதில்
அறியும்நல் லறிவுடை இறைவநும் அடியிணை
உறுதவர் மனமிசை உறைவன உயிர்உறு
பிறவியை அறஎறி பெருமைய சரணம்.

56 குலிகமோடு இகலுவ குவிமுலை புணருநர்
தலைமையை நகுவன தவநெறி வருவன
உலகினை ஒருநொடி அகவையின் அளகுவ
மலைவுஇல் நிலையநும் மலரடி அடைதும்.

57 உயர்வுஅற உயரிய உலகினின் உயிர்களின்
அயர்வுஅற அறவமுது அருளுவ அமரர்கள்
மயர்வுஅற மணிமுடி அணிவன பணிவார்
துயர்வுஅற எறியும்நும் துணையடி தொழுதும்.

---

54 மே. பு. 1393 பருதி-சூரியன்; கெடுதல்-நீங்குதல்; மலர்-செந்தாமரை மலர்; மதனன்-மன்மதன்; தொடர்வு-பந்தம், கட்டு; எறிதல்-தாக்குதல்.

55 மே. பு. 1394 பொறி-இந்திரியங்கள்; மறை-மறைப்பு; கணம்-பொழுது; அடியிணை-இரண்டு திருப்பாதங்கள்; தவர்-தவமுடையவர்; பிறவி-பிறப்பு; சரணம்-புகலிடம்.

56 மே. பு. 1395 குலிகம்-சாதிலிங்கக் குழம்பு; இகலுதல்-பொருந்துதல், பூசப் பெறுதல்; நகுதல்-சிரித்தல்; நொடி-கணப்பொழுது; அளவே-அளவிடுவன; மலைவு-கேடு.

57 மே. பு. 1396 உயர்வு அற உயரிய-தமக்கு மேலான உவமையில்லாத மேம்பாடு உடையன; அயர்வு-வருத்தம்; அறவமுது-தருமமாகிய அமுதம்; அமரர்-தேவர்; மயர்வு-மயக்கம்; மணிமுடி-அழகிய கிரீடம்; பணிவார்-வணங்குவார்; துயர்வு-துயரம், துக்கம்; துணையடி-இரண்டு திருவடிகள்.

## அறநெறி போற்றுக

58 அறமலது உறுதிசெய் வார்கள் தாம்இலை;
மறமலாது இடர்செய வருவ தும்இலை;
நெறியிவை இரண்டையும் நினைத்து, நித்தமும்
குறுகுமின் அறநெறி, குற்றம் நீங்கவே.

59 ஆக்குவது ஏதெனில் அறத்தை ஆக்குக!
போக்குவது ஏதெனில் வெகுளி போக்குக!
நோக்குவது ஏதெனில் ஞானம் நோக்குக!
காக்குவது ஏதெனில் விரதம் காக்கவே!

---

58 மே. பு. 1405 உறுதி செய்பவர்கள்-நன்மை செய்பவர்கள்; மறம்-பாவம்; இடர்-துன்பம்; நெறி-வழி; குறுகுமின்-அடையுங்கள்.

59 மே. பு. 1406 ஆக்குவது-செய்யத்தக்கது; வெகுளி-கோபம்; நோக்குவது-பார்க்க வேண்டியது; ஞானம்-பேரறிவு.

# அருகன் துதிமாலை

## 9 உரை மேற்கோள்

வெண்பா

1 மண்டித் தடுமாறும் வாழ்வுஇழந்தேன்; மாதுயரப்
பண்டைப் பழவினைநோய் பற்றறுத்தேன்;-பிண்டித்
திருமாலை, முக்குடைக்கீழ்த் தேவாதி தேவர்
பெருமானை, யான்அடைந்த பின்.

---

## 9 உரை மேற்கோள்

குறிப்புரை

தொல்காப்பியம், சிலப்பதிகாரம், தண்டியலங்காரம், யாப்பருங்கல விருத்தி, யாப்பருங்கலக் காரிகை, இலக்கண விளக்கம் என்னும் நூல்களில் மேற்கோளாக எடுத்துக்காட்டப்பெற்ற அருகக் கடவுள் துதிப்பாடல்கள் இப்பகுதியில் தரப்பட்டுள்ளன. இவற்றுள் இறுதியில் அமைந்துள்ள இரண்டு பாடல்களும் முறையே தமிழ் நாவலர் சரிதை, திருவாலவாயுடையார் திருவிளையாடற் குறிப்புரை ஆகியவற்றி னின்றும் எடுக்கப்பட்டனவாம். இப்பகுதி முழுமையும் பேராசிரியர் மு. இராகவையங்கார் தொகுத்து அமைத்த 'பெருந்தொகை' நூலிலிருந்து எடுத்து எழுதப்பெற்றனவாகும். இவை பெருந்தொகையில் 130 முதல் 183 வரையுள்ள பாடல்களாகும்.

1 மண்டுதல்-நெருங்குதல்; நோய்-துன்பம்; பற்றறுத்தல்-முற்றும் அழிந்துபோதல்; பிண்டி-அசோகமரம்.

## வெண்டாழிசை வகை

2 போது ஆர் நறும்பிண்டிப் பொன் ஆர் மணியணையான்
தாது ஆர் மலரடியைத் தணவாது வணங்குவார்
தீது ஆர் வினை கெடுப்பார் சிறந்து.

## வெண்கலிப்பா வகை

3 நாகுஇளம்பூம் பிண்டிக்கீழ் நான்முகனாய், வான்இறைஞ்ச
மாகதம்சேர் வாய்மொழியான்—மாதவர்க்கும் அல்லார்க்கும்
தீதுஅகல எடுத்துரைத்தான்—சேவடி சென்று அடைந்
மாதுயரம் தீர்தல் எளிது. [தார்க்கு

## கலிவெண்பா வகை

4 பண்கொண்ட வரிவண்டும் பொறிக்குயிலும் பயில்வுஆனா
விண்கொண்ட அசோகின்கீழ் விழுமியோர் பெருமானைக்
கண்ணாலும் மனத்தாலும் மொழியாலும் பயில்வார்கள்
விண்ஆளும் வேந்தர்ஆ வார்.

---

2 போது-பூ; தாது-பூந்தாது; தணவாது-நீங்காமல், விட்டுப் பிரியாமல்; ஆர்தல்-நிறைதல்.

3 நாகு-இளமை; வான்-வானுலகத்தவர்; மாகதம்-அர்த்தமாகதி மொழி; மகாவீரர் காலத்து வழங்கியதும் சைனாகமங்கள் எழுதப்பட்டதும் இம்மொழியே என்பர். இம்மொழியை, 'வேறு மொழிப் பொதுமையொரு மொழி' என்பர் திருக்கலம்பகமுடையார் (109). தீது-தீமை, தீவினை; சேவடி-செந்நிறம் படைத்த திருவடி; மாதுயரம்-மிக்க துன்பம்.

4 பண்-இசை; பொறி-புள்ளி; பயில்வு-படிதல், நெருங்குதல்; ஆனா-நீங்காத, கண், மனம், மொழி-இவை முறையே உடல், உள்ளம், சொல் என்பவற்றைக் குறிப்பன.

5 அணிநிழல் அசோகுஅமர்ந்து அருள்நெறி நடாத்திய
மணிதிகழ் அவிர்ஒளி வரதனைப்
பணிபவர் பவம்நனி பரிசு அறுப்பவரே.

6 போது சாந்தம் பொற்ப ஏந்தி
ஆதி நாதற் சேர்வோர்
சோதி வானம் துன்னுவாரே.

7 சீயம் சுமந்த மாசுஅறு மணியணை
மேய உரவோன் சேவடி
வாயின் வாழ்த்த, வானுலகு எளிதே.

8 நவைக்கணம் வீய நன்னூல் ஆய்த்து
சேட்டுஅலர் விராய மோட்டுஆர் பிண்டி
நன்நிழல் மேயோன் சேவடி
துன்னினர் துன்னலர்—துகட்டிரும் பிறப்பே.

---

5 அருள்நெறி-திருவறம்; மணி-மாணிக்கம், செம்மணி; அவிர்தல்-விளங்குதல்; வரதன்-வரம் அருள்பவன்; பவம்-பிறப்பு.

6 போது-மலர்; சாந்தம்-சந்தனம்; ஆதிநாதன்-இடபதேவர்; துன்னுவார்-அடைவர்.

7 சீயம்-சிங்கம்; உரவோன் அருகன்.

8 இப்பாடலை நான்காரைச் சக்கரத்திற்கு மேற்கோளாக யாப்பருங்கலவிருத்தி காட்டுகிறது; நவை-குற்றம், தீங்கு; கணம்-திறள், கூட்டம்; வீதல்—அழிதல்; நன்னூல்-ஆதிநாதர் அருளிய பாமாகமம்; சேடு-அழகு: விராவுதல்—கலத்தல்; மோடு-உயிர்ச்சி; துன்னலர்-சேரார்; துகள்-குற்றம், இழிவு; இரும்பிறப்பு-பெரும்பிறப்பு. மிகுதியான பிறப்பு.

9 உலகுஉடன் விளக்கும் ஒளிகிளர் அவிர்மதி;
மதிநலன் அழிக்கும் வளம்கெழு முக்குடை;
முக்குடை நீழல் பொற்புடை ஆசனம்;
ஆசனத்து இருந்த திருந்துஒளி அறிவன்
ஆசனத்து இருந்த திருந்துஒளி அறுவனை
அறிவுசேர் உள்ளமொடு அருந்தவம் புரிந்து
துன்னிய மாந்தர் என்ப
பன்அருஞ் சிறப்பின் விண்மிசை உலகே-

சித்திரக்கா

10 ஒருதிரள் பிண்டிப் பொன்னெயில் மூன்றின்
ஈர்அறம் பயந்த நான்முக அண்ணல்,
மூவகை உலகிற்கும் ஒருபெருங் கடவுள்,

---

9 முதல் நான்கு அடிகளில் வரும் மதி, முக்குடை, ஆசனம், அறிவு என்பன் அடுத்து வரும் அடிக்கு (2, 3, 4, 5) முதலாதலும் இறுதிச் சொல்லான உலகே என்பது தொடக்கச் சொல்லாகிய 'உலகு' என்பதுடன் இயைந்து வருதலும் காணலாம். இவ்வாறு அடிகளிடையே அந்தாதியமைப்பும் பாடலின். முதல் இறுதிச் சொற்கள் ஒத்து மண்டலித்தலும் காணப்படுகின்றன. எனவே, இப்பாடலை யாப்பருங்கல விருத்தியுரைகாரர் மண்டல மயக்கந்தாதி என்பதற்கு மேற்கோள் காட்டியுள்ளார். கிளர்தல்-எழுதல், வீசுதல்; மதி-முழு மதி, பூரணச் சந்திரன்; முக்குடை-இவை சந்திராதித்தம், நித்தய வினோதம், சகல பாசனம் என்று பெயர்பெறும். பொற்பு-அழகு; பன்னுதல்-சொல்லுதல்; விண்மிசை உலகு-தேவர் உலகு.

10 'சித்திரக்கா' என்பது குறித்து யாப்பருங்கல விருத்தியுடையார் தரும் விளக்கம் வருமாறு: ''சித்திரக்காவாவது நான்கு கூடினவெல்லாம் பத்தாகவும் மூன்று கூடினவெல்லாம் பதினைந்தாகவும் பிற வாற்றானும் வழுவாது பாடுவது; இப்பாட்டு இணைந்து நான்கு கூடினவெல்லாம் பத்தாகிய சித்திரக்கா. இதனைச் செவ்வே நான்கு வரியும் எழுதிப் பின்னை ஈறு முதலாக எழுக.'' எயில்-மதில்; ஈரறம்-யதிதர்மம், சிராவகதர்மம்; மூவகை உலகம்-சுவர்க்கம், மத்தியம், பாதாளம்;

நால்வகை யோனியுள் இருவினை கடிந்து,
மூந்நெறி பயந்த செந்நெறி யொருவன்
நால்வகை அளவையும் இருவகைப் பண்பும்
ஒன்ற உரைத்த முக்குடைச் செல்வன்
ஈர் அடி பரவினர் என்ப
பேரா நன்னெறி பெறுகிற் போரே.

எழுகூற்றிருக்கை

11 ஒருபொருட்கு இருதுணிபு உரைத்தனை; ஒருகால்,
இருபிறப் பாளர்க்கு மூவமிழ்து ஆக்கி,
ஈர் அறம் பயந்த ஓர் அருள் ஆழியை;
இருமலர் நெடுங்கண் அரிவையர் நம்மொடு
மூவகை உலகின் நால்வகைத் தேவரும்
மும்மையின் இறைஞ்சும் ஈரடி ஒருவனை;

---

நால்வகையோனி - நான்கு வகையான பிறப்பு; தேவர், மக்கள், நரகர், விலங்கு. இருவினை - நல்வினை, தீவினை; கடிதல் - போக்குதல்; செந்நெறி - நல்வழி; பரவுதல் - துதித்தல், வணங்குதல்; பேரா நன்னெறி - நிலைதிரியாத வீட்டுநெறி, மோட்ச மார்க்கம்.

11 எழுகூற்றிருக்கை: 'ஏழறையாக்கி முறையானே குறுமக்கள் முன்னின்று புக்கும் பேர்ந்தும் விளையாடும் பெற்றியான் வழுவாமை ஒன்று முதலாக ஏழ் இறுதியாக முறையானே பாடுவது' எனபர் யாப்பருங்கல விருத்தியுரைகாரர் முதலியோர். இருதுணிவு - ஒரு பொருளுக்கு ஒரே சமயம் உண்மையும் இன்மையும் கூறும் முடிபு; இதனை அநேகாந்தவாதம் என்ப. இருபிறப்பாளர் - பார்ப்பார் முதலான முதல் மூன்று சாதியுள்பட்டவர்; மூவமிழ்து - நற்காட்சி நன்ஞான நல்லொழுக்கங்கள்; ஈர் அறம் - இரண்டு தர்மம்: யதிதர்மம், சிராவக தர்மம்; அருளாழி - தருமசக்கரம்: மூவகையுலகு - நரகம், சுவக்கம், பூமி; நால்வகைத் தேவர் - பவணர், வியந்தவர், சோதிடர், கற்பவாசிகள்; மும்மையின் இறைஞ்சும் - மனம் வாக்குக் காயங்களால் வணங்கும்; ஒருவன் - ஒப்பற்றவன், முதல்வன்;

இருவினை பிரித்து, மூவெயில் முருக்கி
நாற்கதி தவிர்த்த ஐங்கதித் தலைவ!
நான்மறை யாள! மும்மதிற் கிழவ!
இருகுணம் ஒருமையின் தெரிவுறக் கிளந்த
இருசுடர் மருட்டும் முக்குடைச் செல்வ!
நால்வகை வருணமும் ஐவகைக் குலனும்
மாறுஅறி மாந்தர்க்கு அறிவுற வகுத்தனை!
ஐந்நிற நறுமலர் முன்னுற ஏந்தி,
நாற்பெரும் படையொடு மும்முறை வலங்கொண்டு,
இருகையும் கூப்பி, ஒருமையின் வணங்கி,
அரசர் நெருக்குறூஉம் முரசுமுழங்கு முற்றத்து
இருநிதிப் பிறங்கலோடு இமையவர் சொரிதலின்,
முருகுஅயர் வுயிர்க்கும் மும்மலர் மாரியை!
நால்வகை அனந்தமும் நயந்தனை! தேவரின்
ஐவகை விழவும் மைஅற எய்தினை!

---

இருவினை காதி அகாதி கர்மங்கள்; மூவெயில்-காமம், வெகுளி: மயக்கம்; 'மூன்று கடிமதிலும் கட்டழித்த காவலன்' (சீவக. 1245) என்கிறார் திருத்தக்க தேவர். நாற்கதி-நால்வகையான பிறப்பு, தேவர், மக்கள், நரகர் விலங்கு கதிகள்; தவிர்த்தல்-போக்குதல்; நான்மறை-பிரதமானுயோகம், கரணானுயோகம், சரணானு யோகம், திரவியானுயோகம் என்பன. 'வேதம் நான்கும் விரித்தோய் நீ' என்பது மேருமந்தர புராணம் (807). மும்மதில்-உதயதரம், பிரீதி தரம், கல்யாணதரம் என்பன; இருகுணம்-உண்மையும் இன்மையும்; இருசுடர்-சூரிய சந்திரர்; மருட்டுதல்-மயங்கச் செய்தல்; மாறு-ஒப்பு; ஐந்நிறம்-கருமை. செம்மை, வெண்மை, பசுமை, பொன்மை; நாற் பெரும்படை-தேர், யானை, குதிரை. காலாள்; மும்முறை வலங் கொள்ளுதல்-மூன்றுமுறை வலமுறையாகச் சுற்றி வந்து வணங்குதல் மும்முறை வலஞ்செயல் மரபு (சிலப். 11:105). கூப்புதல்-குவித்தல்; ஒருமை-கருவி கரணங்கள் ஒன்றுபட்ட நிலை; இருநிதி-பெருஞ்செல்வம் பிறங்கல்-மலை; இமையவர்-தேவர்; முருகு-மணம்; மாரி-மழை; நால் வகை அனந்தம்-அனந்த சதுஷ்டயம் (சீவக. 2846). ஐவகைவிழவ-பஞ்சகல்யாணம்; ஸ்வர்க்காவதரணம், மந்த்ராபிஷேம், மஹாப்ரஸ் தானம், கேவலோத்பத்தி, பரிநிர்வாணம் (திருநூற்றந்தாதி-4);

ஆறுபுரி நிலையும் தேறினர்க்கு இயம்பினை!
எழுநயம் விரித்த திருமறு மார்பினை!
அறுபொருள் அறைந்தனை! ஐம்பதம் அருளினை!
நான்குநின் முகமே; மூன்றுநின் கண்ணே;
இரண்டுநின் கவரி; ஒன்றுநின் அசோகே!
ஒருதன்மையை! இருதிறத்தினை!
மூக்குணத்தினை! நால்வகையினை!
ஐம்பதத்தினை! அறுபிறவியை!
ஏழ் அகற்றிய மாதவத்தினை!
அரிமருவிய மணியணையினை!
வளர்கதிர்ஒளி மண்டலத்தினை!
அதனால்,
மாகெழு நிழல் கேவலம் தோற்றிய
ஆதியங் குரிசில்! நிற் பரவுதும்—
நீதுஅறு சிவகதி சேர்கயாம் எனவே.

கூடசதுர்த்தம்

12 கருமால் வினைகள் கையேறிச் செடிசெய்து காறடப்போய்
அருமா நிரயத்து அழுந்துதற்கு அஞ்சி, அம்சோதிவளர்

---

எழுநயம்-ஸப்தபங்கி நியாயம்; அறுபொருள்-சீவன், புற்கலம், தர்மம், அதர்மம், ஆகாசம், காலம்; ஐம்பதம்-பஞ்சமந்திரம்-ஆவன அ, ஸி, ஆ, உ, ஸா என்பன. அறுபிறவியை-அற்றபிறவியினையுடையாய்; அரி-சிங்கம்; கதிரொளி மண்டலத்தினை-பிரபாவலயம் மூன்றினையும் உடையாய்; சிவகதி-பரிநிர்வாணம்.

12 கூடசதுர்த்தம்-நான்காம் அடி எழுத்துக்கள் ஏனைய மூன்றடியினுள்ளும் மறைந்து நிற்குமாறு பாடப்படும் சித்திர கவியாம். கூடசதுக்கம் எனவும் வழங்குவர். வினைகள் புதர்போல் மண்டிக் கால்தடுக்கப்போய் நரகத்தில் வீழ்வதற்கஞ்சி என் சிந்தனை அடிக்கு ஆளாயொழிந்தது என இயைத்துப் பொருள் காண்க. மால்-பெரிய; கையேறுதல்-மேலெழுதல், வெற்றிகொள்ளல்; செடி

பெருமான் மதிதெறு முக்குடை நீழல் பிணிஒழிக்கும்
திருமால் திருந்து அடிக்கு ஆளாய் ஒழிந்தது என்
சிந்தனையே.

13 செருவினை வைவேல் திகழ்ஒளி வேந்தர் திருமுடிமேல்
உருவினை ஒண்போது உறும் நினபாதம் குறைவுஅறியாக்
கருவிளை ஆட்டும் கவினுடை வாட்கண் கனிபுரைவாய்த்
திருவிளை யாடும் கனவரை ஆகச் சினவரனே!

14 முரன்று சென்று வண்டினம்
நிரந்த பிண்டி நீழலுள்
பரந்த சோதி நாதன்எம்
அரந்தை தீர்க்கும் அண்ணலே.

15 கயற் கருங்கண் அந்நலார்
முயக்கம் நீங்கி மொய்ம்மலர்

---

செய்தல்-புதர்மண்டுதல்; காறடப்போய்-கால்தடப்போய்-கால்தடுக்கச் சென்று; நிரயம்-நரகம்; மதிதெறுதல்-மதியின் ஒளியை வருத்துதல், முழுமதி ஒளியினும் விஞ்சி நிற்றல்; பிணி-பிறவிநோய்; ஆளாய்-அடிமையாக.

13 நினபாதம் திருமுடி மேலும் போதினும்; உறும் என்பது முடிவு. செரு-போர்; வை-கூர்மை; ஒண்-ஒளி; போது-தாமரைமலர்; கருவிளை-கருவிளைப்பூ; ஆட்டுதல்-அசைத்தல்; கனி-கொவ்வைக்கனி; புரை-ஒப்பு; திரு-சித்தியாகியதிரு; கனவரை ஆகம்-பொன்மலை போன்ற உடம்பு. கருவிளைப்பூவை அலைக்கும் கண்ணையும் வாயையுமுடைய சித்தியாகிய திரு என்க. 'அறிவன் காதற் பெருங்கிழத்தி.... பிறழாமுத்திநாயகி' என்பது திருக்கலம்பகம் (101).

14 முரல்தல்-ஒலித்தல்; வட்டினம்-வண்டினம்; அரந்தை-பிறவித் துன்பம்.

15 கயல்-கெண்டைமீன்; நலார்-நல்லார், பெண்கள்; முயக்கம்-கூட்டம், புணர்ச்சி; மொய்த்தல்-நெருங்குதல், மிகுதல்; மலர்ப்புயல்-

புயல் புரிந்த புண்ணியர்க்கு
இயற்றுமின்கள் ஈரமே.

16 பொங்கு சாமரை தாம்விசச்
சிங்கபீடம் அமர்ந்த எம்
கொங்கு சேர்குளிர் பூம்பிண்டிச்
செங்கணான் அடி சேர்மினே.

17 போது விண்ட புண்ட ரீக
மாத ரோடு வைக வேண்டின்,
ஆதி நாதர் ஆய்ந்த நூலின்
நீதி ஓதி நின்மின் நீடு.

18 வினையைத் தான்மிடைந்து ஓட்டிநீர்
அனகத் தான் அருள் காண்குறின்,
கனகத் தாமரைப் பூமிசைச்
சினனைச் சிந்திமின் செவ்வனே.

---

பூமழை; இதனைப் பஞ்சாச்சரியங்களுள் ஒன்றாகிய புஷ்பவர்ஷம் என்பர். புரிதல்-விரும்புதல்; ஈரம்-அன்பு.

16 பொங்குதல்-மேலெழுதல்; சாமரை-வெண்சாமரம்; கொங்கு-தேன், மகரந்தம்.

17 விண்ட-விரிந்த; புண்டரீகமாதர்-தாமரை மலரில் வீற்றிருக்கும் பெண்டிர்; திருமகள், கலைமகள்; ஆதிநாதர்-இடப தீர்த்தங்கரர்; நூல்-பரமாகமம்; நீடுதல்-நிலைத்தல்.

18 மிடைதல்-நெருங்குதல்; ஓட்டுதல்-துரத்துதல், போக்குதல்; அனகத்தான்-குற்றமின்மையையுடையான்; கனகம்-பொன்; சினன்-ஜிநன், அருகன்.

19 உலகம் மூன்றும் ஒருங்குடன் ஏத்துமாண்
திலகம் ஆய திறல் அறிவன்னடி
வழுஇல் நெஞ்சொடு வாலிதின் ஆற்றவும்
தொழுவல் தொல்வினை நீங்குக என்றுயான்.

20 ஆதியான், அறவாழி யின்ரான், அலர்ச்
சோதியான், சொரி பூமழையான், வினைக்
காதிவென்ற பிரான்—அவன் பாதமே
நீதியால் நினை வாழிய நெஞ்சமே!

21 போதுஉறு முக்குடைப் பொன்னெயில் ஒருவன்
தாதுஉறு தாமரை அடியிணை பணிந்தார்,
தாதுஉறு தாமரை அடியிணை பணிந்தார்
தீதுஉறு தீவினை இலரே.

22 துங்கக் கனகச் சோதி வளாகத்து
அங்கப் பெருநூல் ஆதியை ஆளும்
செங்கண் சினவேள் சேவடி சேர்வார்
தங்கட்கு அமரும் தண்கடல் நாடே.

---

19 ஒருங்குடன்-ஒருசேர; ஏத்தும்-துதிக்கும், புகழும்; மாண்-மாட்சிமை; திலகம்-தலைமை, முதன்மை; திறல்-வலிமை; அறிவன்-அருகன்; வழு-குற்றம்; வாலிது-நன்று; தொழுவல்-வணங்குவேன். இப்பாடல் வளையாபதியின் காப்புச் செய்யுளாகும்.

20 வினைக்காதி-காதிகர்மங்கள்; அவையாவன: ஞானாவரணீயம், தர்சனாவரணீயம், மோகணீயம், அந்தராயம் என்பன. நீதியால்-முறைப்படி.

21 பொன்னெயில் ஒருவன்-அருகன்; தாது-பூந்தாது.

22 துங்கம்-உயர்ச்சி; வளாகம்-வளைந்த இடம்; அங்கம்-அங்காகமம்; அங்கம் எனப் பெயரிய ஆதிநூலை விரித்த சினவேள் என்க. அமரும்-படியும், கிட்டும். நாடு விரும்பும் என்றும் ஆம்.

23 முருகுஅவிழ் தாமரைமலர்மேல் முடிஇமையோர் புடைவரே
வருசினனார் அருமறைநூல் வழிபிழையார் மனமுடையார்,
இருவினைபோய் விழமுறியா, எதிரியகாதியை எறியா,
நிருமலராய் அருவினராய் நிலவுவர் சோதியினிடையே.

24 இந்திரர்கள் ஏத்தும்அடி, ஈண்டுஉயிர்கள் ஓம்பும்அடி,
வெந்திறல் ஞாயிற்றுஎழில் வீவுஇல்ஒளி வெல்லும்அடி,
மந்திரத்தின் ஓதும்அடி, மாதுயரம் தீர்க்கும்அடி,
அந்தரத்தின் ஆயஇதழ்த் தாமரையின் அங்கண்அடி.

25 கொடி கொடியொடு மிடைவனஉள,
குடை குடையொடு குடைமிசைஉள,
கடி நறுமலர் சொரிவனஉவ,
கடி மதில்உள, கவரியும்உள,
அடி வழிபடும் அமரரும்உளர்,
அருள் அகழியொடு அரியணைஉள,
இடி முரசமும் அதிர்வனஉள,
இனிதுஇனிது அவரது துறவுமே.

---

23 முருகு-மணம்; புடைவருதல்-சூழ்ந்துவருதல்; முறிதல்-அற்று விழுதல்; காதி-காதி கர்மங்கள்; அவையாவன: ஞானவரணீயம், தர்சனாவரணீயம், மோகனீயம், அந்தராயம் என்பனவாம். நிருமலர்-மலமற்றவர்; அருவினர்-உருவமற்றவர்; நிலவுவர்-விளங்குவர்.

24 இந்திரர்-தேவர்; ஏத்துதல்-துதித்தல்; ஓம்பும்-பாதுகாக்கும், ஞாயிறு-சூரியன்; எழில்-அழகு; வீவு-அழிவு, குறைவு; வெல்லுதல்-செயித்தல், இங்கே மேம்படுதல்; ஓதுதல்-துதித்தல்; துயரம்-துன்பம்; அந்தரம்-ஆகாயம்.

25 மிடைதல்-நெருங்குதல்; குடைமிசைஉள-குடைமேல் குடையாக முக்குடை உள்ளமையை குறிப்பித்தவாறாம்; கடிநறுமலர்-புதிய மணமுள்ள பூ; கடிமதில்-காவல் பொருந்திய மும்மதில்; அவையாவன: சமவசரணத்துள்ள உதயதரம், பிரீதிதரம், கல்யாணதரம் என்பனவாம். கவரி-வெண்சாமரம்; அமரர்-தேவர்; அகழி-கோட்டைமதில் சூழ்ந்த கிடங்கு; அரியணை-சிங்காசனம்; இடிமுரசம்-இடிபோலப் பெருங்குரல் எழுப்பும் முரச வாத்தியம்.

26 பிணி ஆர் பிறவிக் கடலுள்
பிறவாவகை நாம் அறியப்
பணியாய்—மணி ஆர் அணைமேல்
படிவா! ஒரு மூவுலகும்
கணியாது உணரும் கவின் ஆர்
கலைமா மடவாள் கணவா!
அணி ஆர் கமலத்து அலர்—
ஆசனனே! அற வாழியனே!

27 திருகிய புரிகுழல் அரிவையர் அவரொடு
திகழ் ஒளி இமையவரும்
பெருகிய கரிகுலம் மருவிய படையொடு
பிரிதல் இல் அரசவையும்
முருகுடை மலரொடு வழிபட முனிகளை
நனி அகலா அருகன
திருவடி முறைமுறை அடைபவர் அடைகுவர்
அமர் ஒளி அமருலகே.

---

26 பிணி-நோய், துன்பம்; மணி-செம்மணி, இரத்தினம்; படிவன்-துறவன், முனிவன்; கணித்தல்-எண்ணியறிதல்; கவின்-அழகு; ஆர்-நிறைவு; கலைமாமடவாள்-கலைமகள்; திருக்கலம்பகம். ''பதினெண் மொழியும் இதமும் மதுரமுமாய்-முழங்கும் கலைமகள் காந்தர் கண் டீர்'' (66) என்று கூறுவது ஒப்பு நோக்குக, கமலத்து அலர்-தாமரை மலர்; ஆசனன்-இருக்கையாகக் கொண்டவன்; அறவாழியன்-தரும சக்கரமுடையவன்.

27 திருகுதல்-பின்னுதல்; புரிகுழல்-முறுக்குண்ட கூந்தல்; அரிவையர்-பெண்டிர்; இமையவர்-தேவர்; கரிகுலம்-யானைக்கூட்டம்; அரசு-அரசன்; முருகு-மணம்; நனி-மிகுதி; அருகன் திருவடி-அருகனுடைய திருப்பாதங்கள்; முறைமுறை-முறையாக, நியமமாக; அடைகுவர-பெறுவர்; அமர்-பொருந்துதல், விரும்புதல்; அமரர்உலகு-அமரர்உலகு, தேவர் வாழும் வானுலகு.

28 கரிமருவு கடிமதிலின் இடுகொடிகள்
திசைதடவு கடுமையி னதாய்த்
திருமருவு பெருவிழவொடு அமரர்குழு
ஒழுகுதொழு செழுமை வழுவாது
அருமரபின் நரபதிகள் அணிகிளரும்
மணிமகுடம் உற மறுஇலாக்
குருமருவு விரிகமல சரணம்நனி
பணிவர்மலி குருசில் நகரே.

29 அழல் அணங்கு தாமரை அருளாழி
யுடைய கோன் அடிக்கிழ்ச் சேர்ந்து,
நிழல் அணங்கு முருகுஉயிர்த்து, நிரந்துஅலர்ந்து
தோடு ஏந்தி நிழற்றும் போலும்
நிழல் அணங்கு முருகுஉயிர்த்து, நிரந்துஅலர்ந்து
தோடு ஏந்தி நிழற்றுமாயின்,
தொழல் அணங்கும் அன்புடையார்
சூழ்ஒளியும் வீழ்கரியும் சொல்லா அன்றே.

---

28 மகுடமுறப் பணிபவரான நரபதிகள் மலியும் நகர் செழுமை வழுவாது எனக்கூட்டுக. கரி-யானை; கடி-காவல்; கடுமை-விரைவு; திரு-செல்வம்; ஒழுகு-ஒழுங்கு; நரபதிகள்-அரசர்கள்; அணி-அழகு; மணிமகுடம்-இரத்தினங்கள் பதித்த கிரீடம்; மறு-குற்றம்; குரு-நிறம்; சரணம்-திருவடி; குருசில்-தலைமை.

29 இது சூளாமணி கல்யாணச் சருக்கத்தில் 213-ம் பாட்டு; தெய்வம் சுட்டிய வரிப்பாட்டில் கூடைச் செய்யுட்கு மேற்கோளாக சிலப்பதிகார உரை சுட்டுகிறது. அழல்-நெருப்பு; அணங்குதல்-வருத்துதல்; அதாவது நெருப்பின் செந்நிறத்தினும் மிக்கது என்பதாம்; நிழல்-ஒளி; முருகு உயிர்த்தல்-மணம் வீசுதல்; நிரந்து அலர்தல்-வரிசையாக மலர்தல்; தோடு-பூவிதழ்.

30 கங்கணக்கைப் பைந்தார்க் கனைகழற்கால்
கருவரைபோல் நீண்டமார்பில் காமர்கோலம்
பொங்கிய சாமரை பொற்ப ஏந்திப்
புடைநின்று இயக்கர்கள் போற்றிவீசச்
சிங்கம் சுமந்துஉயர்ந்த ஆசனத்தின்மேல்
சிவகதிக்கு வேந்துஆகித் தேவர்ஏத்த
அங்கம்பயந்த அறிவன்ஆகிய அறப்படைமூன்று
ஆய்ந்தான் அடிஅடைவாம் அன்றே.

31 படை ஒன்றும்இல்லை; அணிஇல்லை; சுற்ற—
மது இல்லை; பற்றும் இனிஒன்று
அடைகின்றதுஇல்லை; அமிழ்துஉண்பது இல்லை;
அறிவுஒன்றும் எவ்வறி அறியார்;
புடைநின்று நான்ற மணிமாலை போக
நிலவீசு மாகம்உறு நீள்
குடைஒன்றது ஒன்றும் அதன்மேலது ஒன்றும்
உடையார்க்கு இதுஎன்ன குணனே.

---

30 கங்கணம்-கைவளை; பைந்தார்-அழகிய மாலை; கனை கழற்கால்-ஒலிக்கின்ற வீரக்கழல் பூண்டகால்; வரை-மலை; காமர்-விருப்பம்; கோலம்-அழகு; சாமரை-வெண்சாமரம்; பொற்பு-அழகு: புடை—பக்கம்; போற்றுதல் - பேணுதல், விரும்புதல்; சிவகதி - நற்கதி, வீடுபேறு; ஏத்துதல்-துதித்தல்; அங்கம்-அங்காகமம். யாப்பருங்கல விருத்தியுரையிற் காணும் இப்பாடல் தொடர்பான குறிப்புப் பின்வருமாறு: 'இவ்வெழுசீராசிரிய முதலாகவுடையவற்றில்..........நாலசைச்சீர் வந்தன பிறவெனின், 'அகத்தியனார் ஆணையினாற் செய்யப்பட்ட நூல்களெல்லாம் வகையுளி சேர்த்துக' என்பதனாற் 'போற்றி வீச என்பதனையும்' 'ஆசனத்தின்மேல்' என்பதனையும் வகையுளி சேர்க்க மூவசைச்சீர் என்பதாம்.

31 படை-ஆயுதம்; அணி-ஆபரணம்; சுற்றம்-உறவு; அமிழ்து-உணவு; நான்ற-தொங்குகிற; மாகம்-ஆகாயம்; குடை ஒன்றது ஒன்றும் அதன் மேலது ஒன்றும்-என்றது முக்குடையைச் சுட்டியவாறாம்.

32 சோதி மண்டலம் தோன்றுவது உளதேல்,
சொரியும் மாமலர்த் தூமழை உளதேல்,
காதி வென்றதுஓர் காட்சியும் உளதேல்,
கவரி மாருதம் கால்வன உளவேல்,
பாத பங்கயம் சேர்நரும் உளரேல்,
பரம கீதமும் பாடுநர் உளரேல்,
ஆதி மாதவர் தாம்அருகு உளரேல்,—
அவரையே தெரிந்து ஆட்படு மனனே!

33 கடுநாக மதன்அடக்கி, நெடுநீர்ப் பொய்கைக்
கடிமலர் வேய்ந்து உலகளவும் பரந்துஉகந்த
நெடுமாலை நறுமுடிமேல் வைத்தி யேனும்,
நின்னையே போல்நயக்க நின்றார் எல்லாம்
கொடுமாலை வினைஅரக்கர் குறும்பு சாயக்
குளிர்இளம்பூம் பிண்டிக்கீழ் அமர்ந்த கோமான்
தடுமாற்றம் தலைப்பிரிக்கும் சரணம் அல்லால்
தலைக்குஅணியாள் என்றுஉரைத்தல் தகவோ வாழி.

---

32 சோதி மண்டலம்-ஒளி வட்டம்; அருக பரமேஷ்டியைச் சூழ்ந்துள்ள ஆலோகம், பிரபாமூர்த்தி, கனப்பிரபை என்னும் மூன்று சோதிகள். சொரிதல்-இடைவிடாது விழுதல்; காதி-காதி கர்மங்கள்; கவரி-வெண்சாமரம்; மாருதம்-காற்று; காலுதல்-வீசுதல்; பாதபங்கயம்-திருவடித்தாமரை; பரமகீதம்-மேலான இசைப்பாடல்; ஆதி மாதவர்-முதல் தீர்த்தங்கரராகிய இடபதேவர்.

33 கடுநாகம்-நஞ்சையுடைய பாம்பு; மதன்-வலிமை; நெடுநீர்-மிகுந்தநீர்; கடி-நறுமணம்; உகத்தல்-உவத்தல், மகிழ்தல்; நயத்தல்-விரும்புதல்: மாலை-இயல்பு; குறும்பு-தொல்லை; சாய்தல்-அற்றுப் போதல்; பிண்டி-அசோகமரம்; தலைப்பிரித்தல்-போக்குதல்; சரணம்-திருவடி; வாழி-முன்னிலையசை.

34 கொங்கு தங்கு கோதை ஓதி
மாத ரோடு கூடி நீடும் ஓடை நெற்றி
வெங்கண் யானை வேந்தர் போந்து
வேத கீத நாத என்று நின்று தாழ,
அங்க பூர்வம் ஆதி யாய
ஆதி நூலின் நீதி ஓதும் ஆதி யாய
செங்கண் மாலைக் காலை மாலை
சேர்வர் சேர்வர் சோதி சேர்ந்த சித்தி தானே.

35 அனவரதம் அமரர் அரிவையரோடு அணுகி, அகன் [அமரும் உவகை—
யதுவிதியி னவர, அணிதிகழ வருவர் ஒருபால்;
கனவரையொடு இகலும்அகலும் ஒளி கலவு கரகமல நிலவு
கனகமுடி கவினுகழல் அரசர் துழனி ஒருபால்;
தனவரத நளின சரணம் நனிபரவு தகவுடைய முனிகள்
தரணிதொழ, வழுவில்தருமநெறிமொழிவர் ஒருபால்;
சினவரன பெருமை தெரியின் இவை அவன திருவிரவுகிளவி
தெளிரு மொழி யளவு சிவபுரமது அடைதல்திடனே.

---

34 கொங்கு-தேன்; கோதை-மாலை; ஓதி - கூந்தல்; ஓடை-நெற்றிப் பட்டம்; போந்து-வந்து; அங்கபூர்வம் ஆதி-அங்காகமம், பூர்வாகமம், பகுசுருதியாகமம் என்பன. செங்கண்மால்-அருகன்; சித்தி-வீடுபேறு.

35 அனவரதம்-எப்பொழுதும்; அமரர்-தேவர்; அரிவையர்-தத்தம் தேவிமார்; அகன்-அகம், மனம்; விதி-முறைமை; அணிதிகழ-அழகு விளங்க; ஒருபால்-ஒரு பக்கம்; கனவரை-பெரியமலை; இகல்தல்-மாறுபடுதல், ஒத்தல்; அகலம்-மார்பு; கலவுதல்-கலத்தல்; கரகமலம்-கைத்தாமரை; கனகமுடி-பொன்னாலான கிரீடம்; கழல்-வீசங்கழல்; துழனி-ஓசை; தன-தன்னுடைய; வரதம்-வரமருளுதல்; நளினசரணம்-தாமரைமலர் போன்ற பாதம்; நனி-மிக; பரவுதல்-துதித்தல்; தகவு-பெருமை; தரணி-உலகம்; வழு-குற்றம்; சினவரன்-அருகதேவன்; அவன-அவனுடைய; கிளவி-சொல், ஆகமம்; சிவபுரம்-வீட்டுலகம்; திடன்-உறுதி.

நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா

36 முத்தொடு மணிதயங்கு முக்குடைக்கீழ் முனைவனாய்,
எத்திசையும் பல்உயிர்கள் இன்புறஇனிது இருந்து,
பத்துஉறு காவதம் பகைபசி பிணிநீங்க,
உத்தமர்கள் தொழுதுஏத்த, ஒளிர்வரைபோல்
[செவ்வியோய்! (தரவு)

எள்அனைத்தும் இடர்இன்றி, எழில்மாண்ட
[பொன்னெயிலின்
உள்இருந்த உன்னையே உறுதுணைஎன்று
[அடைந்தோரை
வெள்ளில்சேர் வியன்காட்டுள் உறைகஎன்றல் விழுமிதோ?

குணங்களின் வரம்புஇகந்து கூடிய பன்னிரண்டு
கணங்களும் வந்து அடிஏத்த, காதலித்துஉன்
[அடைந்தோரைப்
பிணம்பிறங்கு பெருங்காட்டுள் உறைக என்றல்
[பெருமையோ?

---

36 தயங்குதல்-விளங்குதல்; முனைவன்-முதல்வன், கடவுள்; எத்திசையும்-எல்லாத் திசைகளிலும்; அதாவது பத்துத்திக்குகளிலும் என்றபடி. காவதம்-காதம், பத்துக்கல்தூரம்; பிணி-நோய்; 'பசியும் பிணியும் பகையும் நீங்கி வசியும் வளனும் சுரக்கென வாழ்த்தி' என்கிறார் மணிமேகலையில் சாத்தனார். ஒளிர்வரை-ஒளிவீசம் மலை.

எள் அனைத்தும்-எள் அளவாகிலும், சிறிதும் என்றபடி; இடர்-துன்பம்; எழில்-அழகு; மாணல்-சிறத்தல்; பொன்னெயில்-சமவசரணம், உறுதுணை-உற்றதுணை; வெள்ளில்-பிணப்பாடை; காடு-சுடுகாடு; விழுமிது-சிறந்தது. வரம்பு-எல்லை; இகழ்தல்-கடத்தல்; பன்னிரண்டு கணங்கள்-முனிவரர், ஆரியாங்கனைகள் விலங்குசாதி, பவணர், வியந்தரர், சோதிடர், கற்பவாசியர், பவணர் மனைவியர், வியந்தரர் மனைவியர், சோதிடர் மனைவியர், கற்பவாசியர் மனைவியர், சக்கரவர்த்திகள். காதலித்தல்-அன்பு செய்தல்; பிணம் பிறங்கு பெருங்காடு-சுடுகாடு.

விடத்தகைய வினைநீக்கி, வெள்வளைக்கைச்
[செந்துவர்வாய்
மடத்தகைய மயில்அனையார் வணங்கநின்
[அடைந்தோரைத்
தடத்தகைய காடுஉறைக என்பதுநின் தகுதியோ?
என ஆங்கு — (தனிச்சொல்) (தாழிசை)

எனைத்துணையை ஆயினும் ஆகமற்று உன்கண்
தினைத்துணையும்தீயவை இன்மையின் சேர்தும்
வினைத் தொகையை விட்டுக என்று. (சுரிதகம்)

அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பாவகை

37 அலைகடற் கதிர்முத்தம் அணிவயிரம் அவைஅணிந்து,
மலைஉறைமா சுமந்துஏந்து மணிஅணைமேல்
[மகிழ்வுஎய்தி,
யோசனைசூழ் திருநகருள் உலகுஒருமூன்று உடன்ஏத்த,
ஈசனையாய் இனிதுஅமர்ந்து அங்குஇருடிகட்கும்
[இறைவர்க்கும்
அருளறமே அறமாக, அயலார்கள் மயலாக,
இருள்அறநன்கு எடுத்துஇயம்பி இருவினைகள்
[கடிந்திசினோய்! (தரவு)

துன்னாத வினைப்பகையைத் துணிசெய்யும்
[துணிவினையாய்
இன்னாத பகைமுனைபோல் எரித்துஅடக்கும்
[நினைப்பினால்,

---

விடத்தகைய வினை-தீவினை; வெள்வளை-சங்குவளை; துவர்-பவளம்; மடத்தகைய-இளமையான; தகுதி-பெருமை, சிறப்பு, துணை அளவு; வீட்டுதல்-போக்குதல், அழித்தல்.

37 மலைஉறைமா-மலையில் வாழும்சிங்கம்; யோசனை-ஓர் அளவு திருநகர் - சமவ சரணத்திலுள்ள சினாலயம்; இருடிகள் –

இருள்இல்லா உணர்வுஎன்னும் இலங்குஒளியால்
[எரித்தனையாய்
அருள்எல்லாம் அடைந்துஎங்கள் அருளுவது
[உன்அருள்ஆமோ?

மதிபுரை முக்குடைநிழல் மகிழ்வுஎய்தி அடைந்தோரை
கதிபொருதக் கருவரைமேல் கதிர்பொருத முகம்வைத்துக்
கொன்முனைபோல் வினைநீங்கக் குளிர்நிழற்கண்
[மகிழ்ந்தனிர்போல்
நின்மின்நீர் எனஉரைத்தல், நிருமல! நின்பெருமையோ?

மனைதுறந்து வனம்புகுமின், மலம்அறுக்கல் உறுவிரேல்;
வினைஅறுக்கல் உறுவார்க்கு விழுச்செல்வம்
[பழுதுஎன்றுஇங்கு
அலகுஇல்லாப் பெருஞ்செல்வத்து அமரரசர் புடைசூழ
உலகுஎல்லாம் உடன்துறவா உடைமையும்
நின்உயர்வாமோ? (தாழிசை)

அரசரும் அமரரும் அடிநிழல் அமர்தர
முரசுஅதிர் இமிழ்இசை முரணிய மொழியினை; (அராகம்)

அணிகிளர் அவிர்மதி அழகுஎழில் அவிர்சுடர்
மணிஒளி மலம்அறு கனலி நின்நிறம்;
மழையது மலிஒலி மலிகடல் அலைஒலி
முழைஉறை அரியது முழக்கம் நின்மொழி; (பேரெண்)

---

முனிவர்; இறைவர்-தேவர்; மயல்-மயக்கம்; இருள்அற-ஐயம்திரிபு இல்லாமல்; இருவினை-நல்வினை, தீவினை.

துன்னுதல்-நெருங்குதல்; துணிசெய்தல்-அழித்தல்; பகைமுனை-பகையிடம்.

மதி-பூரணச் சந்திரன்; புரை-ஒப்பு; கொன்முனை-அச்சந்தரும் பகைப்புலம்; நிருமலன்- மலமற்றவன், தூயோன்; மனை-வீடு, மனைவி; மலம்-அழுக்கு. பாவம்; விழுச்செல்வம்-சிறந்த செல்வம்; பழுது-குற்றம்; அலகு-எண்ணிக்கை, அளவு.

வேலற்கு அரும் வினைப்பகை வேரொடும் வென்றனை;
சொலற்கு அரு மெய்ப்பொருள் முழுவதும் சொல்லினை;
அருவினை வெல்பவர்க்கு அரும்புணை ஆயினை;
ஒருவனை ஆகி உலகுடன் உணர்ந்தனை; (இடையெண்)

உலகுஉடன் உணர்ந்தனை; உயிர்முழுது ஓம்பினை;
நிலஉறழ் நிறத்தினை; நிழல்இயல் யாக்கையை;
மாதவர் தாதையை; மலர்மிசை மகிழ்ந்தனை;
போது இவர் பிண்டியை; புலவருட் புலவனை; (சிற்றெண்)

என ஆங்கு—(தனிச்சொல்)
அருளுடை ஒருவ! நிற்பரவுதும் எம்கோன்
இருள்அறு திகிரியொடு வலம்புரித் தடக்கை
ஒருவனை வேண்ட இருநிலம் கொடுத்த
நந்தி மால்வரைச் சிலம்பன் நந்தி
ஒற்றைச் செங் கோல் ஓச்சிக்
கொற்ற வெண்குடை நிழற்றுக எனவே. (சுரிதகம்)

---

அமரர்-தேவர்; முரணுதல்-மாறுபடுதல்; அவிர்தல்-விளங்குதல்; கனலி-நெருப்பு; முழை-குகை- அரி-சிங்கம்.

பெய்ப்பொருள்-உண்மைப்பொருள்; புணை-தெப்பம், காப்பு; ஒருவன்-ஒப்பற்றவன்.

ஓம்புதல்-பாதுகாத்தல்; நில-நிலவு; உறழ்-ஒத்தல்; நிழல்-ஒளி- தாதை-தந்தை.

பரவுதல்-துதித்தல்; திகிரி-சக்கராயுதம்; வலம்புரி-வலம்புரிச் சங்கு.

நந்தி-"சங்க சக்கரங்களையுடைய திருமாலை வேண்ட பூமியை அளித்த நந்தி' என்பதனால், ஈண்டுக் கூறப்பட்ட அரசன் மகாபலியின் மரபினரான பாண வமிசத்தவனும் ஆந்திர தேசத்துக்கு மேல்பக்கத்து நாட்டை ஆண்டவனுமான ஜயசந்திவர்மன் ஆகலாம் எனத் தோன்றுகிறது" என்று மு. இராசவையங்கார் தாம் எழுதியுள்ள விசேடக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

38 பிறப்புஎன்னும் பிணிநீங்கப் பிரிவுஅரிய வினைக்கடலை
அறப்புணையே புணைஆக மறுகரைபோய்க் கரைஏறி,
இறப்புஇலநின் அருள்புரிந்தாங்கு எமக்குஎல்லாம்
[அருளினையாய்,
மறவாழி ஒளிமழுங்க மனையவர்க்கும் முனையவர்க்கும்
அறவாழி வலன்உயரி அருள்நெறியே அருளியோய்!
(தரவு)

அருள்எல்லாம் அகத்துஅடக்கி அடிநிழலை
[அடைந்தோர்க்குப்
பொருள்எல்லாம் நீவிளங்கப் புகர்இல்லா வகையினால்
இருள்இல்லா வியல்ஞானம் இயம்புவதுஉன் இயல்ஆமோ?

தீதுஇல்லா நயம்முதலாத் திருந்திய நல்அளவைகளால்
கோதுஇல்லா அரும்பொருளைக் குறைவுஇன்றி
[அறைந்ததற்பின்,
பேதுஇல்லா இயற்காட்சி அருளியதுஉன் பெருமையோ?

துணைஇல்லாப் பிறப்பிடைக்கண் துயர்எல்லாம்
[உடன்அகல,
புணைஇல்லா உயிர்கட்குப் பொருள்இல்லா அருவினால்,
இணைஇல்லா இயலொழுக்கம் இசைந்ததுநின்
[இறைமையோ? (தாழிசை)

---

38 பிணி-நோய்; புணை-தெப்பம்; மறவாழி-பாவக்கடல்; மனையவர்-இல்லறத்தார்; முனையவர்-துறவோர்; வலன்-வலப்பக்கம்.

புகர்-குற்றம்; வியல்ஞானம்-நன்ஞானம்; நல்லறிவு; நயம்-ஸப்தபங்கி நியாயம்; அளவை-சீர்தூக்கும் கருவி; கோது-குற்றம்; அறைதல்-சொல்லுதல்; பேது-பேதமை, அறியாமை; இயற்காட்சி-நற்காட்சி.

துணை-அளவு; இயலொழுக்கம்-நல்லொழுக்கம்.

திருமொழி-தருமம், ஆகமம்; மருள்-மயக்கம்; இயம்புதல்-சொல்லுதல்.

## உரை மேற்கோள்

அருள்புரி திருமொழி அமரரும் அரசரும்
மருள்வரும் மனிதரும் மகிழ்வுற இயம்பினை; (அராகம்)

பூமலர்துதைந்த பொழில்அணி கொழுநிழல்
[தேமலர் அசோகினை;
தூமலர்விசும்பின் விஞ்சையர்பொழியும்
[மாமலர்மாரியை; (பேரெண்)

காமரு கதிர்மதி முகத்தினை;
சாமரை இடையிடை மகிழ்ந்தனை;
தாமரை மலர்புரை அடியினை;
தாமரை மலர்மிசை ஒதுங்கினை; (இடையெண்)

அறிவனைநீ; அதிசயநீ;
அருளினைநீ; பொருளினைநீ;
உறுவனைநீ; உயர்வினைநீ;
உலகினைநீ; அலகினைநீ; (சிற்றெண்)

என ஆங்கு—(தனிச்சொல்)

இனையை ஆதலின் முனைவருள் முனைவ!
நினையுங் காலம் நின் அடி அடைதும்—
ஞானமும் காட்சியும் ஒழுக்கமும் நிறைந்து
துன்னிய தீவினைத் துகள்தீர்
முன்னிய பொருளதுமுடிக எமக்கு எனவே. (சுரிதகம்)

---

துதைதல்-நெருங்குதல்; விஞ்சையர்-வித்தியாதரர்,

காமருதல்-விரும்புதல்; சாமரை-வெண்சாமரம்; ஒதுங்குதல்-வீற்றிருத்தல்.

உறுவன்-துணைவன்; முனைவன்-கடவுள்; துன்னுதல்-சேர்தல், நெருங்குதல்; துகள்-குற்றம்; முடிதல்-நிறைவேறுதல்.

39 நலம்கிளர் திருமணியும் நன்பொன்னும்குயின்று,
[அழகுஆர்
இலங்குஎயிற்று அழல்அரிமான் எருத்தம்சேர்
[அணையின்மேல்
இருபுடையும் இயக்கரசர் இணைக்கவரி எடுத்துஎறிய,
விரிதாமம் துயல்வருஉம் வெண்குடைமூன்று
[உடன்நிழற்ற,
வண்டுஅரற்ற நாற்காதம் வகைமாண உயர்ந்துஓங்கும்
தண்தளிர்ப் பூம்பிண்டிக்கீழ்த் தகைபெற
[வீற்றிருந்தனையே! (தரவு)

ஒல்லாத பிறப்பு உணர்த்தும் ஒளிவட்டம் புடைசூழ
எல்லார்க்கும் எதிர்முகமாய் இன்பம்சேர் திருமுகத்துஏ
ஏர்மலர மணிப்பொய்கை எழில்ஆம்பற் போதிஅவிழ,
ஊர்களோடு உடன்முளைத்த ஒளிவட்டத்து
[அமர்ந்தன்றே.

கனவயிரம் குறடுஆகக் கனல்பைம்பொன் சூட்டுஆக,
இனமணி ஆரமா, இயன்றுஇருள் இரிந்துஓட,
அந்தரத்து உருளும்நின் அலர்கதிர் அறவாழி
இந்திரனும் பணிந்துஏத்த, இருவிசும்பில் திகழ்ந்தன்றே.

---

39 நலம்-நிறம்; குயிலுதல்-அழுத்துதல், செய்தல்; எயிறு-பல்; அழல்-நெருப்பு; அரிமான்-சிங்கம்; எருத்தம்-கழுத்து; புடை-பக்கம்; இணைக்கவரி-இரண்டு வெண்சாமரம்; எறிதல்-வீசுதல்; தாமம்-மாலை; துயல்வருதல்-அசைதல், தொங்குதல்; நிழற்றல்-நிழலைச் செய்தல்; அரற்றல்-ஒலித்தல்; மாண்-மாட்சிமை; தகை-அழகு.

ஒல்லுதல்-பொருந்துதல்; ஒளிவட்டம்-இறைவனைச் சூழ்ந்து விளங்கும் வட்டவடிவமான ஒளி; எதிர்முகம்-நேர்; ஏர்-அழகு-போதி-கட்டு; ஊர்-பரிவேடம்; ஒளிவட்டம்-சந்திரன்;

குறடு-சக்கரத்தின் நடுக்குடம்; சூட்டு-சக்கரத்தின் விளிம்பு,

வாடாத மணமாலை வானவர்கள் உள்விட்டார்
நீடாது தொழுதுஏத்த, நிறம்சேர்ந்த பெருங்கண்ணும்
முகிழ்பரிதி முகம்நோக்கி முறுவலித்து உள்நெகிழ்ந்து,
திகழ்தகைய குடைபுடைசூழ் திருந்துநிழல்
[திளைத்தன்றே. (தாழிசை)

மல்லல் வையம் அடிதொழுது ஏத்த
அல்லல் நீக்கற்கு அறப்புணை ஆயினை;
ஒருதுணிவு அழிய உயிர்க்கு அரண் ஆகி,
இருதுணி ஒருபொருட்கு இயல்வகை கூறினை.
(நாற்சீர் ஈரடி இரண்டு அம்போதரங்கம்)

ஏடுஅலர் தாமரை ஏந்தும் நின்அடி;
விடோடு கட்டினை விளைக்கும் நின்மொழி;
விருப்புறு தமனியம் விளக்கும் நின்நிறம்;
ஒருத்தல் கூடுற உருற்றும் நின்புகழ்;
(நாற்சீர் ஓரடி நான்கு அம்போதரங்கம்)

இந்திரற்கும் இந்திரன்நீ; இணைஇல்லா இருக்கையைநீ;
மந்திர மொழியினைநீ, மாதவர்க்கு முதல்வனும்நீ;
அருமைசால் அறத்தினைநீ; ஆருயிரும் அளித்தனைநீ;
பெருமைசால் குணத்தினைநீ; பிறர்க்கு அறியாத் திறத்
[தினைநீ
(முச்சீர் ஓரடி எட்டு அம்போதரங்கம்)

பரமன்நீ; பகவன்நீ; பண்ணவன்நீ; புண்ணியன்நீ;
உரவன்நீ; குரவன்நீ; ஊழிநீ; உலகுநீ;
அருளும்நீ; அறமும்நீ; அன்புநீ; அணைவுநீ;
பொருளும்நீ; பொருப்புநீ; பூமிநீ; புணையும்நீ.
(இருசீர் ஓரடிப் பதினாறு அம்போதரங்கம்)

---

ஆரைசூழ்ந்த வட்டை; ஆரம்-ஆரக்கால்; இரிதல்-கெடுதல், விலகுதல்; அந்தரம்-வெளி; அறவாழி-தருமசக்கரம்; ஏத்துதல்-துதித்தல், புகழ்தல்; நீடுதல்-காலம் தாழ்த்தல்; முகிழ்பரிதி-உதயசூரியன்.

என ஆங்கு—(தனிச்சொல்)

அருள்நெறி ஒருவ! நிற்பரவுதும்—எம்கோன்
திருமிகு சிறப்பின் பெருவரை அகலத்து
எண்மிகு தானைப் பண்அமை நெடுந்தேர்
அண்ணல் யானைச் செங்கோல் விண்ணன்
செருமுனை செருக்கு அறத் தொலைச்சி
ஒருதனி வெண்குடை ஓங்குக எனவே. (சுரிதகம்)

40 கடையில்லா அறிவோடு ஞானமும் காட்சியும்
உடையையாய் உலகுஏத்த ஒண்பொருளது இயல்பு [உணர்ந்து,
மறவாழி இமையவரும் மாதவரும் புடைசூழ,
அறவாழி வலன்உயரி, அருள்நெறியே அருளியோய்!
(தரவு)

வினைஎன்னும் வியன்பகையை வேரோடும் உடன்கீழ்ந்து,
முனைவர்கள் தொழுதுஏத்த, இருப்பதுநின் [முறைமையோ?

---

மல்லல்-வளப்பம்; நீக்கற்கு-நீத்தற்கு; அல்லல் நீத்தக்கு எனப்பாடம் கொண்டால், நீத்தம்-வெள்ளம்; அல்லல் நீத்தம்-துன்பக்கடல்; புணை-தெப்பம்; அரண்-காப்பு; இருதுணி ஒரு பொருட்கு இயல்வகை-அநேகாந்தமுறை.

ஏந்துதல்-தாங்குதல்; கட்டு-பற்று; தமனியம்-பொன்; ஒருத்தல்-யானை; உஞற்றுதல்-செய்தல்.

இணை-ஒப்பு; மாதவர்-பெருந்தவம் புரியும் முனிவர்; பண்ணவன்-முனிவன்; உரவன்-அறிவன்; வரை-மலை; விண்ணன்-ஜினபக்தனாகிய ஓர் அரசன்; தொலைச்சுதல்-போக்குதல்.

40 கடையில்லாமை - முடிவில்லாமை; ஒண்பொருள் - ஒளியுடைப் பொருள்: வியன்பகை-பெரும்பகை; கீழ்தல்-அகழ்ந்தெடுத்தல்; முனைவர்-முனிவர்.

பொருளாடல் புரியிரேல், புகர்தீரும் என அருளி
மருள்ஆனா மணியணைமேல் மகிழ்வதுநின் மாதவமோ?
வேந்தர்க்கும் முனைவர்க்கும் விலங்கிற்கும் அருள்துறவாத்
தோம்தீரத் துறந்தநின் துறவரசும் துறவாமோ?
(தாழிசை)

முழுவதும் உணர்பவர் முனைவருள் முனைவர்கள்
தொழுதுஎழு துதிஒலி துதைமலர் அடியினை; (அராகம்)

நிழல்மணி விளைஒளி நிகர்க்கும் நின்நிறம்;
எழில்மதி இதுஎன இகலும் நின்முகம்; (பேரெண்)

கருவினை கடந்தோய்நீ காலனை அடர்ந்தோய்நீ;
ஒருவினையும் இல்லோய்நீ; உயர்கதிக்கு முனைவன்நீ;
(இடையெண்)

அறவன்நீ; அமலன்நீ; அருளும்நீ; பொருளும்நீ;
உறவுநீ; உயர்வுநீ; உலகுநீ; அலகுநீ; (சிற்றெண்)

என ஆங்கு—(தனிச்சொல்)

அருளுடை ஒருவ! நின் அடியிணை பரவுதும்—
இருளுடை நாற்கதி இடர்முழுது அகலப்
பாடுதற் குரிய பல்புகழ்
வீடுபெறு உலகம் கூடுக எனவே. (சுரிதகம்)

---

புகர்-குற்றம்; தோம்-குற்றம், பாவம்; துதைதல்-நெருங்குதல்; நிழல்-ஒளி; காலன்-யமன்; அமலன்-மலமற்றவன், கடவுள்; அலகு-அளவு; பரவுதல்-துதித்தல், வணங்குதல்; நாற்கதி-தேவர், மனிதர், நரகர், விலங்கு.

41 தெரிவுஇல்லா வினைகெடுத்துத் தீவினையில் தெரிந்து
சரிவுஇல்லா இன்பத்தால் சங்கரனும் முழுதுலகும் [ஓங்கிச்
தெரிந்துஒன்றி உணர்ந்தநின் திப்பிய ஞானம்தன்னால்
விரிந்துஎங்கும் சென்றமையால் விண்ணுவுமாய்
[மண்ணின்மிசைத்

தேர்வுற்ற ஆரிடம் நான்மையினும் திரிவுஇல்லாச்
சார்வுற்ற நான்மையினும் சதுமுகனாய் உயர்ந்தனையே!
(தரவு)

இருத்தியும் நூல்நெறியது இயல்வகை தன்னாலும்
வருத்தாத கொள்கையான் மன்உயிரைத்
[தலையளிப்போய்
தொடர்த்துஅமுக்கும் பிணியரசன் தொடர்ந்துஓட
[ஞானத்தால்
அடர்ந்துஅமுக்க வென்றதும் நின்அறம்
[ஆகிக்காட்டுமோ?

---

41 சரிதல்-குறைதல்; சங்கரன்-இன்பத்தைச் செய்பவன்; விண்ணு-எங்கும் விரிந்தவன்; விண்ணு-விஷ்ணு; சதுமுகன்-நான்கு முகங் கொண்டவன்; திப்பியம்-திவ்வியம்; ஆரிடம் நான்மை-நான்கு சின வேதங்கள்; பிரதமானுயோகம், கரணானுயோகம், சரணானுயோகம், திரவ்யானுயோகம்; திரிவுஇல்லாச் சார்வுற்ற நான்மை-அனந்த சதுட்டயம்—ஆன்மாவின் சுபாவ குணங்கள் நான்கு-அனந்த ஞானம், அனந்ததரிசனம், அனந்தவீரியம், அனந்தசுகம். 'இன்பத் தால்' சங்கரசப்தமும், 'விரிந்தெங்கும் சென்றமையால்' என்றமையால் விஷ்ணு சப்தமும், 'நான்மையினும்' என்பதனால் சதுமுக சப்தமும் விளங்க நிற்கின்றன.

இருத்தி - சித்தி; தலையளித்தல் - காத்தல்; அடர்தல் - நெருக்குதல்.

ஏதிலா உயிர்களை எவ்வகைக் கதியகத்தும்
காதலால் உழப்பிக்கும் காமனைக் கறுத்துஅவன்
வடிவுகெடச் சிந்தையால் எரித்ததூஉம் வல்வினையைப்
பொடிபட வென்றதும்நின் பொறையுடைமை ஆகுமோ?

எவ்வுயிர்க்கும் ஓர்இயல்பே என்பவை தமர்க்கெல்லாம்
செவ்விய நெறிபயந்து சிறந்துஓங்கு குணத்தையாய்க்
கொலைத்திறத்தால் கூட்டுண்ணும் கூற்றப்பேர்
[அரசன்நுங்க
அலைத்தவனை வென்றதும்நின் அருளாகிக் கிடக்குமோ?
(தாழிசை)

தாதுஉறு நனைசினை தழல்எழில்-சுழல்சுழல்
சைவல முகைநகும் தடமலர் அசோகினை;
சீர்உறு கெழுதகு செழுமணி முழுது அணி
செறிஉளை விலங்கரசு அணிபொனின் அணையினை;
வார்உறு கதிர்எதிர் மரதக நிரைநிரை
வரிபுரி தெளிமதி வெருவரு குடையினை;
போர்உறு தகையன புயல்உளர் வியல்ஒளி
புதுமது நறவின புனைமலர் மழையினை;
பொறிகிளர் அமரர்கள் புகலிடம் எனமனும்
பொலிமலி கலிவெலும் பொருவறும் எயிலினை;

---

காமன்-மன்மதன்; கறுத்தல்-சினத்தல்; கறுத்து எரித்த தூஉம் என்க.

தமர்-தம்மவர், அன்புடைய அடியார்; கூற்றம்-யமன்; நுங்குதல்-அழிதல், கெடுதல்.

தாது-மகரந்தம்; நனை-அரும்பு; சைவலம்-தாமரைத்தண்டு; உளை-பிடரிமயிர்; விலங்கரசு-சிங்கம்; அணை-இருக்கை.

வார்-நீட்சி; மரகதம்-பச்சைமணி; வெருவருதல்-அஞ்சுதல்; மனும்-மன்னும், பொருந்தும்; எயில்-சமவசரணம்.

வெறிகிளர் உருவின விரைவினின் இனிதுஎழ
எறிவரு தெரிதகவு இனிதுஉளர் கவரியை;
விறல்உள பிறவியை வெருவரும் முறைதெறு
வியல்எரி கதிர்என மிடலுடை ஒளியினை;
அறிவுள அமரர்கள் அதிபதி இவன்என
இடனுடை இடிபட எழுமன விசையினை. (அராகம்)

மன்உயிர் காத்தலான் மறம்விட்ட அருளினோடு
இன்உயிர் உய்குஎன்ன இல்லறமும் இயற்றினையே;
புன்மைசால் அறம்நீக்கிப் புலவர்கள் தொழுதுஏத்தத்
தொன்மைசால் குணத்தினால் துறவரசாய்த்
[தோற்றினையே. (பேரென்)

பீடுடைய இருக்கையைநின் பெருமையே பேசாதோ?
வீடுடைய நெறிமையைநின் மேனியே விளக்காதோ?
ஒல்லாத வாய்மையைநின் உறுபுகழே உரையாதோ?
கல்லாத அறிவுநின் கட்டுரையே காட்டாதோ?
(இடையென்)

அறிவினால் அளவிலைநீ; அன்பினால் அசைவிலைநீ;
செறிவினால் சிறந்தனைநீ; செம்மையால் செழுங்கதிர்நீ;
காட்சியால் கடையிலைநீ; கணம்சூழ்ந்த கதிர்ப்பினைநீ;
மாட்சியான் மகிழ்வினைநீ; மணிவரைபோல்
[வடிவினைநீ; (சிற்றென்)

---

உளர்தல்-அசைதல், சுழல்தல்; எரிகதிர்-சூரியன்; இடிபடுதல்-நெருங்குதல்; மறம்-பாவம்; உய்கு-உய்கை, பிழைத்தல்; புன்மை-இழிவு; புலவர்-தேவர்; தொன்மை-பழமை.

பீடு-பெருமை; கட்டுரை-அருள்மொழி.

அசைதல்-தளர்தல்; கதிர்ப்பு-ஒளி; மணிவரை-மாணிக்கமாலை.

வலம்புரி கலந்துஒருபால்; வால்வளை ஞிமிர்ந்துஒருபால்;
நலம்தரும் கொடிஒருபால்; நலம்புணர் குணம்ஒருபால்;
தீதுஅரு திருஒருபால்; திகழ்ஒளி மணிஒருபால்;
போதுஉறு மலர்ஒருபால்; புணர்கங்கை யாறுஒருபால்;
ஆடியின் ஒளிஒருபால்; அழல்எரியது ஒருபால்;
மூடிய முரசுஒருபால்; முழங்குநீர்க் கடல்ஒருபால்;
பொழிலோடு கயம்ஒருபால்; பொருஅறு களிறுஒருபால்;
எழிலுடை ஏறுஒருபால்; இணை அரி மான்ஒருபால்;
(அளவெண்)

என ஆங்கு—(தனிச்சொல்)

இவைமுதலாகிய இலக்கணப் பொறிகிளர்
நவைஇல் காட்சி நல்லறத் தலைவ! நின்
தொல்குணம் தொடர்ந்துநின்று ஏத்துதும்—பல்குணப்
பெருநெறி அருளி, எம்பிறவியைத் தெறுவதுஓர்
வரம் மிகத் தருகுவை எனநனி
பரவுதும் பரம! நின் அடியிணை பணிந்தே. (சுரிதகம்)

வஞ்சிப்பா

42 மந்தாநிலம் வந்தசைப்ப
வெண்சாமரை புடைபெயர்தரச்
செந்தாமரை நாள்மலர்மிசை
என—ஆங்கு

---

வலம்புரி-வலம்புரிச்சங்கு; வால்-வெண்மை; வளை-சங்கு; ஆடி-கண்ணாடி; முழங்குதல்-ஒலித்தல்; பொழில்-சோலை; கயம்-தடாகம்; பொரு-ஒப்பு; களிறு-ஆண்யானை; அரிமான்-சிங்கம்.

காட்சி-அறிவு; தெறுதல்-அழித்தல், போக்குதல்; பரவுதல்-துதித்தல்.

42 மந்தாநிலம்-தென்றற்காற்று; புடை-பக்கம்; பெயர்தருதல்-வீசுதல்; நாள்மலர்-அன்றலர்ந்தபூ;

இனிதின் ஒதுங்கிய இறைவனை
மனம்மொழி மெய்களின் வணங்குதும் மகிழ்ந்தே.

43 தாள் ஓங்கிய தண்பிண்டியின்
நாள்மலர் விரிதரு நிழற்கீழ்ச்
சுடர்பொன்னெயில் நகர் நடுவண்
அரியணைமிசை இனிது அமர்ந்தனை
அதனால்—
பெருந்தகை அண்ணல்நிற் பரசுதும்
திருந்திய சிவகதிசேர்கயாம் எனவே.

குறளடி வஞ்சிப்பா

44 அங்கண் வானத்து அமரரசரும்
வெங்களி யானை வேல்வேந்தரும்
வடிவார் கூந்தல் மங்கையரும்
கடிமலர் ஏந்திக் கதழ்ந்துஇறைஞ்சச்
சிங்கம் சுமந்த மணியணைமிசைக்
கொங்குஅவிர் அசோகின் கொழுநிழற்கீழ்ச்
செழுநீர்ப் பவளத்திரள் காம்பின்
முழுமதி புரையும் முக்குடைநீழல்
வெங்கண் வினைப்பகை விளிவுஎய்தப்
பொன்புனை நெடுமதில் புடைவளைப்ப
அனந்த சதுட்டய மவைஎய்த

---

மனம் மொழிமெய்-உள்ளம், உரை, உடல்.

43 தாள்-அடிமரம்; சிவகதி-முத்திப்பேறு.

44 அம்கண்-அழகிய இடம்; அமராசர்-இந்திரர்; வேந்தர்-அரசர்; வடி-திருத்தம்; வார்-நீட்சி; கடி-மணம், வாசனை; கதழ்தல்-மிகுதல்; வேகமாதல், சிறப்பாதல் என்றும் ஆம். இறைஞ்சுதல்-வணங்குதல்; மணியணை-அழகிய இருக்கை; கொங்கு-தேன், மகரந்தம்; காம்பு-குடையின் தண்டு; விளிவு-அழிவு; பொன்புனை நெடுமதில்-சமவ-

நனந்தலை உலகுடன் நவைநீங்க
மந்தமாருதம் மருங்கு அசைப்ப
அந்தரதுந்துபி நின்று இயம்ப
இலங்கு சாமரை எழுந்துஅலமர
நலம்கிளர் பூமழை நனிசொரிதர
இனிது இருந்து—
அருள்நெறி நடத்திய ஆதிதன்
திருவடிபரவுதும் சித்திபெறற் பொருட்டே.

45 பூந்தண்சினை மலர்மல்கிய பொழிற்பிண்டி
வேந்தன்புகழ் பரவாதவர் வினைவெல்லார்
அதனால்—
அறிவனது அடியிணை பரவப்
பெறுகுவர் யாவரும் பிறவாநெறியே.

46 வினைத் திண்பகை விழச்செற்றவன்
வனப்பங்கய மலர்த் தாளிணை
நினைத்து அன்பொடு தொழுதுஏத்தினர்
நாளும்—
மயல்ஆம் நாற்கதி மருவார்
பெயராமேற்கதி பெறுகுவர் விரைந்தே.

---

சரணத்தைச் சூழ்ந்துள்ள மும்மதில்; நவை-குற்றம்; மந்தமாருதம்-தென்றற்காற்று; அந்தரதுந்துபி-தேவவாத்தியம்; இயம்புதல்-ஒலித்தல்; அலமருதல்-சுழலுதல்; நனி- மிகுதி; திருப்பாமாலையில், ஆருகத பக்தி' என்ற தலைப்பின் கீழ்உள்ள பாடல்களுள் இஃது ஒன்றாகக் காணப்படுகின்றது.

45 சினை-கிளை; அறிவன் -அருகதேவன்.

46 வனம்-அழகு, நீர்; பங்கயம்-தாமரை; மயல்-மயக்கம்; பெயரா மேற்கதி-முத்திநிலை.

47 வானோர் தொழ வண்தாமரைத்
தேன்ஆர் மலர் மேல்வந்தருள்
ஆனா அருள்கூர் அறிவனைக்
கான்ஆர்—
மலர்கொண்டு ஏத்தி வணங்குநர்
பலர்புகழ் முத்தி பெறுகுவர் விரைந்தே.

48 கோழியும் கூவின; குக்கில் குரல்காட்டும்;
தாழியுள் நீலத் தடங்கணீர் போதுமினோ;
ஆழிசூழ் வையத்து அறிவன் அடிஏத்திக்
கூழை நனையக் குடைந்தும் குளிர்புனல்
ஊழியும் மன்னுவாம் என்றுஏல்ஓர் எம்பாவாய்!

## சிந்தடி வஞ்சிப்பா

49 கொடிவாலன, குருநிறத்தன, குறுந்தாளன,
வடிவால்எயிற்று அழல்உளையன, வள்உகிரன,
பணைஎருத்தின் இணைஅரிமான் அணைஏறித்
துணைஇல்லாத் துறவுநெறிக்கு இறைவன் ஆகி,
எயில்நடுவண் இனிதுஇருந்து எல்லோர்க்கும்
பயில்படுவினை பத்திமையிற் செப்பியோன்

---

47 கான்-மணம்.

48 குக்கில்-செம்போத்து; தாழியுள் நீலம்-தாழியுள் வளரும் குவளை; ஆதி-கடல்; கூழை-பெண்மயிர்; குடைதல்-நீராடுதல்; ஊழி-நெடுங் காலம்.

49 கொடிவாலன-கொடி போன்ற வாலைக் கொண்டன; குரு-ஒளி: குறுந்தாள் – குட்டையானகால்; வடி – கூர்மை; வால்-பெண்மை; எயிறு-பல்; அழல்உளை-நெருப்பு வண்ணமான பிடரிமயிர்; வள்– கூர்மை; உகிர்-நகம்; பணை எருத்து-பருத்த கழுத்து.

புணைஎனத்

திருஉறு திருந்துஅடி திசைதொழ
வெருவுறும் நாற்கதி: வீடு நனிஎளிதே.

உச்சந்த மலை

50 துடித்துஅடித்து இமிழ்தரு துளங்குவெள் அருவிநீர்
தொடுத்துஎடுத்த மாலைபோல் தொடர்ந்துதோன்றும் [தூய்மைசால்
அடுத்தடுத்து உரைபுக அசைவுஇல்சீர் உச்சந்தம்
மடுத்துஅடுத்து வைகலும் மறத்தல்இன்றி வாழ்த்துவாம்.

பழையாற்று மாதவன்

51 ஏறுஉயர் கொடியின் இருவிசும்பு அதிரும்
எறிமுரசு அதிர்கடல் தானை
வீறுஉயர் மணிக்கால் வெண்குடை ஓங்கு
தண்துறையின் பழையாற்று
மாறுஅடு படிவம் மதிஉறும் தருணம்
மாதவன் ஏதம்இல் பாதம்

---

இணை அரிமான்-இரண்டு சிங்கங்கள்; எயில்-பொன்னெயில் வட்டம்; புணை-தெப்பம், கப்பல்.

50 இமிழ்தருதல்-ஒலித்தல்; அருவி நீர் மாலைபோல் தோன்றும் உச்சந்தம் என்க: துளங்குதல்-அசைதல்; உரைபுக வாழ்த்துவாம் என இயையும். உச்சந்தம்-உச்சந்தமாலை; வடநாட்டில் சைனர்க்குச் சிறந்த தலமாகிய ஊர்ஜ் ஜயந்தகிரி. வைகலும்-தினமும்.

51 பழையாறு கும்பகோணத்துக்குப் பக்கத்துள்ளதோர் ஊர். இதனைச் சோழர்க்குரிய தலை நகரங்களுள் ஒன்றாகச் சாசனங்கள் தெரிவிக்கின்றன. ஏறு-இடபம், இடபக்கொடி பல்லவர்களுக்குரிய கொடியாகும். எனவே இவ்வூர் பல்லவர்க்குரியதாய் இருந்தது என்பது விளங்கும். அதிர்தல்-முழங்குதல்; தானை-சேனை;

விறுஅடு கதிகள் ஆழ்கதி வீழ
விளங்கிய விழுத்துணை யாமே.

52 முழங்கு களியானைமூரிக் கடற்படை முறிதார் மன்னர்
வழங்கும் இடமெல்லாம் தன்புகழே போக்கிய வைவேல்
[விண்ணன்
செழுந்தண்பூம் பழசையுள் சிறந்தநாளும் செய
எழுந்த சேதிகத்துள் இருந்த அண்ணல்அடி
விழுந்தண்பூ மலர்களால் வியந்துநாளும் தொழத்
தொடர்ந்து நின்றவெவ்வினை துறந்து போமால்அரோ.

தீபங்குடி

செயங்கொண்டாரை அபயன் (முதற் குலோத்துங்கன்) 'உமது ஊர்யாது? என்று கேட்டபோது சொன்ன கவி.

53 செய்யும் வினையும் இருள்உண் பதுவும்
தேனும் நறவும் ஊனும் களவும்
பொய்யும் கொலையும் மறமும் தவிரப்
போய்தீர் அறநூல் செய்தார் தமதுஊர்
கையும் முகமும் இதழும் விழியும்
காலும் நிறமும் போலும் கமலம்
கொய்யும் மடவார் கனிவாய் அதரம்
கோபம் கமழும் தீபங்குடியே.

---

மாறு-பகை; அடுதல்-அழித்தல்; ஏதம்-குற்றம்; விழுத்துணை-சிறந்த துணை, மேலான துணை.

52 மூரி-வலிமை; முறி-தளிர்; தார்-மாலை; விண்ணன்-சோழ சேனாபதி; பூ-அழகு; பழசை-பழையாறு; சேதிகம்-சைத்தியம், சைனப் பள்ளி; வியத்தல்-புகழ்தல்; வெவ்வினை-கொடிய வினைகள்; துறந்து போதல்-விடுபட்டுப்போதல்.

53 இருள்-மயக்கம்; நறவு-கள்; ஊன்-இறைச்சி; மறம்-பாபம்; அறநூல்-செய்தார்-அருகக்கடவுள்; இதழ்-உதடு; விழி-கண்; கமலம்-தாமரைமலர்; அதரம்-உதடு; கோலம்-இந்திரகோலம் என்னும் வண்ணத்துப்பூச்சி.

## சைநர்க்குச் சிறந்த மலைகள்

**54 பரங்குன்று ஒருவகம் பப்பாரம் பள்ளி**
**அருங்குன்றம் பேராந்தை யானை—இருங்குன்றம்**
**என்றுஎட்டு வெற்பும் எடுத்துஇயம்ப வல்லார்க்குச்**
**சென்று ஒட்டுமோ பிறவித் தீங்கு.**

---

இப்பாட்டு தீபங்குடிப் பத்து என்பதில் மூன்றாம் பாடலாக உள்ளது. தீபங்குடி என்ற பெயர் கொண்ட ஊர்கள் திருவாரூர்ப் பக்கத்தும், திண்டிவனம் பக்கத்தும் உள்ளன.

54 பரங்குன்று-திருப்பரங்குன்றம்; யானை-யானைமலை; இருங்குன்றம்-அழகர்மலை; இப்பாடலில் குறிக்கப்பெற்றுள்ள எட்டு மலைகளும் மதுரைச் சூழ்ந்துள்ளவை என்பர்.

(முதல் தொகுதி முற்றும்)